# காதல் வைபோகமே



ரமணிசந்திரன்

# காதல் வைபோகமே!

## 1

இளைஞர் பட்டாளம் அன்று நிகிலனின் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது, அந்தக் குடும்பங்களுடைய பெரியவர்களின் கூட்டமும், அங்கேதான் குழுமியிருந்தது!

அந்த மூன்று குடும்பங்களின் கடைசி வாண்டி விருந்து, கல்லூரிப் பெரியவர்கள் வரை, அவர்கள் அனைவருக்கும் விடுமுறை விட்டாயிற்று.

அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட, எல்லோருமாக ஒரு சினிமா, பீட்சா ஹட், ஐஸ்கிரீம் பார்லர் எல்லாவற்றுக்கும் படையெடுத்து முடித்துவிட்டு வந்திருந்தார்கள், சின்னவர்கள்!

உள்ளே வந்தால் நிகிலனுடைய தந்தை, வருத்தத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார்.

“நல்லவாய்ப்புதான்! மிக நல்லது என்றே சொல்லி விடலாம். நகரத்தின் மிகப் பெரிய தொழில் அதிபர்கள் வட்டாரத்தைப் பிடிக்க, அருமையான வாய்ப்பும்கூட! ஆனால், அதை ஒரு குறை சொல்ல முடியாதபடி செய்து முடிப்பதற்கு இப்போது நம்மால் முடியாதே!” என்றார் அவர்.

மூன்று குடும்பங்களுடைய பெரியவர்களைக் கண்டதுமே சின்னவர்களின் சளசளப்பு அடங்கி விட்டதால், சுந்தரகணபதியின் பேச்சு, எல்லோர் காதிலும் தெளிவாகவே விழுந்தது.

நல்ல வாய்ப்பைச் செய்ய முடியாதா?

ஏன் அப்படி என்ன பிரச்சினை?

"அதுதானே, மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது! இப்படி ஓர் அருமையான வாய்ப்பு இந்த நேரத்திலா கிடைக்க வேண்டும்? 'சுசி' குரூப் ரொம்ப பெரியது! மாப்பிள்ளை வீடு, அதில் ஒன்று! திருப்திகரமாகச் செய்து விட்டால், ஒன்று மாற்றி ஒன்று என்று, மாதா மாதம் இரண்டு மூன்று விழா வேலை வந்து கொண்டே இருக்கும்! பிறந்த நாளைக்கூட, ஆள் வைத்துப் பெரிதாகக் கொண்டாடுகிறவர்கள் அவர்கள்! பிசுநாரித்தனமும் கிடையாது. இந்த வேலைக்கு ஒரே ஒரு செட் போதும். ஆனால், அதற்குக்கூட வழியில்லாமல் இந்த அரசாங்க வேலையில் இப்படிச் சிக்கிக் கொண்டோமே!" என்று வருந்தினார், அடுத்தவர் செல்வகணபதி.

"சரி - விடுங்கள், அத்தான்! இப்போதைக்கு நமக்கு இந்த அரசாங்க வேலையை நல்லபடியாக முடிப்பதுதான் முக்கியம்! அதில் ஒரு சிறு குறை ஏற்பட்டாலும், அப்புறம் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நம்மை உலுக்கி எடுத்து விடுவார்கள். எனவே, அதைக் கவனத்துடன் பார்ப்போம்! கடவுள் அருள் இருந்தால், இதே போல இன்னொரு வாய்ப்பு கிடைக்காமலா போகும்? பார்க்கலாம்.! இப்போதைக்கு இவர்களிடம் இயலாது என்று சொல்லிவிடுங்கள்.! சீக்கிரமாகச் சொன்னால் வேறு யாரையாவது ஏற்பாடு செய்ய அவர்களுக்கு அவகாசம்



கிடைக்கும்," என்றார், அந்த இரு சகோதரர்களுடைய தங்கையை மணந்திருந்த சுதர்சனம்.!

அவருடைய இரு சகோதரிகளைத்தான், இரு கணபதிகளும் முறையே மணந்திருந்தார்கள். எனவே, ஒன்றுக்குள் ஒன்றாக, மூவருமாகச் சேர்ந்தே விழாக்களை நடத்தித் தரும் இந்தத் தொழிலை நடத்தி வந்தனர்.

எந்த வகை விழா ஆனாலும் அதற்குரிய பந்தல் அலங்காரத்தில் தொடங்கி, சாப்பாடு, வீடியோ, ஃபோட்டோ எல்லாம் அவர்களே ஏற்றுச் செய்வார்கள்!

கடைசியாக, மண்டபத்தைச் சுத்தம் செய்து, இடத்துப் பொறுப்பாளரிடம் ஒப்படைப்பது வரை ஏற்றுச் செய்தார்கள்.

விழாக்காரர்களுக்கும், எந்தவிதத் தொல்லையும் இராது போகவே, தொடங்கிய தொழில் நல்லபடியாக வளர்ச்சி பெற்று, வருமானத்தையும் அள்ளித் தந்தது.

பிள்ளைகளுக்கும், இந்தத் தொழிலில் உள்ள சவால்களும் அவைகளைப் பெரியவர்கள் ஏற்று நடத்தும் விதமும் பிடித்துப் போகவே, அவர்களும் இது தொடர்பான கல்வியையே தேர்ந்தெடுத்துப் பயின்றனர்.

எல்லோருக்கும் மூத்தவரான சுந்தர கணபதியுடைய மூத்த மகன் நிகிலன், 'கேட்டரிங்' பயின்று முடித்திருந்தான்.

அடுத்தவன் அகிலன் பொது நிர்வாகம் பயின்றான்.

கடைசிப் பெண் வசுந்தரா, ரொம்பச் சின்னப் பெண். இப்போதுதான் பிளஸ் டூ எழுதி இருந்தாள்.

செல்வகணபதியுடைய மகன் மனோகரன் நுண்கலைப் பட்டம் வாங்கிவிட்டு, பந்தல், மண்டப அலங்காரங்களில் ஈடுபாடு காட்டினான். மகள்

சாருமதிக்கு வீடியோ கவரேஜில் ஈடுபாடு, டிப்ளமா பெற்றுவிட்டாள்.

இந்தப் பிள்ளைகளுடைய அத்தை மகன் ரஞ்சன் தொழில் நிர்வாகம் பயின்றுவிட்டு, பொருட்களை வாங்குவதில் கூடமாட வேலை செய்தான்.

பொதுவாக, தேவைப்பட்டால் எல்லோருமே எல்லா வேலைகளையும் செய்தார்கள்!

அதனால், பெற்றோரின் தொழில் பிள்ளைகளுக்கும் பெருமளவு பழக்கப்பட்டுப் போயிருந்தது.

அவர்கள், எங்கே என்ன செய்கிறார்கள் என்பதும், இளைய தலைமுறையினர் எல்லாருக்கும் அத்துப்படியாகி இருந்தது.

குறிப்பாக அந்தத் தருணத்தில் அரசாங்கமே முன்னின்று நடத்தும், ஒரு கூட்டுத் திருமணத்தின் பொறுப்பு, அவர்களது 'சௌபாக்கியம்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

பெரிய அளவிலான கூட்டுத் திருமணம்! மொத்த ஜோடிகளின் எண்ணிக்கை ஆயிரம்!

மணமக்களுடைய உறவினரின் எண்ணிக்கையைப் போலப் பல மடங்கு அரசியல்வாதிகள், அவர்களுடைய தொண்டர்கள், ஐந்து மந்திரிகள் கலந்து கொள்கிறார்கள்.

பத்தாயிரம் பேருக்கு மேலாக, அறுசுவை உண்டி, வீடியோ கவரேஜ்! மண்டப அலங்காரங்கள்!

அமைச்சர்களின் முகம் வாடாமல் காப்பதற்காக, அவர்களுடைய ஆறு வீடியோக்காரர்களில் ஐந்து பேரை, மந்திரிகள் பக்கமே நிலைத்து நிற்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மிச்சமான ஒருவரிடம் திருமணச் சடங்குகளை எடுக்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தது.



அவரின் கீழ்ப் பலர் பணிபுரிந்தனர். போட்டோவுக்கும் முழு அளவில் வல்லுனர்கள் நின்றார்கள்.

அதேபோலச் சமையல் செட்டுகளும், முழுக்க வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அரசாங்கம் சம்பந்தப்பட்ட விழா என்பதால், மொத்தப் பணியாளர்களையும் வைத்துக் கொண்டு, பெரியவர்கள் மூவரும் அதிலேயே கவனம் செலுத்தி அலைந்து திரிந்து கொண்டிருந்தனர்.

இன்னொன்றை ஏற்பதானால் ஆள் பலம் இல்லை.

அதுதான், இப்போதைய பிரச்சினை என்பதைச் சின்னவர்களால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால், அதற்காக இப்படியொரு நல்ல வாய்ப்பை நழுவ விடலாமா?

"ஆமாம், சுதர்சன் சொல்வதுதான் சரி. கூப்பிட்டுச் சொல்லிவிடுவோம். நம்நிலைமையையும், இப்போதே அதைத் தெரிவிக்கும் காரணத்தையும் சொல்லிவிட்டால், நம்மைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் உண்டாகத்தானே செய்யும். உடனடியாக இல்லை என்றாலும், இதுபோல இன்னோர் அவசியம் நேரும்போது, நம் நினைவு வராமல் போகாது. கடவுள் அருளால் வரும். அவர்கள் ஃபோன் எண் என்ன சொன்னீர்கள், மாப்பிள்ளை?" என்று வினவியபடி, தன் செல்ஃபோனைக் கையில் எடுத்தார் சுந்தரகணபதி.

அவசரமாகத் தங்களுக்குள் சிறுரகசியம் பேசிவிட்டு, "கொஞ்சம் பொறுங்கள், பெரியப்பா!" என்றாள் சாருமதி. ஒன்றுவிட்ட சகோதரர்களை ஒரு தரம் நோட்டம் விட்டுவிட்டு, "விஷயம் என்னவென்று எங்களுக்குக் கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்களேன், பெரியப்பா!" என்று கெஞ்சுதலாகக் கேட்டாள்.

"சற்றுப்பொறு. ஒரு முக்கியமான ஃபோன் கால் ஒன்றைப் பண்ணிவிட்டு வருகிறேன். பிறகு எல்லாம் சொல்லுகிறேன்," என்றார் பெரியவர்.

"எங்களிடம் சொல்லிவிட்டு, அதன் பின் நீங்கள் டெலிஃபோனில் பேசினால் நல்லது என்றுதான், சாரு குறுக்கிட்டதே!" என்றான் எல்லாப் பிள்ளைகளிலும் பெரியவன் நிகிலன்.

"நிலைமை புரியாமல் என்னடா உளறுகிறீர்கள்?" என்று எரிச்சல்பட்டார் அவனுடைய தந்தை.

"புரியாமல் என்ன? நான் சொல்வது சரிதானா, பாருங்கள். நம் ஆட்கள் எல்லாரும் அந்தக் கூட்டுத் திருமண வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவசரத் துக்கு அமர்த்தக்கூடிய வெளி ஆட்களும் அங்கேயேதான். இந்த நேரம் பார்த்து, நம் எதிர்காலத்தை நன்கு உயர்த்தக்கூடிய வாய்ப்பு ஒன்று வந்திருக்கிறது. ஆள் வசதி இல்லாத காரணத்தால், அதை வேண்டாம் என்று விட்டுவிடப் போகிறீர்கள், சரியா?"

"ரொம்ப சரி. இதில் உங்களிடம் பேசுவதால், வீண் தாமதம் தவிர, வேறு என்ன மாறிவிடப் போகிறது? சீக்கிரமாகப் பதில் சொன்னால், அவர்கள் வேறு யாரையாவது ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும் அல்லவா? அதனால்..."

"வேறு யாரையும் ஏற்பாடு செய்ய வேண்டாம் என்றுதான்..." என்று நிகிலன்கூற, "எரிச்சல் மூட்டாதே, நிகில்! ஒரு நல்ல வாய்ப்பு போகிறதே என்று, சும்மாவே வெறுப்பில் இருக்கிறோம்!" என்றார் செல்வகணபதி.

"வாய்ப்பு கை நழுவாமல் இருக்க, ஒரு யோசனை சொல்லலாம் என்று பார்த்தால் யாருமே வாயைத் திறக்க



விடமாட்டேன் என்கிறீர்களே! இந்த அழகில், எங்கள் வீட்டுப் பெரியவர்கள், பிள்ளைகளின் விருப்பத்தை மதிக்கிறவர்கள் என்று என் நண்பர்களிடம், பயங்கரமாகப் பெருமை வேறு அடித்துக் கொள்வேன்!" என்று, உரக்கச் சொல்லி, உதட்டைப் பிதுக்கினான் சுதர்சனத்துடைய அருமைப் புத்திரன் ரஞ்சன்.

ஒரே தங்கையுடைய ஒரே மகனிடம், மாமாக்களுக்குச் சற்று அதிக இளக்கம் உண்டு.

எனவே, மற்ற இருவரையும் பார்த்துவிட்டு, "இவர்கள் ஏதோ திட்டம் வைத்திருப்பதாகத் தெரிகிறது, அண்ணா. என்ன என்றுதான் கேட்டுப் பார்ப்போம்!" என்றார் செல்வகணபதி.

"சரிப்பா. சொல்லுங்கள். ஆனால், சும்மா வளவளக் காமல், சொல்வதைச் சுருக்கமாக வேகமாகச் சொல் லுங்கள். இந்தப் பார்ட்டிக்குப் பதில் சொல்லிவிட்டு, நாங்கள் அந்தத் திருமண மண்டபத்துக்குச் செல்ல வேண்டும். வீணாக்க, ஒரு வினாடி காலம்கூடக் கிடையாது!" என்றார், எல்லாருக்கும் பெரியவர் - சற்று இறுகிய குரலில்.

"சுருக்கமாக, வேகமாகவா? அப்படியானால், சாருதான் லாயக்கு! சாரு, தொடங்கு. ஒன், டூ, த்ரீ, ஸ்டார்ட்!" என்றான் ரஞ்சன்.

அவளும் தொடங்கினாள்.

"மூன்று அப்பாக்களும் சற்று உடன்பாடாக, இதை யோசித்து ஏற்க வேண்டும். நிகில் அண்ணன் கேட்டரிங் பட்டம் வாங்கியவன். அவன் கூப்பிட்டால், அவனுடைய நண்பர்கள் உதவிக்கு வருவார்கள். மனோ பந்தல் அலங்காரம், மேடை அலங்காரத்தில் நிபுணன். அவனுக்கு

உதவிக்கு, நீங்களே ஆள் அனுப்பலாம். எல்லாவற்றையும் வாங்கிக் கொள்ள, மேற்பார்வை பார்க்க, கணக்கிட, அகிலும், ரஞ்சனும் இருக்கிறார்கள். வீடியோ, போட்டோ என் பொறுப்பு. கூப்பிட்டால், என்கூடப் படித்தவர்களில் ஒரு பட்டாளமே வரும். இப்படி, எல்லா வேலைகளையும் திறம்படச் செய்து முடிப்பதற்கு நாங்கள் இருக்கும்போது, இந்த நல்ல வாய்ப்பை நீங்கள் ஏன் கைவிட வேண்டும்? செய்கிறோம் என்று, ஒப்பந்தம் போட்டு விடுங்கள்!" தெளிவாகக் கூறி முடித்தாள் சாருமதி.

ஆனால், பெரியவர்கள் மூவருமே உதட்டைப் பிதுக்கினார்கள்.

"ச்சு.! நடக்கிற காரியம் பேசுங்க!" என்று விட்டு, மீண்டும் செல்லைக் கையில் எடுத்தார் சுந்தரகணபதி.

"உடன்பாடாக யோசியுங்கள் என்றால், யோசித்தே பாராமல், மறுத்தால் எப்படி, பெரியப்பா?" என்று, அவரை நேராகப் பார்த்து, ஆத்திரத்துடன் கேட்டாள் பெண்.

"பின்னே என்ன, சாரு? நீங்கள் சின்னப் பிள்ளைகள். நீங்கள் எல்லாம் சேர்ந்து, இந்த மாதிரிப் பெரிய இடத்து வேலையைச் செய்வதாகச் சொன்னால், அது நடக்கிற காரியமா? இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? பேசாமல் போங்கள்," என்றார், அவளுடைய தந்தை செல்வகணபதி.

"சொன்னேனே, சாரு. இவர்கள் நம்மை ஒரு பொருட்டாக நினைக்கவே மாட்டார்கள் என்று, நான் சொல்லவில்லை? நம்மைப் பெற்று வளர்த்தவர்களுக்கே நம் மேல் நம்பிக்கை இல்லை. வாருங்கள் போகலாம்!" என்று தம்பி தங்கையரை அழைத்தான் நிகிலன்.



"அதெப்படி அண்ணா? இந்தத் தொழிலில் இணைய வேண்டும் என்று நாம் படித்த படிப்பு எல்லாம் வீண் என்றா சொல்லுகிறாய்? அத்தோடு அவ்வப்போது இந்த அப்பாக்களோடு சேர்ந்து நாம் வேலை பார்த்தது, அவர்களே நம்மைப் பாராட்டியது, எல்லாம் எப்படிப் பொய்யாகும்? ஏதோ, இந்தப் பரபரப்பில் கொஞ்சம் மறதி. இப்போது நினைவு வருகிறதுதானே பெரியப்பா? போனமாதம் சமையல்காரத் தவசிக்குத் திடீரென்று காய்ச்சல் வந்ததால், அந்த வளைகாப்பில் நிகில் அண்ணன் பொறுப்பேற்றுச் செய்து கொடுக்கவில்லை? அப்புறம், அந்த வளைகாப்பில் வீடியோ முழுதும் நான்தானே எடுத்தேன். அதற்கு முன், ரஞ்சனும் நானும் மாலை வாங்கப்போய், கடைக்காரன் ஏமாற்றப் பார்த்ததைக் கண்டுபிடித்து, நல்லதாக வாங்கி வந்தோமே. இதில் எந்த வேலை சோடை போயிற்று, சொல்லுங்கள்? நீங்களே பாராட்டிப் பேசியது எல்லாமே மறந்துவிட்டதா?"

வாதாடுவது போல நீளமாகப் பேசிவிட்டு, அவள் சிறு செல்லச் சிரிப்புடன், "சொல்லுங்க பெரியப்பா, நீங்கள் எங்களிடம் நம்பிக்கை வைக்காவிட்டால், வேறு யார் எங்களை நம்புவார்கள்? அப்புறம் எங்கள் எதிர்காலம் என்ன ஆகுமாம்?" என்று சிணுங்கினாள்.

கடைசியாக, "ப்ளீஸ், எங்களை நம்புங்கள் அப்பாக் களே!" என்று அவள் நாடகம் போல, இரு கையேந்திக் கெஞ்சவும், எல்லோருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

சின்னவர்கள் விரும்பிய மனநிலையும் இதுதானே?

ஆளாளுக்கு, 'நான் இதைச் செய்வேன்!', 'நான் அதைச் செய்வேன்!' எனவும், பெரியவர்கள் ஒருவாறு இளகத் தொடங்கினர்.

சூழ்நிலை சாதகமாகிக் கொண்டிருக்கிறது என்று ஒருவரை ஒருவர் புன்னகையோடு பார்த்துக் கொண்ட போது, "மற்றதெல்லாம் சரிதான். ஆனால், வீடியோ எடுப்பது பெண் என்றால், ஒத்துக் கொள்வது கடினம் ஆயிற்றே!" என்று புதுப் பூதம் கிளப்பினார் செல்வகணபதி.

பின்னே எதற்கு இதைப் படிக்கிறேன் என்றபோது, சரி சொன்னாராம் என்று உள்ளூர எரிச்சல்பட்டாள் சாருமதி. ஆனால், இந்த ஆட்சேபணையை எதிர்பார்த்து அதற்குரிய பதிலையும் அவள் யோசித்து வைத்திருந்ததால், எரிச்சலை வெளிக்காட்டாமல், "அப்பா, விழா நடத்துவது பெண் வீடு. பெண்ணின் அலங்காரம் முடிந்ததுமே அதைப் பதிவு செய்ய எல்லோருமே அலங்காரம் செய்து கொண்டு இருப்பார்கள். அரைகுறை அலங்காரத்தில் இருக்கும்போது, ஆண்கள் போய், 'ரெடியா? ரெடியா?' என்று கேட்டால், அப்போது கதவைத் திறந்து பதில் சொல்லக்கூடச் சங்கடமாக இருக்கும். பெண் வீடியோ எடுத்தால், அங்கேயே உட்கார்ந்து இருந்தால்கூட, ஒன்றுமே தோன்றாது. இந்தப் பாயின்டை எடுத்துச் சொன்னால், பெண் வீட்டார் கட்டாயம் சம்மதிப்பார்கள். தேவைப்பட்டால் என் டிப்ளமா காப்பியையே காட்டி விடலாம்,!" என்று விளக்கினாள்.

அவள் தலையைப் பிடித்து லேசாக ஆட்டி, "இந்த வம்பியிடம் வாதாடி, யாராலும் மீள முடியுமா? எதற்கும், அவர்களிடம் கேட்டுப் பார்ப்போம்," என்றுவிட்டு, மீண்டும் செல்லை எடுத்தார் சுந்தரகணபதி.

"ஆஹ்ஹா..." என்று துள்ளிக் குதித்தது இளைஞர் பட்டாளம்.



## ௨

கல்யாணப் பெண்ணுடைய தகப்பனார் சிதம்பரம் தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறை என்கிற நிலையில் இருந்தார்.

பையன் வீடு, 'சசி இண்டஸ்ட்ரீஸ்' என்று, ஒரு பெரிய தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தது. மூன்று தலைமுறையாக வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வருகிறவர்கள். மூன்றாவது தலைமுறை எனும்போது, பல பாகப் பிரிவினைகள் நடந்திருப்பது இயற்கை. சொத்தையோ, பணத்தையோ, தொழிலையோ பிரித்து, அதே தொழிலைத் தொடர்ந்தோ, புதியதாக ஒன்றைத் தொடங்கியோ, தொடர்ந்து தொழில் நடத்தினார்கள். ஆனால் யாரும் சோடை போனதில்லை.

ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுப்பதும் இல்லை.

ஒரு சிலர் உலக மார்க்கெட்டையே பிடித்திருந்தார்கள்.

அத்தோடு, எல்லாருடைய எல்லாத் தொழிலிலும், எல்லோருக்கும் ஓரளவேனும் பங்குகள் இருக்கும்.

சிதம்பரமும் வசதியானவரே என்றாலும், சங்கிலித் தொடராக நகரின் மையப் பகுதிகளில், பெரிய அளவில் துணிக் கடைகள் வைத்திருந்தாலும், 'சசி' அளவுக்குக் கிட்டேகூட வர முடியாது. அத்தோடு அது பரம்பரைப் பணம் வேறு.

இந்த நிலையில்தான், ஒரு விழாவில் காயத்ரியைப் பார்த்து, 'சசி' குரூப் பையன் சிவானந்தன் ஆசைப் பட்டான். அவளும்தான்.

பையன் விருப்பத்தை வீட்டில் சொல்ல, அவர்களும் மறுக்கவில்லை.

பையன் மனமோ, பிள்ளை வீட்டார் மனமோ மாறிவிட அவகாசம் கொடாமல், உடனடியாக நிச்சய தார்த்தத்தை வைத்துவிட்டார், பெண்ணைப் பெற்றவர்.

உறவினர் வீட்டுத் திருமண மண்டபம் இலகுவாகக் கிடைத்தது. ஆனால் மற்றவற்றுக்குத்தான் திண்டாடிப் போனார், பாவம்.

ஒவ்வொருவராகச் சாப்பாடு, போட்டோ, பூ என்று அலைய அவகாசமோ, ஆள் வசதியோ சரிப்படாது போகவே, முழு நிகழ்ச்சியையும் நல்லபடியாக நடத்தித் தருகிறவர்கள் என்று பெயர் வாங்கியிருந்த, 'சௌபாக் கியத்'திடம் வந்து நின்றார்.

பெரிய இடமான பையன் வீட்டார் குறை காண முடியாத அளவுக்கு நிச்சயதார்த்தத்தைச் சிறப்பாக நடத்திவிட வேண்டும் என்பது, அவருக்கு. கல்யாணம் ஆனபிறகு, மகள் வீட்டில் தன்னை மதிக்க வேண்டும் அல்லவா?

முடிகிறதா என்று யோசித்துச் சொல்வதாகச் சுந்தர கணபதி சொன்னது. ஒரு கலக்கம்.

சாப்பாடாவது, செலவைப் பாராமல் ஏதாவது பெரிய ஹோட்டலில் ஏற்பாடு செய்துவிடலாம். ஆனால் மற்றது?

சுந்தரகணபதி எல்லாம் பார்ப்பாரே!

அவர் நேராக வரவில்லை என்றாலும், சொந்தப் பிள்ளைகளையே அனுப்புகிறார் என்ற அளவில், அவர் - சிதம்பரம் திருப்தி அடைய நேர்ந்தது.



ஜீன்சும், டீ ஷர்ட்டுமாக, விழா பற்றிப் பேச்சு வார்த்தை நடத்த வந்த இளைய தலைமுறையின் தோற்றம், அவரது வயிற்றைச் சற்றுக் கலக்கியபோதும், பேச்சு தொடங்கியதும் அது மறைந்து போயிற்று.

தன் தேவைகளை அவர் சொல்ல, அததற்கு எத்தனை ஆட்கள், எவ்வளவு பொருட்கள், எவ்வளவு பணம் ஆகும் என்று, சம்பந்தப்பட்டவர்கள் தெளிவாகக் கணக்கிட, 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்று, உள்ளூரத் திருப்தியுடன், அவர்கள் கேட்ட முன்பணத்தை எடுத்துக் கொடுத்தார் அவர்.

நிச்சயத்தன்று வெகு முன்னதாகவே வந்து, வீட்டுப் பெண்களிடம் சாருமதி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். நடுத்தர உயரத்துக்குக் கொஞ்சம் குறைவாக, பூ மாதிரி இருந்த மணப்பெண்ணை, அவளுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

இவ்வளவு அழகாக இருக்கும் பெண்ணுக்கு, மாப்பிள்ளையும் பொருத்தமாக அமைய வேண்டும் என்று இருந்தது அவளுக்கு.

பணம் இருக்கிறது என்று ஏதாவது வத்தல், தொத் தலோ அல்லது குண்டுப் பெருச்சாளியோ, மணமகனாக வந்து நின்றால் எப்படிக் கஷ்டமாக இருக்கும் என்று எண்ணியவள் சட்டென மனதை அடக்கிக் கொண்டு வேலையில் ஈடுபட்டாள்.

மாப்பிள்ளை, பெண்ணின் ஜோடிப் பொருத்தம் பற்றி ஆராய்வது அவளது வேலையில்லையே!

இந்த நிச்சயதார்த்த விழாவின் ஒவ்வொரு கட்டத்தையும், நயம்படப் படம்பிடிப்பது மட்டுமே அவள் பொறுப்பு. அதைக் குறை கூற முடியாதபடி அவள் செய்தால் போதும்.

கூடவே அழைத்து வந்திருந்த இரண்டு புகைப்படம் எடுப்பவர்கள், வீடியோ உதவி, மூவரிடமும் எப்போது, என்ன கோணத்தில், யாரை எடுப்பது என்று சொல்லி விட்டு, மீண்டும் பெண்ணின் அலங்கார அறைக்குள் சென்றாள்.

மணப் பெண்ணின் அலங்காரம் முடிந்திருக்கவே, ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி, அவளைப் பல கோணங்களில், வீடியோவிலும் காமிராவிலுமாகப் படமெடுத்தாள்.

காயத்ரியின் முகத்தில் இருந்த பூரிப்பு, திருமணத்தில் அவளுக்கு இருந்த ஆர்வத்தைக் காட்டவே, சாருவுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

எப்படியும், மணமகன் மோசமாக இருக்கமாட்டான்.

மணப் பெண் காயத்ரியுடன் தங்கைகள், மற்ற நெருங்கின உறவுப் பெண்களைத் தனித்தனியாகவும், காயத்ரியுடன் சேர்ந்தும், பலவாறு படம் எடுத்து முடிக்கும்போது, 'மாப்பிள்ளை வீட்டார் வந்து கொண்டிருக்கிறார்கள்!' என்ற குரல் கேட்கவும் சாருமதி வாயிலுக்கு விரைந்தாள்.

அதிர் வேட்டுச் சத்தம் வெகு அருகில் கேட்க, தொடர்ந்து நாதஸ்வரம் கம்பீரமாக ஒலி எழுப்பியது. இரண்டுமே அகிலன் பொறுப்பு.

நிச்சயதார்த்தத்துக்கே இவையெல்லாம் வேண்டும் என்று சிதம்பரம் சொல்லி விட்டாராம்.

மண்டப வாயிலுக்கு வந்துவிட்ட மணமகனைக் காமிராவின் கண்வழியே ஆவலுடன் பார்த்த சாருவுக்குத் திருப்தி உண்டாயிற்று.



மணமகன் காயத்ரிக்கு ஏற்றவன்தான். உயரமும் இல்லாமல் குள்ளமும் இல்லாமல் தெளிவான முக அமைப்புடன், அவளுக்கு ரொம்பவே பொருத்தம்தான். அவன் முகத்திலும், அதே பூரிப்பு. மனம் ஒத்த மணம்தான்.

தன்னையறியாமல் முறுவலித்தபடியே, சிதம்பரம் தன் வருங்கால மருமகனுக்கு மாலையோடு, கனமான தங்கச் சங்கிலி அணிவித்து வரவேற்பதையும், அவர் மகன் வைர மோதிரம் போடுவதையும், சாருமதி கவனத்துடன் படம் பிடிக்கலானாள்.

"இதெல்லாம் கல்யாணத்தின்போது, மாப்பிள்ளை அழைப்புக்குத்தான் செய்வது. ஆனால், நமக்கும் 'இருக் கிறது' என்று காட்ட வேண்டும் அல்லவா? அதற்காகத் தான் செய்கிறேன். திருமணத்தின்போது வேண்டுமானால் இன்னொரு செட் போட்டு விடுகிறேன் என்று காயாக்குட்டியிடம் சொல்லிவிட்டேன். எல்லாவற்றையும் நன்றாகப் படம் பிடித்துவிடு, அம்மா!" என்று சிதம்பரம் ஏற்கெனவே சொல்லியிருந்தார்.

அவர் சொன்னதைச் செய்து முடித்தவள், கூடவே, மணப்பெண் காயத்ரியைப் படமெடுத்த கோணங்கள் நினைவு வர, அதற்குப் பொருத்தமாக மணமகனையும் நிறைய எடுத்தாள்.

ஃபோட்டோவும் அதுபோல எடுக்கச் சொன்னாள்.

எல்லாமே மனதுக்குத் திருப்தியாக இருந்த போதும், மாப்பிள்ளைத் தோழனாக வந்தவன்தான் குறுக்கே குறுக்கே வந்து, சாருமதிக்குச் சற்று எரிச்சல் மூட்டினான்.

நெடுநெடுவென்று, தென்னை மரம் போலச் சற்று அதிக உயரம் அந்த மாப்பிள்ளைத்தோழன்! மணமகனை வழிகாட்டி அழைத்துச் செல்கிறவனைப் போல, முன்னே

முன்னே வந்து, சாருமதியின் கேமிராக் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தான்.

இவள், அவனைத் தவிர்த்து, மாப்பிள்ளையை எடுப்பதற்காக இப்புறமும், அப்புறமுமாக வளைந்தும், நகர்ந்தும் படம் எடுக்க வேண்டியிருந்தது. தோளில் மாட்டியிருந்த காமிராவையும் சரியான கோணத்தில் தூக்கியபடி.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு, அவன் தோளில் தட்டிக் கூப்பிட்டு, "சார், இன்னையக் கதாநாயகன் மணமகன். அவரை மறைக்காமல் சற்று ஒதுங்கிக் கொண்டால் நன்றாக இருக்கும்!" என்றாள், பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில் அவள்.

நிமிர்ந்துகூடப் பாராமல், "ஓ, சாரி!" என்று அவன் உடனே நகர்ந்து கொள்ள, சாருமதிக்குப் படப்பிடிப்பு இலகுவாயிற்று.

கூடக் கொஞ்சம் இதமாகச் சொல்லியிருக்கலாமோ என்றும் தோன்றியது. ஆனால், அந்த எண்ணம் உடனே மறைய, வேலையில் மூழ்கினாள்.

மாப்பிள்ளை வீட்டார் மண்டபத்தின் உள்ளே செல்லத் தொடங்கவும், சிதம்பரம் அருகே வந்து, அவளைக் கூப்பிட்டார்.

"என்ன சார்?" என்று காசெட்டை மாற்றியவாறே, வினவினாள் அவள்.

"மாப்பிள்ளை பக்கத்தில் நெட்டையாக ஒருவர் நிற்கிறாரே, அவரைக் கொஞ்சம் அதிகம் எடும்மா. என் பையன்... அதுதான், மாப்பிள்ளைக்கு மோதிரம் போட்டானே, அவன்தான் என் பிள்ளை. அவனை அவரோடு சேர்த்து எடுக்க முடியுமானால், ரொம்ப



நல்லது. என் வீட்டு ஆட்கள், என் மாப்பிள்ளை என்று, எங்களில் யாராவதுகூட நின்றால் கட்டாயம் எடு.! ஒருவரும் இல்லாவிட்டாலும், தனியாகவேனும் அவரைப் படம் பிடிம்மா. மாப்பிள்ளை வீட்டில், ரொம்பவும் முக்கியமான மனிதர். நகரத்திலும் அப்படித்தான். நம் காயத்ரிக்கு ஒரு வகையில் மைத்துனன் முறையாக வேண்டும். மனிதரை நம்மவராகக் காட்டிக் கொள்வது, நமக்கு எல்லா வகையிலும் நல்லது.!" என்றார் அவர்.

பணம் கொடுக்கிற மனிதர், அவர் கேட்கிற மாதிரி எடுத்துக் கொடுக்க வேண்டியதுதானே! திருமண நிகழ்ச்சிகளைக் கெடுக்காத அளவில், அந்த ஆளைப் படம் பிடிப்பதில் அவளுக்குத் தடை ஒன்றும் இல்லை.

ஆனால், அந்த நெடியவனைக் காமிராவின் கண்ணைக் கொண்டு கவனித்துப் பார்க்கையில், சாருவுக்கு ஏதோ உறுத்தத் தொடங்கியது.

இவனைச் சாருமதி பார்த்திருக்கிறாள்.

எங்கே? எப்போது?...

கை வேலையை நிறுத்தாமலே, மூளையைக் கசக்கி யோசித்தாள் அவள்.

தொடர்ந்து, மணமகன் வீட்டுப் பெண்கள், மணையில் அமர்ந்திருந்த காயத்ரியின் முன் சீர்த் தட்டுகளை அடுக்கினார்கள். சேலைத் தட்டை அவளிடம் கொடுத்து, அணிந்து வரச் சொன்னார்கள்.

மின்னல் விரைவில் வேகமாகச் சேலையை மாற்றி, ஒட்டியாணம், வங்கி போன்றவற்றை மீண்டும் அணிந்து வந்த மணமகளைப் பெருமையுடன் பார்த்து, முறுவலித்தான், அவளுடைய வருங்காலக் கணவன்.

மூத்த பெண்கள், மணப் பெண்ணுக்கு நகைகள் அணிவித்து, நலுங்கு சுற்றுவதையெல்லாம் வரிசைக் கிரமமாகப் படம் பிடித்த போதெல்லாம், சாருமதிக்கு மூளைப் பகுதியில் ஓர் ஓரத்தில் இதே சிந்தனை நடந்து கொண்டேயிருந்தது.

அந்த நெட்டையான மாப்பிள்ளைத் தோழனைச் சாரு எங்கே பார்த்திருந்தாள்? சடங்குகள் எல்லாம் ஒரு புறம் நடந்துகொண்டிருந்தபோதே, சாப்பிட அழைத்தார்கள்.

"அப்பாடி, இனிக் கழற்றலாம் அல்லவா? இன்றே கல்யாணம் மாதிரி என்ன தடபுடல்செய்துவிட்டார்கள் பார், சசி!" என்றபடி மாலையைக் கழற்றிக் கையால்தூக்கி, யாரிடமோ கொடுக்க நீட்டினான் மாப்பிள்ளைப் பையன்.

சட்டெனச் சாருமதிக்கு அந்த நெடிய திருமாலை எங்கே பார்த்தோம் என்று நினைவு வந்துவிட்டது.

"இல்லையில்லை, மாலையை அணிந்து கொள்ளுங்கள்! அப்புறம் நீங்கள் அக்காவுக்கு மோதிரம் போட்ட பிறகு கழற்றலாம் என்று அப்பா சொன்னார்!" என்று, சிதம்பரத்துடைய மகன் வந்து, மாலையை வாங்கித் திரும்பவும் மணமகனுக்கு அணிவித்தது அவளது கண்ணிலும் காதிலும் பட்டதே தவிரக் கருத்தில் பதிய வில்லை.

பதிலாகச் சில மாதங்களுக்கு முன்னதாக, அவனைப் பார்த்த நிகழ்ச்சி அவள் மனதில் படமாக ஓடியது.

தேவைப்படும்போது, பெரியவர்களுக்கு மூன்று குடும்பத்து இளைஞர்களும் உதவி செய்வார்கள்.

அன்றும், அது போலத்தான். பொதுவாகத் திருமணம் முடிந்து மாலையை மாற்றும்போது, மாற்று வதற்கு இலகுவாக இருப்பதற்காகச் சற்று மெல்லிய



மாலைகளைப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் அந்தத் திருமண வீட்டாருக்கு, அந்த மாலைகள் பிடிக்க வில்லை. கஞ்சத்தனமாகப் பையன் வீட்டார் நினைத்து விடக் கூடாதே என்று, பெண்ணுடைய பெற்றோர் கவலைப்பட்டனர். புது மாலைகளை வாங்கி வர, ரஞ்சனும், சாருவும்தான் போனார்கள்.

பூக்கடையில் ஒரு பிரச்சினை.

விற்காமல் தங்கிவிட்ட பழைய மாலை ஒன்றை, கொஞ்சம் திரிசமன் வேலை செய்து, இவர்கள் தலையில் கட்டப் பார்த்தார் கடைக்காரர்.

பழைய பூ என்று அவர்கள் ஒதுக்கவும், "பாருங்கப்பா, ரோஜாவும். சம்பங்கியும், வாடா மல்லியுமாக அருமையான மாலை! என்ன, இரண்டு நேற்றையப் பூ! உங்களுக்கு முக்கால் விலைக்குத் தருகிறேன். நீங்கள் கல்யாண வீட்டில் முழு விலை வாங்கி விடலாம். உங்களுக்கும் லாபம், எனக்கும் நல்லது.! இந்த விலைக்கு வாங்கினதாகச் சொன்னால், ஒங்க அப்பாருங்க ரொம்ப சந்தோஷப் படுவாங்க. பாருங்கள், முழுக்க ஜரிகை நூல் சுற்றி, முன்புறத்தில் ஜிகினாப் பூ வேலை செய்து வைத்திருப்பதால், பழைய பூ என்று யாருக்கும் தெரியாது. அதனாலே, இதையே வாங்குங்க!" என்று மாலையைத் தூக்கிக் காட்டினார், பழக்கமான அந்தக் கடைக்காரர்.

மாலையின் முன்புறத் தோற்றம் அழகாகத்தான் இருந்தது. ஆனால், "எங்கே பார்க்கலாம்?" என்று மாலையைக் கையில் வாங்கினாள் சாருமதி.

அவர் சொன்னதுபோலவே, உள்ளிருந்த வாடல் பூவை மறைத்து முன்பக்கம் வெகு அழகாகவே வேலைப் பாடு செய்யப்பட்டிருந்தது.

சற்றுயோசித்து, மாலையைத் திருப்பி, மணமகனுக்கு மாலையிடப் போகும் மணப் பெண்ணின் பாவனையில், மாலையைக் கையில் தூக்கிப் பிடித்துப் பார்த்தாள்.

"ஊகூம். எனக்குத் தெரிகிறதே! அந்தப் பெண் ணுக்கும் தெரியுமல்லவா? ஏன், மறுமுறை மாற்றும்போது மாப்பிள்ளைக்கும்கூடத் தெரிந்த போகுமே! எல்லாரும் நம்மை என்னவாக எண்ணுவார்கள்?! இது வேண்டாம். வேறு புதுப் பூ மாலையைக் கொடுங்கள்!" என்றபடி, மீண்டும் மாலையைத் தூக்கிப் பார்த்தாள்.

"சற்று ஒதுங்கி நின்று, இந்த ஒத்திகை பார்க்கலாமே!" என்று, ஒரு கடுமையான குரல் கூறவும், திடுக்கிட்டு, நிமிர்ந்து பார்த்தாள் சாருமதி.

அப்போதுதான், அந்த நெடிய திருமாலைச் சாருமதி, முதல் முதலாகப் பார்த்தது.

குரலுக்கேற்றபடி, முகத்தையும் கல் மாதிரி வைத்துக் கொண்டு சுளித்த புருவத்துடன், கடுவன் பூனையைப் போலக் கடுகடுத்த முகத்துடன் அவன் நின்றது அப்படியே அவளுக்கு நினைவு வந்தது.

## 3

அறியாத ஒருவன், இப்படிக் கடுப்புடன் பேசுவது, சாருமதிக்கு அதுதான் முதல் தடவை.

பொறுப்புமிகுதியால், மற்றவர்களிடம் சட்டென்று எரிந்து விழும் பெரியப்பாகூட, அவளிடம் பிரியமாகத் தான் பேசுவார்.



புதியவர்களை, அவளது மலர்ந்த முகம் வசீகரித்துத் தான் பழக்கம்.

ஆனால், இவன் எடுத்த எடுப்பில் எரிந்து விழுகிறானே.

அப்படி அவள் என்ன தப்பு செய்துவிட்டாள்?

யோசிக்கும்போதே, தான் வழியில் நிற்பதைச் சாரு மதி உணர்ந்தாள். உடனேயே, "சாரி...!" என்றபடி, அவசர மாக அவனது வழியை விட்டு விலகிக் கொண்டாள்.

அவன் பேசாமல் தன் வழியே போயிருக்கலாம். ஆனால், "நடுவழியில் நின்று நாடகம் போடாதிருந்தால், போகிற வருகிற மனிதர்களுக்குத் தொல்லையாக இராது!" என்று ஓர் அம்பை எய்துவிட்டுத்தான் போனான்.

இவன்தான் அவன், அதே கடுவன் பூனை.

அன்று அவன் பேசியது சாருவை ரொம்பவே உறுத்திவிட்டது. மாலை வாங்குவதற்காக அவளோடுகூட வந்த ரஞ்சனிடம் புலம்பித் தீர்த்துவிட்டாள்.

"முன்னே பின்னே தெரியாத யாரோ ஒருத்தன். என்னிடம் எவ்வளவு கடுமையாகப் பேசினான். என்னவோ, வேண்டும் என்று, அவனது வழியை மறைத்துக் கொண்டு நின்ற மாதிரியல்லவா, பேசினான். தொல்லை என்றானே. அவனுக்குத் தொல்லை கொடுப்பதுதான் எனக்கு வாழ்வின் லட்சியமா? கொழுப்புதானே! அதற்காக, நீ ஏன் அவனைத் திட்டவில்லை?" என்று அத்தை மகனைச் சாடினாள்.

"திட்டுவதா? அந்த ஆளையா? ஐயோ! அவனைப் பார்த்தால் மல்யுத்தம் தெரிந்தவன் போலத் தோன்றியதே! அதற்கு மேல், அவனிடம் வாயைத் திறப்பேனா? என்னை என்னவென்று நினைத்தாய்? உன் அருமை அத்தைக்கு,

நான் ஒரே பிள்ளை தெரியுமா? உருப்படியாக வீடு போய்ச் சேர வேண்டுமே என்றுதான், வீர தீரனே என்றாலும், யாம் சற்று ஒதுங்கியே இருந்தோம், மீன் விழியாளே!" என்று முடித்தான் ரஞ்சன். "நேற்று அம்மா வைத்த மீன் குழம்பு என்ன ருசி, தெரியுமா!" என்று நெட்டையும் விட்டான்.

"ஏய், போடா!" என்று சிரிப்பும், கோபமுமாகச் சொன்னவளுக்கு அப்போதும் தாங்கவில்லை. கொஞ்சம் இடைஞ்சலாக வழியில் நின்றது தப்புதான். ஆனாலும், முதல் தடவையாகப் பார்க்கிற ஒருவரிடம்... ஒரு பெண்ணிடம்... அதுவும் ஓர் இளம்பெண்ணிடம், அதிலும், ஓர் அழகான இளம் பெண்ணிடம், ஒருவர் இப்படியா பேசுவது? ஏன் ரஞ்சித், நான் அழகாகத்தானே இருக்கிறேன்?" என்று ஒரு திடீர்க் கலக்கத்தில், அத்தை மகனிடம் சந்தேகம் கேட்டாள் சாரு.

"நன்றாகத்தான் இருக்கிறாய்! அதுவும், ரொம்பவுமே நன்றாகவே இருக்கிறாய். அதனால்தான் அந்த மல்யுத்த வீரனுக்குக் கோபம். அழகான பெண், அடுத்தவனுக்கு மாலை போடுகிற மாதிரி நின்றால், அந்தப் பெண்ணிடம் அவனுக்குக் கோபம் வருமா, வராதா?"

"அடுத்தவனுக்கா? யாருக்கு? தூக்கித்தானே பார்த்துக் கொண்டிருந்தேன்!"

"நீ மாலையைத் தூக்கிப் பார்த்த விதம், அந்த மாலையை எனக்குப் போட்டுப் பார்க்கிற மாதிரி இருந்தது!" என்று ரஞ்சன் விளக்கினான்.

"உனக்கா? நானா? போடா, போ!" என்றாள், அவள் ஏளனமாக.

"ரொம்ப நல்லது! நானும் ஒன்றும், உனக்காகக் காத்துக் கொண்டிருக்கவில்லை. ஆளை விடு!" என்றான் ரஞ்சன்.



"விடத்தான் வேண்டும். உன்னை நான் ஒருபோதும் மணக்கமாட்டேன். என் கனவு நாயகனுக்கு, நீ அரையடி குள்ளம், தெரியுமா? ஆனால் என்னைப் போய், இப்படித் தப்பாக நினைத்து விட்டானே!" என்று மீண்டும் புலம்பினாள் சாரு.

தன்னைக் குள்ளம் என்று சாரு சொன்னாள் என்ற ஆத்திரம் ரஞ்சனுக்கு.

"அப்படியானால், உனக்கு அந்த ஆள்தான் லாயக்கு. ஆனால், ஒரு பார்வையில், 'ஒத்தெல்லோ' மாதிரித் தப்பாக நினைத்துவிட்டானே. வேண்டுமானால் ஒன்று செய். அந்த ஆளின் பின்னோடு ஓடிப்போய், அவரைப் பிடித்து உண்மையை விளக்கு. கூடவே, ஒரு வருங்காலத்துக்காக ஒரு விண்ணப்பத்தையும் போட்டுவிட்டு வா. இங்கே தொழில் விஷயம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்று, ரஞ்சன் கிண்டலடித்த பிறகுதான், சாருமதி அந்தப் பேச்சை விடுத்தாள்.

கடுவன் பூனை, கடுவன் பூனை என்று விட்டு, கடைசியாக அவனையே படம் பிடிக்கும்படி ஆயிற்றே.

ஆனால், அன்றைய நினைவு. அவனுக்கு இருக்கக் கூடுமா என்று யோசித்தபடியே படம் பிடித்தாள் சாரு. லென்ஸின் வழியே பார்க்கும்போது இன்றும் அவன் நல்ல மனநிலையில் இல்லை என்பது நன்கு விளங்கியது.

மனிதன் எப்போதுமே, சரியான சிடுமூஞ்சிதான் போலும். ஆனால், அதை வெளிப்பார்வைக்குக் காட்டிக் கொள்ளாதிருக்க அவன் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தான். மற்றவர்களோடு சேர்ந்து உற்சாகமாகப் பேசுவதும், சிரிப்பதும், கூடவே யாரும் அறியாதவாறு, கைக்கடிகாரத்தைப் பார்ப்பதுமாகப் பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தான் அவன்.

துரைக்கு, மற்றவர்களோடு கலந்து பழகப் பிடிக்க வில்லை போலும். எப்போது எழுந்து ஓடலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறான்.

அதற்குள், மணப்பெண்ணுக்குப் பெண்கள் நலுங்கு வைப்பது முடிந்து, ஆரத்தி சுற்றி மணையிலிருந்து எழுப்பி அவளுக்கு மோதிரம் போட, மகனை அழைத்தார், பையனுடைய தாயார்.

லேசாக அசடு வழிந்தவாறே, ஆனால் ஆவலுட னேயே எழுந்து சென்றான் மணமகன்.

வெட்கமும் மகிழ்ச்சியுமாக, ஓரக்கண்ணால் அவள் நோக்க, அவளுக்கு மோதிரத்தை அணிவித்த அவன் ரகசியமாக அவள் கையை வருட, எல்லாம் லென்சின் வழியே கண்ணில்பட, ஒரு நல்ல திரைப்படம் பார்க்கிற உணர்வு சாருமதிக்கு.

திடுமெனக் காதருகில், "உங்கள் வேன் என் காரை வழி மறித்து நிற்கிறது. அதை எடுத்து, நகர்த்தி நிறுத்தி விட்டு, அப்புறமாக வந்து படம் எடுங்கள்!" என்றது. எல்லையை நெருங்கிவிட்ட பொறுமையை, இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு குரல்.

அவசரமாக ஒரு கணம் திரும்பிப் பார்த்தால், திரும்பு முன்னரே அவள் ஊகித்தது போலவே, அவனேதான்.

இவனது வழியை மறிப்பதே, அவளுக்கு வேலை என்று எண்ணுகிறானா? ஒன்று அவள், அல்லது அவளது வேன்!

அப்படித்தான் நினைப்பதுபோல, அவனது முகத்தில் தெரிந்த அலுப்பு கூற, அவள் நிமிர்ந்தாள். "நாங்கள் வேனை நிறுத்தும்போது, அங்கே நெருக்கடி ஒன்றும் இல்லையே, மறுபக்கம் ஏராளமாக இடம்..."



"அந்தப் பக்கம், யாரோ ஒரு மட சாம்பிராணி. ரொம்ப ஒட்டி வண்டியை விட்டுவிட்டு, எங்கோ போய் விட்டான். கண்டுபிடிக்க முடியவில்லை. எனக்கு நேரமா கிறது. உடனே வருகிறாயா? சீக்கிரமாகப் போகாவிட்டால் என் வேலை கெட்டுப் போகும்!" என்று அவசரப் படுத்தினான் அவன்.

இவனுக்கு மட்டும்தான் வேலையா?

"இதை விட்டுவிட்டு, நான் மட்டும் எப்படி வர முடியும்? அங்கே சமையல் பொறுப்பை ஏற்றிருப்பது, என் அண்ணன்தான். அவனிடம் போய்க் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்," என்று, படப்பிடிப்பிலிருந்து கண்ணை எடுக்காமலே கூறினாள் சாரு.

ஒரு வேகப் பெருமூச்சுடன் அவன் அகன்று செல்லவும், அவள் தோளைக் குலுக்கிவிட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

மேடையில், மணப்பெண்ணுக்கு மட்டுமின்றி, இது தான் சாக்கு என்று மோதிரம் அணிவித்த பின்னும் அவள் அருகிலேயே நின்று கொண்டிருந்த மணமகனுக்கும் வயதில் முதிர்ந்த ஆண்கள் திருநீறு பூசிக் கொண்டிருந் தார்கள்.

இடையிடையே இளையவர்கள் இருவரின் பார்வைப் பரிமாற்றங்களை ரசித்த வண்ணம், புன்னகையோடு காசெட்டில் பதிவு செய்தாள் சாரு.

ஆனால், சில நிமிஷங்களில் திரும்பி வந்துவிட்ட அந்த 'அவன்', "பார், உன் அண்ணனை அங்கே கண்டு பிடிக்க முடியவில்லை. நீதான் வா! வேன் சாவி யாரிடம் இருக்கிறது என்று கேட்டு, வாங்கிக் கொடு!" என்று அவளை விரட்டத் தொடங்கினான்.

கையும் கண்ணும் வேலையைச் செய்ய, அவளும் எரிச்சலுற்று, "இந்த வேலையை இடையில் விட்டுவிட்டு என்னால் வர முடியாது!"என்றாள் முடிவாக.

"இதோபார்... கோடிக் கணக்கான ரூபாய் பெறு மானம் உள்ள ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். அங்கே எல்லோரும் எனக்காகக் காத்திருப்பார்கள். சிவாவுக்காக வந்து, இங்கே மாட்டிக் கொண்டேன். நிலைமையைப் புரிந்து கொண்டு சாவிக்கு ஏற்பாடு செய்!" என்றான், அவன். கோபத்தை முடிந்தவரை அடக்கிக் கொண்டு.

"இதற்கு, வேன் சாவி எதற்கு? பெண்ணுடைய அப்பா விடம் சொன்னால், வேறு காரே தருவாரே!"

"இது தெரியாமலா, உன்னிடம் வந்து கேட்கிறேன்?" என்றான் அவன் ஆத்திரமாக. "அவரிடம் போனால், சாப்பிடாமல் போக விடுவாரா? குறைந்தது முக்கால் மணி நேரம் வீணாகிவிடும். அதன் பிறகு, நான் போவதைவிடப் போகாமல் இருக்கலாம். இங்கிருந்து நான் சத்தமின்றி வெளியேறியாக வேண்டும்."

"ஓ...!" என்றாள், சாருமதி - அவனது சிக்கலை உணர்ந்து.

ஆனால், அவனுக்கு எவ்வளவு பெரிய சிக்கல் என்றாலும், அதற்காக அவள் வேலையை இடையில் விட முடியுமா?

சற்று யோசித்து, "பாருங்கள் மிஸ்டர்!" என்று அவள் தொடங்கியபோது, "சசி" என்றான் அவன் சுருக்கமாக.

"மிஸ்டர் சசி, இந்த இடத்தை விட்டு நான் சற்று நகர்ந்தாலும் என் வேலை கெட்டுவிடும். அதனால் நான் இங்கிருந்து அசைய முடியாது. அப்படி உங்களுக்கு



அவசரம் என்றால் என் 'சன்னி' வெளியே நிற்கிறது. அதை எடுத்துப் போங்கள்..." என்று சாருமதி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவன் இடையிட்டு, "சன்னி யின் சாவி எங்கே?" என்று அவசரமாகக் கேட்டான்.

"சட்டைப் பையில்..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "இந்தப் பையா?"என்று, அவளது சட்டையின் ஒரு பையில் கையை விடப் போனான் அந்த சசி.

"ஸ்டாப் இட்!" என்று சீறியவாறு, உடம்பைத் திருப்பி, விலகி நின்றாள் சாருமதி.

அவளது சட்டைப் பையில், அவன் கையை விடுவதை, யாராவது பார்த்தால் என்ன சொல்லுவார்கள்? மட்டி! மட்டி!

அவனைக் கோபமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, அவ்வளவு நேரமாக, ஒரே தோளில் வைத்திருந்ததால் ஏற்பட்ட வலியால் லேசாக முகம் சுளித்தபடி, வீடியோ கருவியை அடுத்த தோளுக்கு மாற்றிக் கொண்டு, சட்டைப் பையில் இருந்து சாவியை எடுத்தாள் சாருமதி. "தாங்க்ஸ்!" என்று சுருக்கமாக நன்றியுரைத்தபடி, அவள் கையில் இருந்த சாவியைப் பிடுங்காத குறையாக வாங்கினான் அவன்.

"பத்திரம் என் சன்னி!" என்றபடி, சாவியைக் கொடுத்தவளுக்குச் சட்டெனச் சிரிப்பு வந்துவிட்டது.

அவளது குட்டி சன்னியில், ஆறடிக்கும் மேலாக அவன். பார்ப்பதற்கு எப்படி இருக்கும்!

சாவியைக் கையில் வாங்கிய அவனுக்கும் அதே எண்ணம் தோன்றியதோ என்னவோ, அவன் முகத்திலும் சட்டெனச் சிரிப்பு மலர, சாவியோடு, வெளியே விரைந்தான்.

அவனது முசுட்டு முகத் தோற்றத்தையே பார்த்துப் பழகி விட்டதாலோ என்னவோ, அந்தச் சிரிப்பு, சாருமதிக்கு அளவில்லாத வியப்பை அளித்தது.

இவன்கூட, இப்படியெல்லாம் சிரிப்பானா?

சில கணங்கள் திகைத்து நின்று விட்டுத்தான் அவளால் தன் வேலையை மீண்டும் தொடர முடிந்தது.

## 4

அடுத்த நாள் முழு மூச்சுடன் ஸ்டுடியோவில் உட்கார்ந்து வேலை செய்து நண்பர்கள் உதவியோடு ஃபோட்டோக்களை 'டெவலப்' பண்ணி ஆல்பத்தில் வரிசைக் கிரமமாக ஒட்டுவது, வீடியோவுக்குத் தகுந்த இசை சேர்ப்பது போன்ற வேலைகள் முழுவதையும் சாருமதி செய்து முடித்தாள்.

வேலை முடிந்து, அவரவருக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்து நண்பர்களை அனுப்பிவிட்டு, எதையோ யோசித்தபடி, சாருமதி சற்று நேரம் தனியே அமர்ந்திருந்தாள்.

ஒருவகையில், சிதம்பரமுந்தான் கேட்டார். இது போலவே வேண்டும் என்று அவர் கேட்டால், மீண்டும் செய்வதற்குப் பதிலாக, இப்போதே தயார் பண்ணி வைப்பதில் என்ன தப்பு?

மீண்டும் வேலையில் மூழ்கினாள் அவள்.

தன்னந்தனியாக அமர்ந்து தயாரித்த ஆல்பத்தையும், கேசட்டையும் தனியாக எடுத்து மேஜையின் இழுப் பறைக்குள் வைத்து மூடிய பிறகே வீட்டுக்குக் கிளம்பினாள்.



ஆல்பங்களையும் கேசட்டுகளையும் தூக்கிக் கொண்டு வரும்போதுதான், சாருமதிக்கு எரிச்சல் வந்தது.

அவளது 'சன்னி' இருந்திருந்தால், இந்தச் சுமையை அவள் தூக்கிக் கொண்டு வர நேர்ந்திராது.

என்னமோ 'பல கோடி ரூபாய்' என்றானே என்று பரிதாபப்பட்டு வண்டியைக் கொடுத்துவிட்டு, அவள் பஸ்சும் நடையுமாகக் கஷ்டப்பட நேர்ந்திராது. அவனுக்குப் பல கோடி வந்தால், அதில் அவளுக்கு என்ன லாபம் என்று யோசித்திருக்க வேண்டும்! கடைசியாக இந்த அலைச்சல் ஒரு நஷ்டமாக அல்லவா ஆகிவிட்டது.

'சட்'டென அவளுக்குத் 'திக்'கென்றது. மெய்யாகவே, நஷ்டமாக ஆகிவிடுமா?

இன்னமும் அவளது வண்டி வந்த பாடில்லை வண்டியைக் கொண்டு போனவனைப் பற்றியும் அவன் பெயர் சசி என்பது தவிர அவளுக்கு எதுவும் தெரியாது.

அந்தப் பெயரும்கூட, அவனே சொன்னதுதான். அது உண்மையா, பொய்யான பெயரோ, யாருக்குத்தெரியும்?

பொய்ப் பெயரைச் சொல்லி, அவளது 'சன்னி' யையே ஸ்வாஹா பண்ணியிருப்பானா?

ஒரு கணம் பதறிப் போன போதும், உடனேயே அப்படியெல்லாம் நடந்திராது என்ற திடமும் அவளுக்கு வந்துவிட்டது.

அந்த 'சசி' ஒன்றும் யாருக்குமே தெரியாதவன் அல்ல. பெண்ணைப் பெற்ற அந்தப் பெரிய மனிதர் சிதம்பரம் அவன் மீது அவ்வளவு மரியாதை வைத்திருந்தார். நகரத்தில் பெரிய மனிதன் என்று வேறு சொன்னார். வண்டி திருடுகிறவர்கள் போல, விலாசம் இல்லாதவன் இல்லை அந்த சசி.

கட்டாயம் அவளது வண்டி வந்து சேரும். ஆனால், சாவியைப் பிடுங்கி, 'சன்னி'யை எடுத்துக் கொண்டு போவதில் காட்டிய அவசரத்தை, அதைத் திருப்பிக் கொடுப்பதிலும் அவன் காட்டியிருந்தால், அவளுக்கு எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்.

இப்படித் தோள் வலிக்கத் தூக்கிக் கொண்டு வர நேர்ந்திருக்காது.

ஆட்டோவில் வரலாம். ஆனால் 'எக்ஸ்டென் ஷனு'க்கு வர, அநியாயக் காசு கேட்பார்கள். அங்கிருந்து திரும்பி வர, அவர்களுக்குச் சவாரி கிடைக்காதாம்.

கோபமும் களைப்புமாகச் சாருமதி வீட்டுக் காம் பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தால், பளபளவென்றிருந்த ஒரு புதிய காரின் அருகே, அவளது 'சன்னி' ஒரு நசுங்கலும், பெயின்ட் உதிர்ந்து சிராய்ப்புமாக காயலான் கடைக்குப் போகத் தயாராக இருப்பது போலச் சோகச் சித்திரமாக நின்றது.

'வண்டி பத்திரம்' என்று அவள் சொல்லி அனுப்பிய தென்ன? இப்போது, அதை அவன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் அழகு என்ன?

அவளது 'சன்னி'யை வெறித்துப் பார்த்தபடி, காரில் டிரைவர் மாதிரி ஒருவன் உட்கார்ந்திருந்தான்.

வீட்டினுள் பேச்சுச் சத்தமும் கேட்டது.

விஷயம் சட்டெனப் புரிந்தது அவளுக்கு.

இந்த டிரைவரை அவளது வண்டியை ஓட்டி வரச் சொல்லிவிட்டு, அந்த சசி காரில் வந்திருக்கிறான். உள்ளே அவனுக்கு உபசாரம் நடக்கிறது.

வீட்டை நெருங்க நெருங்க, ரஞ்சனின் குரல் கேட்கவும், சாருமதியின் வேகம் அதிகரித்தது. அந்த



சசியிடம், இந்த 'லொட லொட' என்னத்தையெல்லாம் உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறானோ?

வேகமாக, அவள் வீட்டினுள் சென்றபோது, "எங்கள் சின்னமாமா..." என்று ஏதோ சொல்லிக் கொண்டிருந் தான், ரஞ்சன்.

சாருமதி அஞ்சியது சரியே. இந்தக் குடும்பங்களின் சரித்திரத்தைத்தான் ரஞ்சன் ஒப்பித்துக் கொண்டிருந் தான்.

சாருமதியின் வண்டியில் வேறு யாருக்கும் தெரி யாமல் கிளம்பிச் சென்றவன், தன் அலுவலகத்தை அடைந்தபோது, அவனது தொழில் ஒப்பந்தம் பற்றிய கூட்டம் தொடங்குவதற்குச் சரியாக இரண்டு நிமிஷங் கள்தான் இருந்தன.

நிமிஷங்களில்கூட நேரக் கணக்குப் பார்க்கும் ஜப்பானியரோடான ஒப்பந்தம்.

இடம் பார்த்து, 'சன்னி'யை ஒதுக்கி நிறுத்த நேரமின்றி அப்படியே விட்டுவிட்டு உள்ளே ஓடினான்.

கூட்டத்தில் இரு தரப்பினரும் கலந்து உரையாடி, ஒப்பந்தம் கையெழுத்தாகி, எல்லோருமாகச் 'சியர்ஸ்' சொல்லி, விருந்து உண்டு முடித்துக் கலைந்து, மற்ற வேலையும் முடிந்து வீடு சென்ற பிறகுதான் சசிகாந்தனுக்கு அந்த கேமராப் பெண்ணின் 'சன்னி' வண்டி நினைவு வந்தது.

அலுவலக எல்லைக்குள் எதுவும் தொலைய வாய்ப் பில்லை. எனவே மறுநாள் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டான்.

ஆனால் அந்த ஜப்பானிய விருந்தாளிகளோடு, கூட்டுத் தொழில் பற்றிய வேலை விவரங்களைப் பேசி

முடித்துவிட்டு, அலுவலகம் சென்று பார்க்கையில், 'சன்னி' கீழே விழுந்து கிடந்தது.

எந்த வண்டியோ, அதை இடித்துத் தள்ளியிருக்க வேண்டும்.

முதலாளி காரை நிறுத்தி விட்டு, இறங்கிப் பார்ப்பதைக் கவனித்து வாட்ச்மேன் ஓடி வந்தான்.

"யாரோ, சரக்கு டெம்போ வர்ற வழியிலே நிறுத்திவிட்டுப் போய்ட்டானுங்கய்யா. ராத்திரி இடிச்சுப் போட்டாங்க போல. இம்மா நேரமாச்சுது. வண்டிக்காக யாரும் வந்து பார்க்கலை. யாரு வண்டின்னே தெரியலை!" என்றான் அவன்.

இவனிடம் என்னவென்று விளக்குவது?

"நமக்குத் தெரிந்தவர்கள் வண்டிதான். நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போ!" என்று அவனை அனுப்பிவிட்டு சன்னியைத் தூக்கி நிறுத்தினான்.

ஒரு நசுங்கலும், சிறு சிராய்ப்பும் தவிர, பெரிய பழுது ஏதும் இருப்பதாகத் தோன்றவில்லைதான். ஆனால், 'வண்டி பத்திரம்' என்று தனியான எச்சரிக்கையுடன் அல்லவா வண்டிச் சாவியைக் கொடுத்தாள் அவள்.

'சௌபாக்கிய'த்துக்கு டெலிஃபோன் செய்து, கேமராப் பெண்ணின் பெயர் முகவரியை அறிவது, அவன் எண்ணியதுபோல, இலகுவாகவே இருந்தது.

ஆனால், சாருமதியுடன் பேச முடியவில்லை. அவளது ஸ்டுடியோ எண் கிடைத்தபோதும், அங்கே வேலை நடுவே அவளைத் தொல்லை செய்யச் சசிகாந்தன் விரும்பவில்லை.

அதோடு, அவளது வண்டி பற்றி ஃபோனில் பேசவும் அவனுக்குப் பிடிக்கவில்லை.



செய்த தப்பை நேர்மையாக, நேரில் ஒத்துக் கொண்டு, வண்டியைச் சீர் செய்வது பற்றியும் பேசி முடிவு செய்வதுதான் சரி என்று எண்ணினான் அவன்.

அதற்காகவே, மாலையில் சாருமதியின் சன்னியோடு, அவளது வீட்டுக்குச் சென்றான்.

மேற்கொண்டு நடந்தது, சாருமதி ஊகித்தது போலத் தான். அவனுடைய காரோட்டியிடம் அவளது முக வரியைக் கொடுத்து, சன்னியை ஓட்டிச் சென்று அவனது கார் வரும் வரை, வீட்டின் வெளியே காத்திருக்குமாறு பணித்தான்.

ஆனால், அவனது அதிருஷ்டமோ, துரதிருஷ்டமோ சாருமதியின் குடும்பத்தினர் யாருமே வீட்டில் இல்லை. அவளும் வீடு வந்து சேரவில்லை.

ஆனால் ரஞ்சன் இருந்தான்.

இப்படி விஷயமாக, சசிகாந்தன் வந்திருப்பது தெரிந் ததும், உட்கார வைத்து உபசரித்தான். "உட்காருங்கள் சார். ஏதாவது பழச்சாறு அருந்துகிறீர்களா? இந்த வீட்டில் எப்போதும் ஏதாவது பழச்சாறு ஃப்ரிஜ்ஜில் இருக்கும்!" என்றான் சுவாதீனமாக.

"ம்ம்ம். ரொம்பவும் உரிமையாகப் பேசுகிறீர்களே! உறவா? அல்லது வேலையா?" என்று வினவினான் சசிகாந்தன்.

"உறவுதான்!" என்றான் ரஞ்சன் புன்னகையோடு.

"திருமண உறவு போல..?"

மற்றவனின் குரலில் சிறு சிரிப்புடன், "ஆமாம்!" என்றான் ரஞ்சன் சுருக்கமாக.

"ஓ!"

"என் அம்மாவை மணந்து, அப்பா இதில் வந்தார்!" என்று அதே சின்னச் சிரிப்புடன் ரஞ்சன் விளக்கினான்.

"சரித்திரம் தொடருகிறதாக்கும்?!" என்று மேலும் துருவினான் மற்றவன்.

சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு, "என்ன செய்வது, சார்? சாரு ரொம்பவும் அழகான பெண்! கெட்டிக்காரி வேறு. கையில் நல்ல லாபகரமான தொழில் ஒன்றும் வைத்திருக்கிறாள். கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால், இப்படி அத்தை, மாமன் மக்கள் மணந்துகொள்வது நல்லதில்லை என்று, ஏதோ ஆராய்ச்சி பண்ணி அநியாயமாகக் கண்டுபிடித்து விட்டார்களாமே! ச்சு.! நம்ம தலைவிதி அவ்வளவுதான்!" என்று வெகுவாக வருத்தப்பட்டான் சின்னவன்.

உடனேயே கலீர் என்று நகைத்துவிட்டு, "அன்று பூக்கடையில் பார்த்துத் தப்புக் கணக்குப் போட்டு விட்டீர்கள், சார். ஒரு திருமணத்தில் கடைசி நேரத்தில் வேறு மாலை வாங்கச் சொன்னார்கள் என்று வாங்க வந்தோம்..." என்று, விவரம் சொல்லி மீண்டும் சிரித்தான்.

நடந்தது முழுவதையும் அவன் சொல்லவும், சசி காந்தனுக்குச் சிரிப்பு வந்தது. மாலையைச் சாருமதி மறுத்த விதத்தில் மதிப்பு ஏற்பட்டது. கூடவே அவளது புலம்பலில் விழுந்து விழுந்து நகைத்தான் அவன்.

அதற்கு மேல் அவர்களது குடும்ப அமைப்பு, தொழிலை நடத்தும் விதம் இதெல்லாம் பற்றி விளக்கு வதற்கு, ரஞ்சனுக்குத் தூண்டுகோலே தேவையிருக்க வில்லை.

சாருமதி அவசரமாக வீட்டுக்குள் வந்தபோது, அவளுடைய தந்தையும் தன் சின்ன மாமாவுமான



செல்வகணபதியைப் பற்றிய விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான் அவன்.

மாமன் மகளைக் கண்டதும், "சார், உன்னைத் தேடித் தான் வந்தார். இதோ, இவள்தான் சின்ன மாமாவுடைய மகள். இவள் அண்ணன் மனோகரன்தான் மண்டப அலங்காரம், பந்தல் போல எல்லா வகையும் கவனிப்பது. வீடியோ ஃபோட்டோ எல்லாம் தண்ணீர் பட்ட பாடு இவளுக்கு. அன்று மாலைக் கடை பற்றித்தான்..." என்று ரஞ்சன் சொல்லிக் கொண்டே போகவும், "அப்பா...! என்ன வெய்யில்!" என்று இடையிட்டாள் சாருமதி.

ரஞ்சன் பேச்சை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தான்.

கைச்சுமையை ஓர் இருக்கையில் வைத்துவிட்டு, "ஆமாம் ரஞ்சித்! ஒரே வெய்யில்.! தாகம் தொண்டையை வறட்டுகிறது. குளிர்ச்சியாக எதையாவது குடித்தால்தான் தாங்கும்!" என்று உரக்கக் கூறியவாறே, வேகமாக உள்ளே சென்றாள்.

உட்புறம் சென்று மறைந்தவள், அங்கே இருந்தபடி, "ரஞ்சித்! இந்த ஐஸ் ட்ரே ஒட்டிக் கொண்டு எடுக்க வரவில்லை. இங்கே வந்து கொஞ்சம் எடுத்துக் கொடேன்!" என்று அத்தை மகனை உரக்க அழைத்தாள்.

அவளது அழைப்புக்கு இணங்கி உள்ளே வந்தவனிடம், "அவரிடம் ரொம்ப நேரமாகப் பேசிக் கொண்டிருந்தாய்போல! ஆமாம், நம் பக்கத்து வீட்டு நாய் நாலு குட்டி போட்டதே, அதைச் சொல்லி விட்டாயா, இல்லையா?" என்று கோபமும் கிண்டலுமாக வினவினாள்.

விழி மலர அவளை நோக்கிவிட்டு, "அடடா.! என்ன மறதி! என்ன மறதி!" என்று தலையில் லேசாகத் தட்டிக் கொண்டான் அவன். "பாரேன், மறந்து போய், நாய்க் குட்டியைப் பூனைக்குட்டி என்று அவரிடம் சொல்லி

விட்டேன். இதோ போய்த் திருத்திவிடுகிறேன். இப்படிச் சமயத்தில் ஞாபகப் படுத்தித் திருத்துவதற்கு நீ இல்லா-விட்டால், நான் என்ன கதி ஆவேன், சொல்லு!" என்று சிரித்தான்.

அவள் ஆத்திரத்துடன் முறைக்கவும், "கோபப் படாதே, சாரு! நான்தான் அவரிடம் திருத்திச் சரியாகச் சொல்லி விடுகிறேன் என்றேனே!" என்றவன், அவளது ஓங்கிய கைக்கு அகப்படாமல் அறை வாயில் அருகே போய் நின்று கொண்டான்.

அப்படியே ஹாலில் இருந்தவனிடம், "நான் சொல்லவில்லை, சார், இங்கே எப்போதும் ஏதாவது பழச்சாறு இருக்கும் என்று! அன்னாசிச் சாறு இருக் கிறதாம். குடிக்கிறீர்களா என்று கேட்கிறாள். என்ன விருந்தோம்பல் பார்த்தீர்களா? சின்ன அத்தையின் பயிற்சி. நிச்சயம் குடிப்பார். இந்த வெய்யிலுக்கு ஐஸ் துண்டு களையும் போட்டுக் கொடுத்தால், இன்னமும் நன்றாக இருக்கும் என்றேன். பார்த்தால், அதற்காகத்தான் ஐஸ் ட்ரேயை எடுத்துத் தரச் சொன்னாளாம்," என்று உரக்கச் சொல்லி, அவளைப் பார்த்துக் கண்சிமிட்டிவிட்டு மீண்டும் ஹாலுக்குச் சென்று அமர்ந்து கொண்டான் அவன்.

"கொழுப்பு! கொழுப்பு!" என்று ஆத்திரத்துடன் முணுமுணுத்தபோதும், ரஞ்சனை மறுத்துப் பேச முடியாமல், மூன்று கண்ணாடித் தம்ளர்களில் இரண்டி ரண்டு ஐஸ் துண்டங்களைப் போட்டு, பழச்சாற்றை ஊற்றிக் கொண்டு போய் டீபாயின் மீது வைத்தாள் சாருமதி.

"எடுத்துக் கொள்ளுங்கள் சார்!" என்று ஒரு தம்ளரை எடுத்துச் சசிகாந்தன் கையில் கொடுத்துவிட்டு, அடுத்ததைத் தூக்கி, ஒரு மடக்குக் குடித்தான் ரஞ்சன்.



லேசாகச் சப்புக் கொட்டி, "இதுதான் சின்ன அத்தையின் தனிச் சிறப்பு! அதிக இனிப்பும் இராது, ஆனால் சுவையாக இருக்கும்! என்ன சொல்லுகிறீர்கள் சார்?" என்று கேட்டான்.

"இந்த மாதிரி வார்த்தைகளை அடுத்தவர் வாயில் திணிக்காமல் சும்மா இரேன், ரஞ்சி!" என்று எரிச்சல் பட்டாள் சாருமதி.

"அதெல்லாம் இல்லை. மெய்யாகவே, ஜூஸ் மிகவும் நன்றாக இருக்கிறது. கூட இரண்டு மிடறு குடித்துவிட்டுச் சொல்லலாம் என்று இருந்தேன். அதற்குள், ரஞ்சன் முந்திக் கொண்டு விட்டார். அவ்வளவுதான்!" என்று ரஞ்சனை ஒத்துப் பேசினான் மற்றவன்.

"ஆமாம்! இவன் இவ்வளவு சொன்ன பிறகு, நன்றாக இல்லை என்று சொல்லவா முடியும்?" என்று முணுமுணுத்தாள் அவள்.

"நன்றாக இருப்பதை நன்றாக இல்லை என்று எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? அதுவும், உங்கள் அம்மா செய்ததை!" என்று பதிலுக்குக் கேட்டான் அவன்.

கடைசி வார்த்தை அவனதாக முடிவது எரிச்ச லூட்டிய போதும், மேற்கொண்டு ஒன்றும் சொல்ல மாட்டாமல், பேசாமல், தன் தம்ளரைக் காலி செய்யத் தொடங்கினாள் சாருமதி.

இவனை எப்படி மடக்குவது? 'சன்னி'யைப் பற்றித் தொடங்கலாமா என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த போது, சசிகாந்தன் அதற்கு ஓர் அரிய வாய்ப்பைக் கொடுத்தான்!

# 5

அன்னாசிச் சாறை ரசித்துக் குடித்த... அல்லது, ரசித்துக் குடிப்பதாகக் காட்டிக் கொண்ட சசிகாந்தன், சாருமதி கொண்டு வந்து வைத்திருந்த பையைப் பார்த்து விட்டு, "என்ன, நிச்சயதார்த்த விழா ஃபோட்டோக்களா? பார்க்கலாமா?" என்று கேட்டபோது, அதற்கு அவள் மறுக்கக்கூடும் என்று கொஞ்சமும் எதிர்பார்த்தானில்லை!

ஆனால் கிடைத்தது வாய்ப்பு என்று, சாருமதி உள்ளூரக் குதூகலித்தாள். அதை வெளிக்காட்டாமல் மறைத்து, "சாரி சார்! அதை உங்களிடம் காட்டுவதற்கு இல்லை!" என்று ரொம்பவும் பதவிசாக மறுத்தாள்.

ரஞ்சன் ஆச்சரியமாக நோக்கியதை அலட்சியம் செய்து, "இதைக் கல்யாணப் பெண்ணிடமோ, அல்லது அவளுடைய தகப்பனாரிடமோதான் நான் கொடுக்க முடியும்."என்று விளக்கமும் கொடுத்தாள்.

வியந்த பார்வை உடனே மாற, "வெளியே உங்கள் சன்னியைப் பார்த்திருப்பீர்கள் போலும்!" என்று சசிகாந்தன் கூறவும், சட்டென அவள் முகம் கன்றியது. என்னவோ, சன்னியைப் பழுது படுத்தியதற்காகத்தான் ஃபோட்டோவைப் பார்க்க விடவில்லை போலக் குறிப்புக் காட்டிப் பேசுகிறானே!

அதற்காக இல்லை என்று ஒரேயடியாகச் சொல்லவும், அவளால் முடியவில்லை. ஆனால், அதற்காக மட்டும் என்றும் சொல்ல முடியாது.

சட்டதிட்டம் என்று பார்த்தால், அவள் சொன்னது சரியே என்றாலும், எந்தத் தொழிலிலும் நீக்குப்போக்கு



உண்டு என்பதை அவள் அறியாதவள் அல்ல. மேலும், இந்த சசிகாந்தனிடம் ஃபோட்டோக்களைக் காட்டுவதைச் சிதம்பரம் குற்றமாகக் கருதமாட்டார் என்பதும் அவளுக்கு நிச்சயமே.

அப்படியிருக்க இவனோடு ஏன் மோத வேண்டும்?

'முதல் கோணல் முற்றும் கோணல்' என்பதுபோல, முதல் சந்திப்பில் தவறாகக் கருதியதோடன்றி, பெரிய நியாயாதிபதி போலக் கடுமையாகப் பேசிவிட்டுப் போனானே, அது தப்பில்லையா? அதற்குத் திருப்பிக் கொடுப்பதில் மட்டும் என்ன தப்பு என்று, தனக்குத்தானே வாதாடித், தன்னை நியாயப்படுத்திக் கொண்டாள் சாருமதி.

"நிறுத்தி இருந்த இடத்தில் யாரோ மோதி விட்டார்கள். 'டிங்கரிங்' செய்தே ஆக வேண்டும்! அப்புறம் பெயின்ட் வேலை. அதனால்தான் ஆளிடம் கொடுத்தனுப்பாமல், நானே வந்தேன்..." என்று சசிகாந்தன் சொல்லும்போதே, வாயிலில் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

சில கணங்களில் சாருமதியுடைய தந்தை செல்வ கணபதி உள்ளே வந்தார்.

உள்ளேவந்தவர் கண்ணில், முதலில் அருமைத் தங்கை மகன் பட, "வா ரஞ்சிம்மா! அத்தை வெளியே போயிருக்கிறாளே! உனக்குச் சாப்பிட ஏதாவது... ஓ! ஜூசா?" என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, அடுத்த விருந்தாளியைப் பார்த்துவிட்டு, "ஹலோ, மிஸ்டர் சசிகாந்தன்! வாருங்கள், வாருங்கள்! உங்கள் ஒப்பந்தம் பற்றி, இன்றைய பத்திரிகையில் பார்த்தேனே! வாழ்த்துக்கள்!" என்று அருகே வந்து கை குலுக்கினார்.

"சொல்லுங்கள், உங்களுக்கு நாங்கள் என்ன செய்யக் கூடும்? முதலில் என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று உபசரித்தார்.

"உங்கள் மகள், தங்கை மகன் புண்ணியத்தில் எல்லாம் ஆயிற்று. அருமையான ஜூஸ்! உங்கள் மனைவி தயாரித்த தாமே! என் பாராட்டை அவர்களிடம் சொல்லி விடுங்கள்!..." என்று அவன் கூறியபோது, 'சரியான ஆள் மயக்கி போலும்! அப்பாவைப் பிடிக்க இது போதும்!' என்று எண்ணினாள் சாருமதி.

அதற்குள், "மாமா மறந்தாலும், நான் சொல்லி விடுகிறேன்!" என்று குறுக்கே புகுந்தான் ரஞ்சன்.

அவனைப் பார்த்து முறுவலித்துவிட்டு, மீண்டும் பெரியவரிடம் திரும்பி, "ஆனால், இங்கே நான் வந்தது. உங்கள் மகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காக!" என்றான் சசிகாந்தன்.

எல்லோரும் என்ன, இவனிடம் உருகி வழிவது என்று எரிச்சலுற்று, "ஆனால், ஒரு 'நன்றி'யில் நான் ஏமாந்து விடமாட்டேன். எனக்குத் தேவை என் 'சன்னி'யைப் பழுது பார்ப்பதற்கான பணம். என் நல்ல வண்டியை நன்றாக நசுக்கி வைத்திருக்கிறீர்களே!" என்றாள் சாருமதி கறார்க் குரலில்.

"ஷ்... என்னம்மாஇது? அவரிடம் போய், ரிப்பேர் காசு கேட்டுக் கொண்டு. நம் மெக்கானிக் ஷெட்டில் விடு. செலவை நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்றார் தந்தை.

"அதெப்படிப்பா? பழுது பண்ணியதுஅவர். பழுது பார்க்கச் செலவு செய்வது நீங்களா? இது என்ன நியாயம்! வாங்கும்போது மட்டும், என்ன செலவானாலும் நான்தான் செய்தாக வேண்டும் என்று அவ்வளவு



கண்டிப்பாகச் சொன்னீர்களே! அன்னைக்கு, என்னைக் கேளாமலே இந்தக் குரங்கு எடுத்துப் போய் இடித்து விட்டு வந்தபோதுகூட அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ள முடியாது என்றீர்களே!" என்று வாதாடினாள் சாருமதி.

"உன் ஓட்டை 'சன்னி'யில் போய், என் கை மட்டும் தொட்டில் குழந்தையாகப் பத்து நாட்கள் கிடக்க நேர்ந்ததே! என்ன பாடு பட்டேன் தெரியுமா? அது போதாதா?"

"நன்றாக வேண்டும்! என்னைக் கேளாமல், என் வண்டியை எடுத்தாய் அல்லவா?"

"கஷ்டப்பட்டேன் என்கிறேன். இரக்கமே இல்லாமல், என்ன திட்டு திட்டுகிறாள். என்னவோ, பெண்களைப் பரிவின் மறு உரு என்று அளக்கிறார்களே. எல்லாம் கட்டுக் கதை!"

"மனிதர்களுக்குப் பரிவு காட்டலாம்! ஆனால், குரங்குகளுக்கு?"

"குரங்கின் மாமா மகள் யாராம்?"

சசிகாந்தன் வேடிக்கை பார்ப்பதைக் கவனித்துவிட்டு, "சின்ன வயதில் இருந்து, சேர்ந்து வளர்ந்தவர்கள். எங்களுக்கு, இந்தச் சண்டை பழகிவிட்டது. ஆனால் இதெல்லாம் சற்றுநேரம்தான். அப்புறம், அவளை ஒரு வார்த்தை சொல்லிப் பாருங்கள், வரிந்து கட்டிக் கொண்டு வக்காலத்து வாங்குவான். மூன்று வீட்டுப் பிள்ளை களுமே, ஒருவருக்கொருவர் அவ்வளவு பாசமாக இருப் பார்கள்!" என்றார் செல்வகணபதி, பெருமிதப் புன்னகையோடு.

"ம். கவனித்தேன்!" என்று, சசிகாந்தனும் புன்னகை செய்தான். "அதோடு சன்னி விஷயத்தில், சாருமதி சொல்வது சரிதான் சார். ரொம்பவும் நெருக்கடியான நேரத்தில், உங்கள் பெண், தன் வண்டியைக் கொடுத்ததே பெரிது. அதை நல்லபடியாகத் திருப்பிக் கொடுக்காமல், இப்படி உடைத்துக் கொண்டு வந்தது பெரிய தப்பு. செலவையாவது நான் கொடுத்துத்தான் தீரவேண்டும். தயவுபண்ணி மறுக்க வேண்டாம்."

அவன் பேசத் தொடங்கியதுமே, ரஞ்சனோடு வாய்ச் சண்டையிடுவதில் இருந்த வேகம் குறைந்து, சாருவின் கவனம் இவர்கள் பேச்சுக்குத் திரும்பிவிட்டது.

ஆனால், அவன் பணத்தைக் கொடுக்கிறேன் என்றதில், அவளுக்குப் பெரிய மகிழ்ச்சி ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

அவனோடு வாதாடி மட்டம் தட்ட வாய்ப்பு இல்லாமல் போயிற்றே என்று, சற்று வருத்தம்தான்.

எப்படியும், அவன் முதலில் அந்த மாதிரிப் பேசி விட்டுப் போனது தப்புதானே? அதற்குப் பதில் கொடுக்கத்தான் வேண்டும்.

விரைவிலேயே ரஞ்சன் விடைபெற்றுக் கிளம்ப, செல்வகணபதி ஃபோன் அழைப்புக்குப் பதில் சொல்லப் போனார்.

வேகமாக யோசித்து, "நாளைக் காலையில் சரியாகப் பத்து மணிக்கு விழா ஃபோட்டோக்களைக் கொண்டு போய்க் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் அதன் பிறகு அவர்களிடம் கேட்டு வாங்கிப் பார்த்துக் கொள்ளுங்களேன், சார். தெரிந்திருந் தால் இன்றே அவர்களிடம் கொண்டு போய்க்



கொடுத்திருப்பேன். என் வண்டி வேறு இல்லையா? இதைத் தூக்கிக் கொண்டு போவது கஷ்டம் என்று நாளை தருவதாகச் சொல்லிவிட்டேன். மற்றப்படி அவர்களுக்கு முன்னதாக உங்களிடம் காட்ட முடியாமல் போனது எனக்கும் ரொம்பவே வருத்தம்தான், சார்!" அப்பாவியாக விழிகளை விரித்து, இனிய குரலில் வருத்தம் தெரிவித்தாள் சாரு.

"இருக்கும்!" என்று முறுவலித்தான் அவன்.

புரிந்து கொண்டான்.

புரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் சாருமதியும் தேன் தடவிய குரலில் பல பொடி வைத்து, அப்படிப் பேசியதே.

ஆனால் புரிந்ததும் கோபமும் அதைக் காட்ட முடியாமல் குன்றலுமாக முகம் கன்றுவான் என்று பார்த்தால், அதற்குப் பதிலாக அவன் சிரிக்கிறானே.

மேலே என்ன சொல்வது என்று அறியாமல், அவள் திகைத்தபோது, நல்லவேளையாகத் தன் டெலிஃபோன் பேச்சை முடித்துக் கொண்டு செல்வகணபதி வந்து விட்டார்.

அவர் தடுக்கத் தடுக்க 'சன்னி'யின் ரிப்பேருக்காக என்று ஓர் ஆயிரம் ரூபாயைச் சாருமதியிடத் கொடுத்து விட்டுச் சசிகாந்தன் கிளம்பினான்.

அந்தப் பணத்தை வாங்குவது நியாயம்தான். ஆனாலும் அவனிடம் இருந்து காசைக் கையில் வாங்கும் போது சாருமதிக்கு ஒரு மாதிரி உறுத்தியது.

கிளம்புமுன், "நாளைக்கும் இதையெல்லாம் சுமந்து கொண்டுதானே போக வேண்டும்? நான் வேண்டுமானால்

கார் அனுப்பட்டுமா?" என்று சிறுமுறுவலுடன் வினவினான்.

சுருசுருவென்றது அவளுக்கு. "ஏன்? என் அப்பாவிடம் கூடத்தான் கார் இருக்கிறது. இரண்டு கார். தேவைப் பட்டால் அதை எடுத்துக் கொள்வேன். உங்கள் கார் தேவைப்படாது!" என்றாள் மிடுக்காக.

முறுவல் மாறாமல், லேசாகத் தோளைக் குலுக்கி விட்டுச் சென்றான் அவன்.

"பாப்பா!" என்று செல்வகணபதி சற்றுக் கண்டிப் பான குரலில் அழைத்தார். "ஆளாளுக்கு ஒரு துறையில் உயர்ந்த நிலைக்கு வரப் போகிறோம் என்றீர்கள். நீங்கள் விருப்பப்பட்டபடி படிக்க வைத்து, தேவையான உப கரணங்களும் வாங்கித் தந்திருக்கிறோம். ஆனால் இடம் பார்த்து இதமாகப் பேசத் தெரியாவிட்டால், எந்தத் தொழிலிலும் மேலே வர முடியாது. தெரிந்து கொள்," என்று கடிந்துவிட்டுப் போனார் அவர்.

மூன்று குடும்பங்களிலும், ஒன்றிரண்டு பையன் களுக்குப் பிறகு முதல் பெண் குழந்தையாகப் பிறந்தவள் சாருமதி. அதனால், பெரியவர்கள் எல்லோருமே அவளுக்குச் செல்லம் கொடுப்பார்கள். பையன்களுக்கும் அவள் அருமைதான்.

கெட்டிக்காரி என்று மகளைப் பற்றிச் செல்வ கணபதிக்குப் பெருமை வேறு.

கடைசியாக, அவரிடமே திட்டு வாங்க வைத்து விட்டானே.

அவளது அந்தக் கோபமும் சசிகாந்தனிடம்தான் பாய்ந்தது.



அவனால் அல்லவா, அவளுக்கு அவ்வளவு தொல் லையும்.

முதல் பார்வையில் இருந்தே அப்படித்தான். இருந் திருந்து, அவனுக்குப் போய் அவளது வண்டியைக் கொடுத்தாளே, அத்தோடு நில்லாமல்...

மறுநாள் ஆட்டோவுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு, குடிதண்ணீர் பாட்டிலோடு, மூன்று பெரிய ஆல்பம், இரண்டு கேசட்டுகளையும் தூக்கிக் கொண்டு சிதம்பரத்தின் வீட்டு கேட்டைத் திறந்து உள்ளே சென்ற போதும், சாருமதி இதையேதான் நினைத்துக் கொண்டி- ருந்தாள்.

சன்னி இருந்தால் காம்பவுண்டு கேட்டுக்கு வெளியே இறங்கிச் சுமை தூக்க வேண்டி இருந்திராது. சன்னியை வீட்டு வாசல் வரை கொண்டு போயிருக்கலாம். தண்ணீர் பாட்டிலை வண்டியிலேயே விட்டுப் போகலாம்.

பழக்கமற்ற சுமையோடு, அவள் படியேறிச் செல்லும் போதே, சிதம்பரம் மகனோடு அங்கே வந்துவிட்டார். "அடேடே! சொன்ன நேரத்துக்குச் சரியாக வந்து விட்டாயே! தம்பி! பையை வாங்கிக் கொள்ளுமா. அந்தத் தம்பி சொன்ன மாதிரி, நல்ல கனம் போலே இருக்கிறதே! வாம்மா, உள்ளார போகலாம்," என்று அழைத்துச் சென்றார்.

'எந்தத் தம்பி?' என்று யோசித்தவாறே உள்ளே சென்றால், ஒரு சோஃபாவில் உட்கார்ந்து மணப்பெண் காயத்ரியோடு உரையாடிக் கொண்டிருந்தான் சசிகாந்தன்.

இங்கேயும் வந்துவிட்டானா? இங்கே என்ன திரிசமன் பண்ணி அவளுக்கு எரிச்சலூட்டப் போகிறான்? ஃபோட்டோ நன்றாக இல்லை என்று இவர்களைக் கிளப்பி விடுவானா?

முகத்தில் லேசான வெட்கச் சிவப்புடன் உட்கார்ந்திருந்த காயத்ரி, சாருமதியை கண்டதும், ஆவலோடு எழுந்தாள்.

"ஃபோட்டோ கேசட் எல்லாம் நன்றாக வந்திருக்கிறதா? நான், அவ... வந்து எல்லோரும்... எப்படி..." என்று பரபரப்புடன் வினவினாள்.

"உம்... நீங்கள், உங்கள் அவர், இன்னும் எல்லாருமே, பிரமாதமாகத் தெரிகிறீர்கள். நீங்களே பாருங்கள்," என்று முறுவலோடு கூறி, அவளுடைய சகோதரன் டீபாயின் மீது வைத்து, பையிலிருந்து வெளியே எடுத்துக் கொண்டிருந்த ஃபோட்டோ ஆல்பங்களைக் கை நீட்டிக் காட்டினாள் சாருமதி.

"ஃபோட்டோக்கள் வந்துவிட்டதா? சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கிறேன்."

முகத்தில் புன்னகை தவழச் சசிகாந்தன் கூறியது அவ்வளவுதான்.

ஆனால், "நீங்கள் முதலில் பாருங்கள், தம்பி!" என்று சிதம்பரம் சொல்லிக் கொண்டிருந்தபோதே, ஆல்பங்களைத் தூக்கி அவன் கையில் கொடுத்து விட்டாள் காயத்ரி.

கண்ணில் சிரிப்புடன் சாருமதியை ஒருதரம் பார்த்து விட்டு, ஆல்பங்களை மீண்டும் காயத்ரியிடம் கொடுத்தான் சசிகாந்தன். "இல்லையம்மா, முதல் உரிமை உனக்குத்தான். போய்த் தனியாக உட்கார்ந்து பார்த்து விட்டு, அப்புறமாகக் கொண்டு வா. அங்கே சிவா வீட்டில் எடுத்ததும் வந்திருக்கும். அதை அவனே கொண்டு வந்து, உன்னிடம் காட்டுவான் என்று நினைக்கிறேன். இரண்டு பேருமாகப் பார்த்துவிட்டு, அப்புறமாக எங்களிடம் காட்டுங்கள், போதும்," என்று அவளை அனுப்பினான்.



அத்தோடு நில்லாமல் அவளையும் ஒரு பார்வை பார்க்கவும்தான், சாருமதிக்கு எரிச்சல் வந்தது.

அது என்ன, மறுபடி மறுபடி அவளிடம் பார்வை விடுவது? எதற்காக? முன் தினம் அவன் கேட்டதும் ஃபோட்டோக்களைத் தர மறுத்ததைக் குத்திக் காட்டு-கிறானாக்கும்.

பார்... பார்... நேற்றுக் காட்டமாட்டேன் என்றாயே, இப்போது தானாகக் கையில் வந்து விழுந்தது பார்த்தாயா என்று எக்காளம் . அத்தோடு அப்படித் தந்ததைக்கூட என்ன பெருந்தன்மையாக விட்டுக் கொடுக்கிறேன் பார் என்று பெருமையும் காட்டுகிறான்.

பெரிய பெருமை. இதற்காகத்தான், இந்த நேரத்தில் இங்கே வந்து உட்கார்ந்து இருக்கிறானாக்கும்.

ஆனால், அவன் பெருமை காட்டியதில் ஒரு நன்மையும் இருக்கிறது.

ஃபோட்டோக்களையோ, வீடியோவையோ பார்த்து இது குற்றம், அது குறை என்று வக்கணை பேச வழியில்லை. அந்த மட்டும் புண்ணியம்.

இயன்றவரை தப்புத் தவறு இல்லாமல் கவனமாகச் செய்வதுதான், என்றாலும் குறை என்று கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு தேடத் தொடங்கினால் ஏதாவது கிடைக்காமல் போகாது. இவனோ, தப்பு இல்லாததைக்கூடத் தப்பாகக் கருதக் கூடியவன். நல்லவேளையாக அதற்கு வாய்ப்பு இல்லாமல் போயிற்று.

மாப்பிள்ளை வீட்டு மனிதர் என்று மரியாதை கருதி, காயத்ரி படங்களைச் சீக்கிரமாகப் பார்த்துவிட்டுச் சசிகாந்தனிடம் கொண்டு வந்து கொடுத்தாளானால்,

அந்த வாய்ப்பு ஏற்பட்டுப் போகும். எனவே அதற்கு முன்னதாகவே கிளம்பிவிடுவது மேல்.

கைப்பையைத் திறந்து பில்லை எடுத்துச் சிதம்பரத்திடம் கொடுத்தாள் சாருமதி.

"முன் பணம் போக, நீங்கள் எவ்வளவு தர வேண்டும் என்று கணக்கு எழுதியிருக்கிறேன், சார். அதை இப்போது சரி பார்த்துக் கொடுத்து விடுங்கள். எதிலேனும் அதிகப் பிரதிகள் வேண்டுமானால், குறித்துக் கொடுங்கள். போட்டுத் தருகிறேன். சிடிக்கு மாற்றியும் தரலாம். அதற்குரிய கட்டண விவரம் பில்லின் பின்புறம் இருக்கிறது," என்றாள் தெளிவாக.

கணக்கைப் பார்த்தபடியே, "என்னம்மா சரி பார்ப்பது? நீ என்ன தப்பாகவா எழுதியிருக்கப் போகிறாய்? தம்பி! அம்மாகிட்டே போய் இதிலே இருக்கிற தொகையை வாங்கி வா. அப்புறம் இந்தப் பாப்பாவுக்கு காப்பி பலகாரமும் அனுப்பச் சொல்லு," என்று மகனிடம் கூறி அனுப்பினார்.

"எனக்குக் காப்பியெல்லாம் வேண்டாம், சார். நான் உடனே போக வேண்டும்," என்றாள் சாருமதி.

"எப்படிம்மா உடனே போக முடியும்? பெரிய பிசினசு பேச வேண்டுமே!" என்றார் சிதம்பரம்.

"பெரிய... என்ன பேச வேண்டும்?"

"அதுதான்மா, கல்யாண வேலை. பெரியவங்க நல்ல பேர் வாங்கி விட்டவர்கள், அவர்களையே ஏற்பாடு பண்ணலாமேன்னு சொன்னேன் இல்லை... சின்ன செட் அருமையாகச் செய்கிறார்கள். எல்லாமே புது மாதிரியாகவும் நன்றாகவும் இருக்கிறது. அதனால் அவர்களையே ஏற்பாடு பண்ணுங்கள்னு மாப்பிள்ளை



வீட்டில் சொல்லுகிறார்களாம். அதைச் சொல்லத்தான் தம்பி இப்போது வந்திருக்கிறார்," என்று சசிகாந்தனைக் காட்டினார் சிதம்பரம்.

வியப்பும் மகிழ்ச்சியுமாகக் கூடவே, சந்தேகமாக விழி விரிய அவனைப் பார்த்தாள் சாருமதி.

இதைச் சொல்லவா சசிகாந்தன் வந்திருப்பான்?

ஊகூம். ஃபோட்டோ விஷயமாக அவளை மட்டம் தட்ட வந்தவன், இப்படி ஒரு சாக்கைச் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறான். இது உண்மை என்று நம்புவதற்கு இல்லை.

## 6

திருமணப் பொறுப்புகளையும் தங்களிடமே கொடுப்பது பற்றிய பேச்சை எப்படி நம்புவது என்று சாருமதி யோசிக்க, சிதம்பரம் அதைப்பற்றி மேலே பேசினார்.

"எனக்கு ஒரு குழப்பம், அம்மா. நிச்சயத்துக்கு எல்லோரும் சேர்ந்து மிஞ்சி மிஞ்சி எண்ணூறு பேர்தான் வந்தார்கள். கல்யாணத்துக்குக் குறைந்தாலும் நாலாயிரம் பேர் வருவார்களே! சின்னப் பிள்ளைகள் உங்களால் சமாளிக்க முடியுமா என்று கவலை. அதுதான் தயக்கமாக இருக்கிறது!" என்றார் அவர்.

வலியுறுத்திப் பேச சாருமதியின் நாக்கு துறுதுறுத்தது. ஆனால், சசிகாந்தனின் முன்னிலையில் அப்படிப் பேசவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. கூடவே, இது நிஜமாக இருக்காதோ என்று சந்தேகம் வேறு.

இந்த நேரத்தில் இங்கே வருவதற்காகச் சும்மாவேனும் அவன் கட்டிய கதை என்றால், இவள் பேசப் பேச, அவன் உள்ளூரச் சிரித்துக் கொண்டல்லவா இருப்பான். ஏனெனில், ஏதாவது ஒரு நிலையில் யாருக்கோ பிடிக்கவில்லை என்று இவர்கள் வேண்டாம் என்று விட்டுவிட முடியுமே.

எனவே சாதாரணமாகவே, "பாருங்கள், சார். இத்தனை பேருக்கு இவ்வளவு என்று இதெல்லாம் ஒருவிதக் கணக்குதானே? எங்கள் சௌபாக்கியத்தில்கூட நேரடியாக வேலை செய்கிறவர்கள் குறைவுதான். அந்தந்த வேலைக்குத் தக்கபடியே கூலி பேசி, தனித்தனிக் குழுக்களைத் தற்காலிகமாக அமர்த்திக் கொள்ளுவார்கள். இப்போது உங்கள் வீட்டு நிச்சயத்தின்போது நடந்ததே கூட்டுத் திருமணம். பத்தாயிரம் பேருக்கு விருந்து, அப்போதும் நிறையப் பேரைச் சேர்த்துக் கொண்டுதான் செய்தார்கள். அதே ஆட்களை நாங்களும் ஏற்பாடு செய்ய முடியும்... ஆனால் எங்களுக்குத் தலைவன் நிகில் அண்ணாதான். நீங்கள் இதை யெல்லாம் அவனிடம்தான் பேச வேண்டும். அண்ணனின் செல் எண்தான் உங்களிடம் இருக்கிறதே!" என்று முடித்துப் பொறுப்பிலிருந்து கழன்று ,கொண்டாள் அவள்.

இந்தப் பேச்சு உண்மை என்றால் நிகிலனிடம் பேசி முடிக்கட்டும். இல்லையென்றால் இத்தோடு போகட்டும்.

அதற்குள் பணத்துடன் முறுக்கும் காப்பியும் வந்து சேர்ந்தன.

பணத்தை எண்ணி வாங்கிக் கைப்பையினுள் பத்திரப் படுத்திவிட்டு, "தயவுபண்ணி, இப்போது காப்பி வேண்டாம், சார். இந்த முறுக்கு மட்டும் ஒன்று எடுத்துக் கொள்கிறேன்," என்று ஒரு முறுக்கைக் கையில் எடுத்துக் கொண்டு சாருமதி எழுந்தாள்.



"இன்னும் கொஞ்சம் ஒரு பையில் போட்டுத் தரச் சொல்லுகிறேன்," என்று சிதம்பரம் உபசரிக்க, அவள் மறுத்துக் கொண்டிருக்கும்போதே, கண்ணும் முகமும் மலர்ந்து பளபளக்க, காயத்ரி வந்து சேர்ந்தாள்.

அருகில் வந்து, சாருமதியின் கையைப் பிடித்துக் கொண்டு, "ரொம்ப அழகாக எடுத்திருக்கிறீர்கள், சாருமதி. அதிலும், அந்த சின்ன ஆல்பம் மிகவும் பிரமாதம். எனக்கு ரொம்ப பிடித்தது!" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

அதில் காயத்ரியையும், அவளுடைய வருங்காலக் கணவன் சிவாவையும் பல்வேறு கோணங்களில் ஜோடிப் பொருத்தம் பளிச்சென்று தெரியும்படியாகவும், அழகாகவும் சேர்த்து ஒட்டிக் கொடுத்திருந்தாள் சாருமதி. வருங்காலத் தம்பதியரின் மனநிலையைக் கலை நயத்தோடு, அவள் எடுத்துக் காட்டியிருந்த விதம்தான் காயத்ரியை மிகவும் கவர்ந்து, வெளிப்படையாகப் பாராட்ட வைத்தது.

அத்தோடு நில்லாமல் தந்தையிடம் திரும்பி, "அப்பா! திருமணத்துக்கும் ஃபோட்டோ, வீடியோ எல்லாம் இவர்களிடமே கொடுத்துவிடுங்கள், அப்பா!" என்றாள் கெஞ்சுதலாக.

"அது பற்றித்தான் கண்ணு பேசிக் கொண்டிருந் தோம்," என்று மலர்ந்த முகத்தோடு கூறினார் சிதம்பரம்.

ஒத்துக் கொண்டு விடலாமா என்று சாருமதி யோசிக்கும்போதே, "மாப்பிள்ளை வீட்டிலும் அதே போல நினைப்பதால்..." என்று அவள் தொடரவும், அவள் மீண்டும் பின்னடைந்தாள்.

முன்பணம் கொடுக்கும் வரையிலும், இந்தப் பேச்சை எந்த நிலையிலும் நிறுத்திவிட முடியும். பொதுவாக நம் பக்கத்துத் திருமணங்களில் மாப்பிள்ளை வீட்டாரின் வார்த்தைக்குச் சற்று அதிக மதிப்பு உண்டு. அதிலும் சிதம்பரம் அங்கே எள் என்றால் எண்ணெயாக நிற்கக் கூடியவர்.

எனவே தன் வரையில் வாயைவிடக் கூடாது என்று முடிவு செய்து, "அதுபற்றி நிகில் அண்ணனிடம் பேசுங்கள் என்றேனே, சார்!" என்று முடித்துவிட்டுச் சாருமதி கிளம்பினாள்.

"சற்றுப் பொறுங்கள், சாருமதி. வெயிலில் மெயின் ரோடுக்குப் போய்த்தானே, ஆட்டோ பிடிக்க முடியும்? வாருங்கள். நான் போகிற வழியில் உங்களை இறக்கி விட்டுப் போகிறேன்," என்று சசிகாந்தனும் எழுந்தான்.

மறுப்பது அசட்டுத்தனமாகத் தோன்ற, ஒப்புதலாகத் தலையாட்டினாள் சாருமதி.

கார் கிளம்பியதுமே, அவன் கேட்டுவிட்டான்.

"அவ்வளவு கணக்குப் பார்த்துப் பணத்தைப் பிடிவாதமாக வாங்கியதைப் பார்த்து, செய்கிற தொழிலில் பிரமாதமாக வருவாய் என்று நினைத்தேனே, ஆனால் நல்ல வாய்ப்பு வரும்போது, அதை உடனே பற்றிக் கொள்ளாமல் இப்படிப் பின்வாங்கினாய், ஏன்?"

"நல்ல வாய்ப்புதான் என்று எப்படி நம்புவது?" என்றாள், அவள் சுருக்கமாக.

ஆச்சரியமாக அவளைத் திரும்பிப் பார்த்தான் சசிகாந்தன். "நல்லவாய்ப்பு என்று நம்ப முடியவில்லையா? எவ்வளவு பெரிய திருமணம்! இது நல்ல வாய்ப்பாகத் தெரியவில்லையா? அதிலும் மணமகன் வீட்டிலும் ஒத்துக் கொள்ளும்போது."



"அப்படி யென்று யார் சொல்வது?"

"நான்தான்..." என்று தொடங்கியவன் சட்டெனச் சிரித்தான். "ஓகோ... அதுதான் சந்தேகமா? ஃபோட்டோவை வாங்கி அசடு வழிய வைத்த மாதிரி இன்னும் ஏதோ என்று எண்ணி விட்டாய் போல!" என்று விஷயத்தைக் கண்டுபிடித்து அவன் சிரிக்கவும், அவள் முகத்தில் மெய்யாகவே அசடு வழிந்தது.

சிரிப்பைச் சீக்கிரமே நிறுத்திக் கொண்டு, "கடவுளே! அப்படியெல்லாம் எதுவும் இல்லையம்மா. மெய்யாகவே நீங்கள் செய்த எல்லாமே எங்கள் குடும்பங்களில் எல்லோருக்குமே பிடித்தது. பெரிதாக வரவேற்பதாக எண்ணிக் கொண்டு ஏர்கூலரில் சென்டை வைத்து முகத்தில் அடிக்காமல் மேற்புறமாக அடித்து இதமாக வாசனை வர வைத்தது, நிச்சயத்துக்கு அடையாளமாகப் பின்னணியில் மோதிரம் போடுவது போலப் பூ அலங்காரம் செய்தது. கிளி மாதிரி, பீடா வைத்தது... எல்லாவற்றிலும், ஒரு லயத்துடன் கூடிய புதுமை இருந்தது. எல்லோருக்குமே பிடித்தது. இங்கெல்லாம் செலவைவிட இது போன்ற புதுமைகளுக்கு அதிக மதிப்புக் கொடுப்பார்கள். ஆனால் சின்னவர்களாக இருக்கிறீர்களே—பெரிய அளவில் முடியுமா என்று சிதம்பரம் அங்கிளைப் போல இங்கேயும் கொஞ்சம் சந்தேகம்தான். பெரியவர்கள் உதவி இருக்கும் என்று சொல்லி..."

"யார் அப்படிச் சொன்னார்கள்?" என்று தலை திருப்பி அவனைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

நேராகப் பார்த்தபடி காரை ஓட்டினான் சசிகாந்தன். "கேள்விப் பட்டதை யார் வேண்டுமானாலும்தான் சொல்லுவார்கள். இப்போது, அதுவா முக்கியம்? அப்படிக் கிடைக்கிற வாய்ப்பை விடுவார்களா?"

இவன்தான் சொல்லி யிருப்பானோ என்று அவளுக்குத் தோன்றியது. தெரிந்து கொள்ள ஆசையாக இருந்தாலும், கிடைக்கிற பதில் மெய்யாக இருக்கும் என்று என்ன நிச்சயம்?

"விடவில்லையே, அண்ணன் பேசி முடித்து விடுவான்," என்றாள் அவள், முன்போலச் சாதாரணமான குரலிலேயே.

"ஆனால், கிடைத்த வாய்ப்பைப் பற்றிக் கொள்ளவும் இல்லை."

"மெயின் ரோடு வந்துவிட்டது," என்றாள், அவள் - இறங்க ஆயத்தம் செய்தபடி.

"பரவாயில்லை. உன் ஸ்டுடியோவிலேயே இறக்கி விட்டு விடுகிறேன்."

"அது நகரத்தின் அடுத்த மூலையில் இருக்கிறது."

"சும்மா கதை! உன் அத்தை மகன் ரத்தினம், அந்த ஓட்டைச் சல்லடை அன்று எல்லாவற்றையும் சொல்லி விட்டான்!" என்று இலகுவாக இயம்பினான் அவன்.

சாருமதி உதட்டைக் கடித்துக் கொண்டே பேசா திருக்கவும், "இதில் என்ன இருக்கிறது சாருமதி? சொல்லப் போனால் உன் சன்னியை ரிப்பேராக்கியவன் நான். பழுது பார்க்கும் செலவை மட்டும் கொடுத்தால் போதுமா? அந்த வண்டி இல்லாததால்தானே நீ ஆட்டோவுக்குச் செலவு செய்ய நேருகிறது. நியாயத்துக்கு அந்தப் பணத்தையும் நான்தானே தர வேண்டும். பதிலாக, ஒரு தரம் உன்னைக் காரில் கொண்டு விடுகிறேன். அவ்வளவு தானே? இதற்குப் போய் இவ்வளவு சங்கடப் படுவானேன்?" என்று இதமாகவே கேட்டான்.



அன்று ஆட்டோ ரிக்ஷாவில் வரும்போதும், வந்ததற்கான பணத்தைக் கொடுக்கும்போதும், சாருமதி இதையேதான்... இந்த ஆட்டோ செலவைக் கொடுக்க வேண்டியவன் சசிகாந்தன்தான், அநியாயமாகக் கையிலிருந்து பணம் போகிறது என்று நினைத்தாள் தான்.

ஆனால், அவனாக அதையே கூறியபோது, அப்படி யெல்லாம் இல்லை என்று மறுக்கத் தோன்றியது.

மனதில் இருந்ததைச் சொல்ல வாயைத் திறக்கும் போது, "ஒருவேளை என்னோடு தனியாகக் காரில் வரு வதைக் கண்டால் யாரேனும் தப்பாக எண்ணிவிடுவார்கள் என்று பயமா? அப்படித் தப்பாக நினைக்கக்கூடியவர் யாரும் இருப்பதாக உங்கள் வீட்டு ஓட்டை வாய் சொல்லவே இல்லையே. அப்படி ரஞ்சனுக்கும் தெரியாத ரகசியமா?" என்று சசிகாந்தன் கேலி பேசவும், உண்மை புரியாமல் என்ன பேசுகிறான் என்று அவளுக்கு ஆத்திரம் வந்தது.

"ஆமாம்," என்று அவள் அழுத்தம் திருத்தமாகச் சொன்ன விதத்தில் அவன் திகைக்கவும்தான் சாருமதிக்குக் கொஞ்சம் திருப்தியாயிற்று.

என்னவோ அவளைப் பற்றி எல்லாம் தெரிந்த மாதிரி அலட்டுகிறானே, இப்போது திணறட்டும்.

தொடர்ந்து, "அதனால் என்னை இங்கேயே இறக்கி விட்டு விட்டால் நன்றாகவும் இருக்கும்," என்றாள் எடுப்பாக.

இப்படிப் பேசுகிறவனோடு காரில் போவதைவிட நடக்கலாம்.

இந்தக் கொளுத்தும் வெயிலில்கூட...

ஆனால், "இவ்வளவு நேரம் வந்ததில் தப்பாக ஆகாதது, இன்னும் சற்று நேரத்தில் ஒன்றும் ஆகி விடாது!" என்று கூறி, அவளது அலுவல் இடத்திலேயே காரைக் கொண்டு நிறுத்தினான் அவன்.

காரை விட்டு இறங்கியதுமே, "உங்களுக்கு நிறைய வேலை இருக்கும். உடனே கிளம்பினால்கூட நான் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டேன். ஆனால் வேறு வேலை இல்லை, பரவாயில்லை என்றால் உள்ளே வரலாம்," என்று குறிப்பாக அவனைக் கிளம்பச் சொன்னாள் சாருமதி.

காரைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு, "எனக்கு மரங்களை ரொம்பப் பிடிக்கும்!" என்றான் சசிகாந்தன்.

சாருமதி திகைத்து நோக்கவும், "அதாவது நல்ல மரங்களை!" என்றான் அவன் தொடர்ந்து. "அதனால் சில சமயங்களில் நல்ல மரம் போல நடந்து கொள்வேன்," என்று விளக்கமாக எடுத்துரைத்தான்.

'குறிப்பறிய மாட்டாதான் நன்மரம்' என்ற சொற் றொடர் நினைவு வர, குபுக்கெனச் சிரிப்பு வந்தது சாருமதிக்கு.

கூடவே வெயிலில் கஷ்டப்படாமல் ஏசி காரில் இவ்வளவு தூரம் கொண்டு வந்து விட்டவனைப் போகச் சொன்னோமே என்ற கழிவிரக்கமும் ஏற்பட்டுவிட, லேசாக முகம் கன்றியபோதும், சிரிப்பு மாறாமல், "உள்ளே வாருங்கள்," என்று அழைத்துச் சென்றாள்.



சாருமதியின் ஸ்டுடியோ எந்த நேரமும் சுத்தமாகத் தான் இருக்கும். அவளது உதவியாளாக வைத்திருந்த பெண் வேணி அந்த அளவுக்குச் சுத்த வெறி பிடித்தவள். சுத்தம் செய்வது அவளது பொறுப்பு அல்ல என்றாலும் மற்ற வேலை முடிந்துவிட்டால் எப்போதும் துடைக்கிற துணியோடுதான் இருப்பாள்.

எனவே யாரை என்றாலும், எப்போது வேண்டு மானாலும், சாருமதி தைரியமாகத் தன் இடத்துக்குக் கூட்டிப் போக முடியும். அவ்வாறே சசிகாந்தனையும் அழைத்துப் போனாள்.

வேணி குளிர்பானம் வாங்கி வரவா என்று கேட்டதை அவனே மறுத்துவிட்டு இங்குமங்கும் சுற்றிப் பார்த்தான்.

"ஓரளவுக்கு இந்த இடம் போதும். பெரிய அளவில் ஏதாவது வேலை வந்தால்... அப்போது என்ன செய்வாய்?" என்று கேட்டான்.

அதாவது காயத்ரி - சிவா திருமண வேலையைக் கொடுத்தால், எப்படிச் சமாளிப்பாய் என்று கேட்கிறான். ஆட்களே கூடுதலாகத் தேவைப்படுமே.

அவனது குறிப்பைக் கண்டு கொள்ளாத மாதிரி, "பெரிய வேலைகள் வரும்போது என் சினேகிதனிடம் பாதி வேலையைச் செய்யச் சொல்லிவிடுவேன். அவனும் அப்படித்தான்," என்றாள் அவள்.

"சினேகிதன்? ரஞ்சன் அறியாத அந்த சினேகிதன்?"

"இ- அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்கள்."

"வைத்துக் கொள்வது என்றால்? இன்னமும் உனக்கே உறுதிப்படவில்லையா?"

"ரஞ்சனுக்கே தெரியாது. உங்களிடம் எதற்குச் சொல்ல வேண்டும்?"

"ரஞ்சனுக்கு மட்டும்தான் தெரியாதா? அல்லது, உனக்குமே அப்படித்தானா?"

"அனாவசியமாகச் சிலர் தொணதொணக்கும்போது நான்கூட மரமாகி விடுவேன். காது கேளாத மரம்."

லேசாகச் சிரித்துவிட்டுச் சசிகாந்தன் கிளம்பினான்.

ஏதோ யோசித்தபடி தன் மேஜையின் இழுப்பறையைத் திறந்து பார்த்துவிட்டுச் சற்றுநேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தாள் சாருமதி.

## 7

தொடர்ந்த சில தினங்கள், சாருமதிக்குச் சற்று ஒளி மழுங்கினாற்போலத் தோன்றின.

நிகிலனுக்கு ஃபோன் செய்து பேசி, மகளின் திருமணத்துக்குச் சிதம்பரம் தங்களை ஒப்பந்தம் செய்தது கூட, அந்த ஒளி மழுங்கலை அடியோடு விரட்டி விடவில்லை.

'சன்னி' பழுது பார்க்கப்பட்டுப் புது வண்டி மாதிரித் திரும்பி வந்ததும், உற்சாகத்தை மீட்டுத் தரவில்லை.

"என்ன மேடம் ஏதாவது பிரச்சனையா? வர வேண்டிய பணம் ஏதாவது வராது போல இருக்கிறதா? அல்லது வீடியோ காமிரா பழுது ஏதாவது ஆகி விட்டதா?" என்று விசாரித்தாள், உடன் இருந்து பணி புரியும் வேணி.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை!" என்று ஏதோ கவனமாகப் பதிலுரைத்தாள் சாருமதி.



"பின்னே, உடம்புக்கு ஏதாவதா?" என்று வேணி மீண்டும் துருவவே, "அப்படி ஒன்றும் இல்லையே, ஏன் கேட்கிறாய்?" என்று பதில் கேட்டாள் முன்னவள்.

"நாலைந்து நாட்களாக, ஒரே டல்லாக இருக்கிறீர்களே என்றுதான் கேட்டேன். முன்னெல்லாம் நீங்கள் உள்ளே வரும்போதே, அறையே பிரகாசமாகிவிட்டது போலப் பளீர் என்ற சிரிப்புடன் வருவீர்கள். இப்போது என்னவோ கடனே என்று புன்னகை செய்கிற மாதிரி இருக்கிறது. மனதிலோ உடம்பிலோ ஏதோ சரியில்லை போலத் தோன்றியதால் கேட்டேன்," என்று சிறு வருத்தத்துடன் கூறினாள் அந்தப் பெண்.

வீட்டில் தாயார், "ஏண்டா சரியாகச் சாப்பிடவில்லை?" என்று கேட்பது சரிதான். பெற்றவள் கண்ணுக்குக் கூர்மை அதிகம்.

ஆனால் ஓரளவு பாசமாகப் பழகுகிறவள்தான் என்றாலும், அவளிடம் வேலை பார்க்கிற ஒருத்தி கண்டுபிடிக்கிற அளவிலா நடந்து கொண்டிருக்கிறாள்?

சொல்லப் போனால், இது ஒன்றுமே இல்லை. உப்புப் பெறாத விஷயம். வெறும் சலனம். இதைப் போய் மனதில் உருட்டிப் புரட்டி மட்டுமில்லாமல், என்ன என்று மற்றவர் கேட்கும் அளவுக்கு விட்டு விட்டாளே.

தன்னைத்தானே சுதாரித்துக் கொண்டு, "ஐயோ, அது என்ன என்று உனக்குத் தெரியாதா? பல்செட் வேணி, பல்செட். முன்பு நான் அணிந்திருந்த பல்செட்டில் நூறு வாட் பல்ப் போட்டிருந்ததா? சிரிக்கும்போது பளீர் என்று ஒரே பிரகாசம். ஆனால் சூடு அதிகமாகி வாயெல்லாம் ஒரே புண்ணாகி இப்போது ரிப்பேருக்குக் கொடுத்திருப்பதால்..." என்று அவள் சொல்லச் சொல்ல வேணி விழுந்து விழுந்து சிரிக்கலானாள்.

விஷயம் அத்தோடு முடிந்துவிட, சாருமதியும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தியதால் மேற்கொண்டு பிரச்சனைகள் எழவில்லை.

அப்போது ஒரு நாள், "மேடம்! உங்களைத் தேடி ஒருவர் வந்தார். பெயர் சசிகாந்தன் என்று சொன்னார்," என்று வேணி கூற, நிஜமாகவே நூறு வாட் பல்ப் போட்ட மாதிரி, சாருமதியின் முகம் பிரகாசமுற்றது.

ஆனால், வேணியின் பார்வையில் ஆர்வம் தோன்றவும், சட்டென்று சுதாரித்து, "என்ன பெயர்? சசி...சசிநந்தன் என்றுதானே சொன்னாய்? வெ...ள்ளைத் தாடியும், மீசையுமாக, அவர்தானே? அவருடைய பெண்ணுக்கோ... பேத்திக்கோ... அவரது நரைக்கு, அது பேத்தியாகத்தான் இருக்க வேண்டும். அவளுக்கு வளைகாப்பு என்று இரண்டு கேசட் வீடியோ எடுக்க வேண்டும் என்று சொன்னார். அப்புறம் சிடியில் வேறு இரண்டு மூன்று காப்பி வேண்டுமாம். நல்ல பிசினஸ் ஃபோட்டோ வேறு. அவர் என்ன சொன்னார்?" என்று ஆர்வம் காட்டி விசாரித்தாள்.

ஆனால், வேணியின் முகம் கூம்பி விட்டது.

"அய்யய்யோ. அந்த மாதிரி யாரும் வரவில்லையே மேடம். அடடா.. அவர் வேறு யாரையும் ஏற்பாடு செய்து விட்டாரோ? நீங்கள் வேண்டுமானால் அவருக்கு ஃபோன் பண்ணிப் பாருங்களேன். நல்ல பிசினஸ் போலத் தெரிகிறதே," என்று அங்கலாய்த்தாள்.

ஆனால் சசிநந்தன் என்று ஒருவர் இருந்தால் அல்லவோ அவருக்கு ஃபோன் பண்ண முடியும்? ஆனால் அதை வேணியிடம் இப்போது சொல்ல முடியுமா?



தன் கதையை நம்பி, அவள் புலம்புவதைக் கண்டு, தன்னை மீறிச் சிரிப்பு வந்தபோதும், அதை அடக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயம் சாருவுக்கு. கூடவே சசிகாந்தனைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் வேறு. அதையும் அளவு மீறிக் காட்டி விடாமல் அடக்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

"ச்சு... அதற்காக வேண்டாம் என்று போகிறவர்களின் பின்னோடு போய்ப் பிச்சை கேட்கவா முடியும்? விடு, வேணி. ஒன்று போனால் இன்னொன்று. ஒரு நந்தன் போனால் இன்னொரு காந்தன் வராமலா போவார்? சொல்லு. இங்கே யாரோ வந்ததாக நீ சொன்னாயே, அந்த நரைத்தலை ஆள் இல்லை என்றால் வேறு யார்? பாதி நரையா அல்லது நரைப்பதற்கு முடியே இல்லையா?" என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

"அச்சோ, அது போலவெல்லாம் இல்லை, மேடம்," என்று அவள் எதிர்பார்த்த விதமாகவே வேணி விவரிக்கத் தொடங்கினாள். "நல்ல கறுப்பாய் பளபள என்று சினிமா ஹீரோ மாதிரி கிராப்புத் தலை, மேடம். முன்னே உங்களைக்கூட ஒரு தரம் இங்கே கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனாரே... உங்கள் சன்னி ரிப்பேராக இருந்த போது.." என்று நினைவூட்ட முயன்றாள் வேணி.

ஆனால் மறந்தவருக்கு அல்லவா நினைவுபடுத்த முடியும்.

யோசிப்பது போலப் பாவனை செய்துவிட்டு, தோளைக் குலுக்கிக் கையை விரித்தாள் சாருமதி. "ஊகூம். நினைவு வரவில்லை. மேலே சொல்லு. நினைவு வருகிறதா என்று பார்ப்போம்."

அப்பாவியாக அவள் விவரிப்பதை உள்ளூரச் சிரிப்பும் ரசனையுமாகக் கேட்டிருந்துவிட்டு, "ம்ம்ம்... நீ

சொல்வதைக் கேட்டால் ஏதோ கொஞ்சம் நினைவு வருகிற மாதிரிதான் இருக்கிறது. ஆமாம், அவர் இங்கே எதற்காக வந்தாராம்?" என்று மேற்கொண்டு விசாரித்தாள் சாருமதி.

"அவர் அதைச் சொல்லலியே, மேடம்," என்றாள் வேணி. "ஏதோ படம் எடுக்கிற வேலையாக உங்களைப் பார்க்க வந்ததாகத்தான் முதலில் சொன்னார். நீங்கள் வருகிறவரை காத்திருப்பதாகச் சொன்னார். எனக்கும் ரிப்போர்ட் அடிக்க வேண்டியிருந்தது. அதனால் கையில் கிடைத்த இரண்டு ஆல்பம் கேசட் எல்லாம் கையில் கொடுத்துப் பார்த்துக் கொண்டு இருக்கச் சொல்லிவிட்டு என் வேலையைப் பார்த்தேன். அதை யெல்லாம் பார்த்தபடி ஒரு முக்கால் மணி நேரம் காத்திருந்தார், மேடம். அப்புறம் வேலை இருப்பதாகச் சொல்லிப் போய்விட்டார். ஃபோன், செல்ஃபோன் நம்பர் கேட்டேன். இந்த விஷயம் நேரில்தான் பேச வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனார். ஆனால் ஒன்று சொல்ல வேண்டும், மேடம். ஆள் ஹீரோ மாதிரி அழகாக இருப்பது பெரிதில்லை. ஆனால் அவ்வளவு நேரம் விருதாவாகக் காத்திருந்துவிட்டு, கொஞ்சமும் அலுப்புக் கொட்டாமல், சிரித்த முகத்துடனேயே மீண்டும் வந்து பார்ப்பதாகச் சொல்லி விட்டுப் போனார், பாருங்கள். அதைப் பாராட்டியே தீர வேண்டும்," என்று முடித்தாள் அவள்.

சசிகாந்தனைப் பற்றிக் கேட்கக் கேட்க, சாருமதி உள்ளூரப் புளகாங்கிதம் அடைந்தாள். அவளது ஒவ்வொரு நாடி நரம்பிலும், மகிழ்ச்சி ஊற்றாய்ப் பெருகிய விதம், அவளுக்கே ஆச்சரியத்தை அளித்தது.



அந்த மகிழ்ச்சி, ஆச்சரியம் அனைத்தையும் வேணிக்குக் காட்டாமல் அவள் அடக்கி வைத்தாக வேண்டியிருக்கிறது.

இப்போது பெரிதாக என்ன நடந்துவிட்டது? ஒன்றுமே இல்லை.

வீடியோவோ, ஃபோட்டோவோ ஏதோ எடுக்க வேண்டிய நிலைமை அவனுக்கு. காயத்ரி நிச்சயப் படங்களைப் பார்த்திருப்பான். இதையும் சாருமதியைக் கொண்டே செய்யலாம் என்று எண்ணியிருப்பான்.

அவனுக்கு ஒரு வேலை நடக்க வேண்டும். அவளுக்கு ஒரு தொழில் வாய்ப்புக் கிடைக்கிறது. அவ்வளவுதான் விஷயம்.

இதில் சாருமதி இவ்வளவு சந்தோஷப்பட, ஒன்றும் இல்லை.

தனக்குத் தானே அறிவுறுத்திக்கொண்டு, "அவர்தான் மீண்டும் வந்து பார்ப்பதாகச் சொல்லியிருக்கிறாரே, வரட்டும் பார்க்கலாம்," என்று இயன்றவரை சாதாரண-மாகக் கூறி முடித்தாள் சாருமதி.

ஆனால், வேணி விடுவதாக இல்லை.

"அதில்லை, மேடம். அந்த சசிநந்தன் மாதிரி இவரும் வேறு ஆளைத் தேடிப் போய்விட்டால் என்ன செய்வது? நீங்களே கொஞ்சம் ஃபோன் பண்ணிப் பாருங்க, மேடம்," என்று வற்புறுத்தினாள். "அந்த சசிகாந்தனுக்கு ஒரு தரமேனும் ஃபோனாவது பண்ணிப் பார்த்தால் ஒரு வேளை பலன் கிடைக்கலாம்," என்று அவள் யோசனை சொல்ல, சிரிப்பை அடக்குவது சாருவுக்குக் கடினமாகிப் போயிற்று.

அப்போதும், அவள் முகத்தில் எதையோ கண்டு, "மேடம்! பல்லில் திரும்பவும் லைட் போட்டுவிட்ட மாதிரி இருக்கிறதே!" என்றாள் வேணி.

"பின்னே? பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் நமக்கு பிசினஸ் தர முன் வந்தால், மகிழ்ச்சியாக இராதா?" என்று கேட்டுச் சமாளித்தாள் சாருமதி.

கூடவே, 'என்ன இது? பைத்தியம் மாதிரி, எதற் கெடுத்தாலும் இப்படிச் சிரிப்பு வருகிறது!' என்று யோசனையும் வந்தது.

சசிகாந்தன் அவளைத் தேடி வந்தான் என்ற ஒரு சாதாரண நிகழ்ச்சி, அதற்குப் போய் இவ்வளவு குதூகலப் படுவது ரொம்பத் தப்பு.

அதிலும், அவன் வந்ததற்கு ரொம்பவும் சாதாரண மான காரணம் இருக்கிறது என்று தெரிந்த பிறகும், மிதமிஞ்சி மகிழ்வது பைத்தியக்காரத்தனம்தான்.

இதற்கு மாற்று ஏதாவது செய்தே ஆக வேண்டும்.

"நான் டார்க் ரூமில் வேலை செய்யப் போகிறேன். இங்கே என்ன வேலை என்றாலும் நீயே பார்த்துக் கொள்!" என்று பணித்துவிட்டு, படம் எடுத்திருந்த சில புகைப்படச் சுருள்களைக் கையில் எடுத்துக் கொண்டு சாருமதி கிளம்பினாள்.

மனக் குழப்பத்துக்கு நல்ல மருந்து, மூச்சுவிட அவகாசம் இன்றி வேலை செய்வதுதானே? படம் பிடித்த சுருள்களைக் கழுவி, டெவலப் செய்து, கிளிப்களில் மாட்டித் தொங்கவிட்டு, ஃபிலிம் கழுவிய தண்ணீரைத் தனியே ஊற்றி வைத்தாள். வேலை முடிந்து செல்லும் போது, அதை வேணி வீட்டுக்கு எடுத்துச் சென்று விடுவாள்.



அதில் காஸ்டிக் சோடா சேர்த்து, அவளுடைய தாயார் வெள்ளி பிரித்தெடுப்பாளாம். தூரக் கொட்டுவது. கொண்டு போய்ப் பணம் பண்ணட்டுமே என்று சும்மாவே கொடுத்து விடுவாள் சாருமதி. அதற்காகத்தானோ என்னவோ, வேணியும் இழுத்துப் போட்டுக் கொண்டு இல்லாத வேலை செய்வாள்.

வேலை முடிந்து வெளியே வந்தால் பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது.

ஒருவேளை சசிகாந்தன் வந்தால், அவன் வந்த நேரம் அவள் இல்லை என்று ஆகிவிடக்கூடாது என்பதற்காக, அன்றைய இரவு ஏழு மணி வரை உட்கார்ந்து வேலை செய்துவிட்டுக் கிளம்பினாள்.

அதற்கு மேல் தாமதம் ஆனால், தாயாரிடம் பாட்டுக் கேட்க வேண்டும்.

மறுநாளும், காலை எட்டு மணிக்கே வந்து ஸ்டுடியோவைத் திறந்தவள் அங்கேயே பழி கிடந்தாள்.

விஷயம் புரியாமல் வேணிகூட, "மேடம்! ஃபோட்டோ ஃபிலிம் மொத்தமாக வாங்கி வரப் போவதாகச் சொன்னீர்களே, கிளம்பவில்லையா?" என்று அநியாயமாக இரண்டு முறை நினைவுபடுத்தினாள்.

"நல்ல ஃபிலிம் வரவில்லையாம், வேணி. உயர்ந்த ரகம் வந்த பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்," என்று சமாளித்தாள் சாருமதி.

இருந்து இரண்டு சசிகளுக்கும் ஃபோன் செய்யும்படி மீண்டும் வேணி அவளைத் தொணதொணத்தாள்.

செல்லை எடுத்து ஏதோ பேசிவிட்டு, கொஞ்சம் பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தாள், சாருமதி.

"நல்ல ஃபிலிம் வந்து விட்டதாம். நீ போய் வாங்கி வந்துவிடு!" என்று வேணியை வெளியே அனுப்பினாள்.

அவள் சென்ற பிறகு, 'அடடா, ஏன் அனுப்பினோம்? அவள் இருந்தால் ஏதாவது தொணப்பிக் கொண்டாவது இருப்பாளே!' என்று தோன்றியது.

ஆனால் அன்றும் மாலைவரை சசிகாந்தனிடம் இருந்து ஒரு தகவல் இல்லாது போகவே, மீண்டும் அவள் முகம் வாடலாயிற்று.

எப்படியோ தொலையாப் பகல் ஒருவாறு முடிவடைகிற நேரத்தில் சசிகாந்தன் செல்லில் அவளை அழைத்தான்.

அவன் அழைத்தால் எப்படிப் பேச வேண்டும் என்று சாரு ஏற்கெனவே திட்டமிட்டு வைத்திருந்தாள்.

ஆனால் அதன்படி விருப்பு வெறுப்பற்ற குரலில் பேச முயன்றாள். வார்த்தைகள் தடுமாறின. "நா... நான் சாருமதி பே... பேசுகிறேன்..." என்று லேசாகத் திக்கினாள். ஆனால் உடனே சமாளித்து, "நேற்றுகூட வந்திருந்தீர்கள் போல... என்ன விஷயம்? அந்த நிச்சயதார்த்தப் படங்கள் ஏதும் அதிகப்படிப் பிரதிகள் வேண்டுமா?" என்று நிதானமாக வினவினாள்.

"தொழில் விற்பன்னி ஸ்டுடியோக்காரம்மாவாகப் பேசுகிறீர்களாக்கும்!" என்று சிரித்தான் சசிகாந்தன்.

கிண்டலா என்று எண்ணும்போதே இயற்கைக் குணம் கை கொடுக்க, "ஸ்டுடியோக்கார அம்மாவிடம் தான் பேச வேண்டும் என்று, வந்த விவரத்தைத் தன்னிடம் சொல்லாமலே நீங்கள் போய்விட்டதாக வேணி சொன்னாள், அதற்காகத்தான்!" என்றாள் சாருமதியும், அவனைப் போலவே.



"இல்லாவிட்டால் . . ?"

சாருமதிக்குச் சற்று மூச்சடைத்தது.

சசிகாந்தனின் பேச்சில் ஏதோ ஒரு வேறுபாடு... இரண்டொரு முறை சந்தித்தவனை விடவும் சற்று அதிக நெருக்கம்... உரிமை தெரிவது போலத் தோன்றியது.

அவன் சற்று இலகுவாகப் பேசுகிறவன்தான். ஆனாலும்...

"என்ன பதிலையே காணோம்?"

ஒருவாறு சுதாரித்து, "நீங்கள் கேட்பது புரிந்தால் அல்லவா, பதில் சொல்ல முடியும்?" என்றாள் அவள் மிடுக்காக.

"புரியாமல் போவானேன்? உன் வேலை விஷயமாக வராமல் சும்மா வந்திருந்தால் வேறே எந்த மாதிரிப் பேசுவாய் என்று கேட்டேன். விளக்கம் போதுமா?"

அவனது விளக்கத்தில் சாருவுக்கு மீண்டும் மூச்சடைத்தது.

## 8

கேலியும் கிண்டலுமாகச் சாருமதியின் வட்டத்திலும் பேசுவதுதான். ஏதாவது வேலை சொல்லி, அதற்காகத் தேடினேன் என்றால் 'இந்த வேலைக்காகத் தானா... நான் என்னவோ நினைத்தேனே!' என்று பெருமூச்சுவிடுவதும் 'வேறு நீ எதற்கு லாயக்கு?' என்று திருப்புவதும், 'போச்சுடா!' என்று கூட இருப்போர் நகைப்பதும்கூட நடப்பதுதான்.

ஆனால், அது உடன் படித்து நன்கு பழகிய நண்பர் களிடையேதான். வேறு யாரேனும் மூக்கை நீட்டினால் நண்பர்கள் வட்டமே விரட்டிவிடும்.

தனியாக அவள் அப்படி யாரிடமும் பேசிக் கொண்டு இருப்பதும் இல்லை.

இப்போது சசிகாந்தனுடன் பேசுவது நன்றாகத்தான் இருந்தது. ஆனாலும், அவனைப் பற்றி எதுவும் தெரியாத நிலையில், இது போன்ற பேச்சு நல்லதில்லை என்று எண்ணி, "எதற்கு சார் அனாவசியப் பேச்சு? ஒரு திருமணத்தில் உட்கார்ந்து சாப்பிட நேரம் இல்லாமல் ஓடுகிற அளவு உங்கள் நேரம் பொன்னானது. அப்படி யிருக்க நீங்களாவது சும்மா வருவதாவது? சொல்லுங்கள். உங்களுக்கு நான் என்ன வேலை செய்து தர வேண்டும்?" என்று அவனைச் சாதாரண வாடிக்கையாளராக்கிப் பதில் சொன்னாள் சாருமதி.

"பெயரில் மட்டும் 'மதி' இல்லை. மண்டை யோட்டுக்கு உள்ளேயும் இருப்பது தெரிகிறது. மற்றப்படி, ஒரு பின்வாங்கலை இவ்வளவு நாசூக்காக வேறு யாராலும் செய்ய முடியாது!" என்றபோது அவன் குரலில் சிரிப்பு இருந்தது.

சூடான கன்னத்தில் கை வைத்துப் பார்த்துவிட்டு, நல்ல வேளையாக அவன் டெலிஃபோனில் பேசிக் கொண்டு இருக்கிறான், முகத்தைப் பார்க்க முடியாது என்று ஆறுதல் அடைந்தாள் சாருமதி.

சும்மா இருந்தால் அவன் பேச்சை ஒப்புவது போல அல்லவா ஆகும். "பின் வாங்கவும் முன்னே செல்லவும் நாம் என்ன போரா நடத்துகிறோம்? இல்லையே, சொல்லுங்கள் சார், என்ன மாதிரிப் படம் எடுக்க



வேண்டும்? ஃபோட்டோவா? அல்லது வீடியோவா?" என்று செய்தொழில் பேச்சைத் தொடங்கினாள் அவள்.

சசிகாந்தனும் அதற்கு மேல் அவளைத் திணறடிக்-காமல் வேலை விவரம் சொன்னான்.

அவனது அலுவலகத்தில் ஒரு விழாவாம். அதற்கு வீடியோ ஃபோட்டோ பொறுப்பை அவள் ஏற்க வேண்டுமாம்.

"அன்று கையெழுத்திடப் போனேனே, நினை விருக்கிறதா? அதற்குத் தொழிற்சாலையில் வேலை தொடங்கப் போகிறோம். நீ மட்டும் சமயத்தில் உன் சன்னியைத் தந்து உதவியிரா விட்டால், இந்த விழாவுக்கு வாய்ப்பே இருந்திராது. அதனால் விழாவைப் படம் எடுக்கும் பொறுப்பை உன்னிடம்தான் கொடுக்க வேண்டும் என்று எண்ணினேன். விழா முடிந்ததும், அப்படியே எங்கள் வீட்டில் அந்த ஜப்பானியருக்கு ஒரு விருந்து வைக்கப் போகிறோம். அதையும் எடுக்க வேண்டும். அவர்களுக்கு உச்சி குளிர்கிற மாதிரி எடுக்க வேண்டும். அதாவது சிவா நிச்சயத்தில் என்னை எடுத்த மாதிரி."

"அது காயத்ரி அப்ப அப்படி எடுக்கச் சொன்னார்," என்றாள் அவள் அவசரமாக. "பணம் கொடுக்கிறவர் சொல்லுகிற மாதிரிதானே படம் எடுக்க வேண்டும்?"

"நான் உன்னைத் தப்பு சொல்லவில்லை, சாருமதி. அந்தப் படங்களை எப்படி நூறு சதவீதம் திருப்தி ஏற்படும் விதமாக எடுத்தாயோ, அதேபோல இதையும் செய்து கொடு என்றேன் அவ்வளவே. நாளை மாலை என்னோடு வருகிறாயா? எந்தெந்த இடங்களில் எப்படி எப்படி எடுத்துத் தர வேண்டும் என்று காட்டுகிறேன்," என்றான் அவன்.

"எத்தனை மணிக்கு?"

"எத்தனை மணிக்கு உனக்கு வசதிப்படும்? என்னைப் பொறுத்தவரை அலுவல் முடிந்து கிளம்புவதற்கு இந்த நேரம்தான் சரியாக இருக்கும். உனக்கு..."

சுவரில் மாட்டியிருந்த அழகிய, பழைய காலக் கடிகாரத்தின் ரோமன் எண்களைப் பார்த்த சாருவின் மனம் சோர்ந்தது.

செய்யும் தொழிலைப் பற்றிய பேச்சுதான். ஆனால் மாலை ஆறரை மணிக்கு மேல் அவனோடு வெளியே இங்குமங்குமாகச் செல்லக் கூப்பிடுவது என்றால் அவளைப் பற்றி அவன் என்ன மாதிரி எண்ணுகிறான்?

கட்டுப்பாடற்று அலைகிறவள் என்றா?

அல்லது, இவன் பெரிய பணக்காரன் என்பதால் இவன் அழைத்ததும் அவள் ஓடி வருவாள் என்றா?

இவன் அளவு இல்லை என்றாலும், அவளும் ஒன்றும் இல்லாதவள் அல்லவே, அவளுடைய தந்தையும் ஓரளவு மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்தான்.

அத்தோடு அவள் கைவசமும் நல்ல தொழில் வேறு இருக்கிறது. பணத்தைக் கண்டதும் ஈயென்று இளிக்கும் அவசியம் அவளுக்குக் கொஞ்சமும் கிடையாதே.

அவசியமும் கிடையாது, ஆவலும் கிடையாது.

அத்தோடு இப்படி ஒரு தொழிலைத் தொடங்கப் போவதாகச் சாருமதி, தந்தையிடம் அனுமதி கேட்ட போதே அவர் பலவாறு எச்சரித்த பிறகுதான் அனுமதி கொடுத்தார்.

அவரது எச்சரிக்கைகளுள் ஒன்று, தொழில் பெயரைச் சொல்லி இரவில் தனியே அழைக்கும் ஆண்களைப் பற்றியது.



"வயதுப் பெண் நீ. எப்போதுமே... பகலிலும் எச்சரிக்கை யோடுதான் இருக்க வேண்டும். ஆனால் மாலை தாண்டிவிட்டால், மிகுந்த கவனம் தேவை. முதலில், ஆள் நடமாட்டம் குறைந்து விடும். தேவைக்கு யாரையும் சட்டெனக் கூப்பிட முடியாது என்று அதற்காகவே அந்த நேரத்தில் அழைப்பார்கள். அது மட்டுமின்றி கண்ட நேரத்தில் கண்டபடி சுற்றுகிறவள் என்று உன் பெயரும் கெட்டு விடும். அது போல ஏதாவது காதில் விழுந்தால் உன் அம்மாவால் தாங்க முடியாது. மூன்று வீட்டிலும் உன் செட்டில் பையன்கள் மட்டும் என்பதால் நீயும் கொஞ்சம் அவர்கள் மாதிரியே வளர்ந்துவிட்டாய். ஆனால் இனியும் அப்படியே நடக்க முடியாது. பொதுவாக எதெது கவனிக்க வேண்டும் என்று அம்மாவிடம் கேட்டுத் தெரிந்து கொள். அவளும் ஒத்துக் கொண்டால் நீ கேட்கிற மாதிரி ஏற்பாடு செய்து தருகிறேன்," என்று சொல்லி, அதன் பிறகும் தற்காப்புக்-கலை ஒன்றில் சற்றுத் திறமை பெற்ற பிறகுதான், மகளுக்குச் செல்வநாயகம் அவள் கேட்டபடி, அந்த ஸ்டுடியோவை வைத்துக் கொடுத்தார்.

மகள் உண்மையாகவே மனதில் ஏற்கிறாள் என்று கண்டதும், தாயும் நிறையச் சொல்லிக் கொடுத்தாள்.

தொழில் தொடங்கி இன்று வரை பெற்றோரின் போதனைகளைச் சாருமதி மீறியதில்லை.

அப்படியிருக்க இவன்...

வருத்தத்தைக் காட்டாது மறைத்து, "இப்போது மணி ஆறரைக்கு மேல் ஆகிறது சார். இதற்கு மேல் வீட்டாருடன் தவிர மற்றவரோடு நான் தனியே எங்கும் செல்வது இல்லை. அதனால் இந்த நேரத்துக்குள்ளாக நான் வீடு திரும்பி விடுமாறு இடம் காட்டுவதை ஏற்பாடு

செய்யுங்கள்," என்று பிசிரற்ற குரலில் சற்று அழுத்தம் கொடுத்து இயம்பினாள்.

"நல்ல வழக்கம்தான்!" என்று பாராட்டினான் அவன். "ஆனால் நான்... எப்படியும், இந்த நல்ல பழக்கத்துக்கு மதிப்புக் கொடுத்துதான் ஆக வேண்டும். நாளைக்கு எத்தனை மணிக்கு எனக்கு வெளியே வர நேரம் கிடைக்குமோ தெரியவில்லை. அது தெரிந்ததும் சொன்னால் சுமார் ஒரு மணி அவகாசத்தில் உன்னால் கிளம்பிவிட முடியுமா? பார்க்க வேண்டியதைப் பார்த்து முடித்ததும் நேரே உன்னை உன் வீட்டிலேயே வேண்டுமானாலும் கூட்டிப் போய் விட்டுவிடுகிறேன்," என்றான்.

எதற்கு வீட்டுக்கு? அங்கே ரஞ்சன் இருந்தால் வீட்டுக் கதைகளை இன்னமும் விலாவாரியாக ஒப்பிப்பான். இப்போது அளந்ததே போதும்.

"இல்லையில்லை. இங்கே என் இடத்தில் விட்டாலே போதும். கணக்குகளைச் சரி பார்த்துவிட்டுப் போக வசதியாக இருக்கும்."

"உன் விருப்பம்!" என்று இலகுவாக விட்டுக் கொடுத்தான் சசிகாந்தன்.

அவனோடு செல்ல மறுத்தவளுக்கு அந்தப் பிரச்சனை இலகுவாகத் தீர்ந்தும்கூட ஏனோ வருத்தமாகவே இருந்தது. எப்படியும் அவன் முதலில் கேட்ட விதம் தப்பல்லவா?

நல்ல வேளை, தனக்கு அப்போதுதான் அவகாசம் கிடைக்கும். அவளை அந்த நேரத்தில்தான் வர வேண்டும் என்று வற்புறுத்தவில்லை.

ஒருகால், அவன் தவறான எண்ணத்தோடு அழைக்கவே இல்லையோ என்னவோ?



அப்படித்தான் இருக்க வேண்டும். மற்றப்படி இவ்வளவு இலகுவாக விட்டுக் கொடுப்பானா?

சசிகாந்தன் நல்லவனேதான் என்று நிச்சயப்படுத்திக் கொண்ட பின், அவளுக்கு நிம்மதியாகத் தூக்கம் வந்தது.

மறுநாள் சாருமதியை அழைத்துப் போய் அவனது கூட்டுத் தொழிலின் அலுவலகத்தைக் காட்டினான் சசிகாந்தன்.

பெரிய இடம், இவ்வளவு பெரிதாக இருக்கக்கூடும் என்று, சாரு எதிர்பார்க்கவில்லை.

நிச்சயதார்த்த விழாவின்போது சசி கோடிகளைப் பற்றிக் கூறியதைக்கூட, அவள்ரொம்ப நம்பினாள் என்று சொல்ல முடியாது. ஓரளவு லாபம் தரும் ஏதோ ஒரு தொழில். பெரிதாகச் சொன்னால்தான் காரியம் நடக்கும் என்று எண்ணி, கோடி, கீடி என்று பீற்றுகிறான் என்கிற அளவுதான். இவன் பெரிய ஆள் என்று சிதம்பரம் சொன்னபோதுகூட இந்த மாதிரி என்று அவள் மனதில் படவில்லை.

ஆனால் இப்போது அலுவலகக் கட்டிடத்தைப் பார்த்ததும், தன்னையறியாமல், "வாவ்!" என்றாள்.

"இவ்வளவு பெரிய அலுவலகத்தை நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை, சார். இவ்வளவு பெரிது என்பதால்தான் அன்று அவ்வளவு பதறினீர்கள் போல, உங்கள் தொழில் வெற்றி பெற முன்கூட்டியே என் வாழ்த்துக்கள்!" என்றாள் சாருமதி.

மகிழ்ச்சியோடு புன்னகை செய்தான் அவன்.

"உன் சன்னியைத் தந்து சமயத்தில் நீ உதவியிரா விட்டால் இந்த அளவுக்கு வந்திராது!" என்றான் அவன்.

"ஊகூம்! கதை," என்றாள் நம்பாத தன்மையைக் காட்டி. "அன்று கையெழுத்திடப் போவதாக அல்லவா சொன்னீர்கள். ஏற்கெனவே எல்லாம் பேசி முடிந்த பிறகு தானே கையெழுத்திடுவார்கள்? பேச்சு வார்த்தை முடிந்து ஒப்பந்தக் கையெழுத்தாகிற அளவுக்கு வந்த பிறகு கொஞ்சத் தாமதத்துக்காக, எல்லாவற்றையும் விட்டு விடுவார்களாக்கும்!" என்று முறுவலித்தவாறே மடக்கி-னாள் சாருமதி.

"ஒரேயடியாக விடமாட்டார்கள். ஆனால் திரும்பவும் யோசிக்கத் தொடங்கி இருப்பார்கள். ஜப்பானியர் நேரத்துக்கு, அதாவது நேரம் தவறாமைக்கு அதிக மதிப்புக் கொடுப்பவர்கள் என்பது உனக்குத் தெரியாதிருக்காது. நம் போட்டி நிறுவனம் ஒன்றும் இந்த ஒப்பந்தத்துக்காக மிக மிக முயன்று கொண்டிருந்தார்கள். அதனால்தான் அன்றைய கையெழுத்து அவ்வளவு முக்கியமானதாக இருந்தது!" என்று, நீ என்ன கேட்பது என்று சலித்துக் கொள்ளாமல், அவளுக்கு விளக்கினான் சசிகாந்தன்.

கவனத்துடன் கேட்டவளுக்கு வேறோர் எண்ணம் தோன்றச் சிரிப்பு வந்தது.

விவரம் கேட்டவனிடம் அவளும் விளக்கம் கொடுத்தாள்.

"பரவாயில்லையே. என் வண்டி பழசாகிக் காயலான் கடைக்குப் போகிறநிலையில்கூட, அதை நான் உங்களிடம் விற்க முடியும் போலத் தெரிகிறதே, என்று நினைத்தேனா, அந்த சந்தோஷம்!" என்றாள் அவள்.

"காயலான் கடைக்குப் போகிறதை வாங்குவதா? நாங்கள் பழைய இரும்பு வியாபாரமா செய்கிறோம்? கிடையாதே."



"ஐயோ, ஞாபகச்சின்னம், சார். ஒப்பற்ற இந்த வெளி நாட்டு வியாபார ஒப்பந்தத்தைக் காற்றைவிடக் கடிதான வேகத்தில் இதில் பறந்து வந்துதானே முடித்தீர்கள். நினைவுச் சின்னமாக இரண்டு பங்கு, இரண்டென்ன இருபது மடங்கு விலை கொடுத்துக்கூட வாங்கலாமே!" என்று கண்ணோரம் சுருங்க, ஆலோசனை கூறினாள் அவள்.

"என்னது என்னது? காயலான் கடைக்குப் போகிற சரக்குக்கு இருபது மடங்கு விலையா? அப்பாடியோவ்! ஆனாலும் உனக்கு இவ்வளவு தாராள மனசு இருக்கக் கூடாதும்மா! இப்பேர்ப்பட்ட வண்டியை, அதுவும் காயலான் கடைக்குப் போகிற நிலைமையில் இருப்பதை, இவ்வளவு சல்லிசாகவா கொடுப்பார்கள்?" என்று சசி காந்தன் சிரிக்க, சாருமதியும் அதில் கலந்து கொண்டாள்.

அடி மனதின் ஆழத்தில் இருந்த சிறு கோபம் வருத்தத்தின் வடுக்கூட அடியோடு மறைய, சாருமதிக்கு உள்ளூர உற்சாகம் உண்டாயிற்று.

"இங்கேதான் மேடை. நான் இந்தப் பக்கம். எனக்கு அடுத்து நம் முக்கிய விருந்தாளி உட்காருவார். அடுத்து மத்திய தொழில் துறை அதிகாரி. அவர் அருகில் என் தந்தை..." என்று வேலை விவரங்களும் பேசினார்கள்.

"மாண்பு மிகுந்தவர்கள் யாரையும் காணோமே..." என்று அவள் யோசனையோடு கேட்க, "இருக்கிறார். நாடா வெட்டுவது அவர்தான்!" என்றான் அவன்.

"பிற்பாடு சிவப்பு நாடா வெட்டுவதில் பயன்படுவார் என்றா?" என்று அவள் சாதுவாகக் கேட்க, "பின்னே?" என்று சிரித்தான் சசிகாந்தன்.

கூடச் சேர்ந்து சிரிப்பது, அவளுக்கும் இலகுவாகவே இருந்தது.

"ஓர் ஐந்து நிமிஷம் உட்கார்ந்திரு. வேலை செய்கிறவர்களிடம் இரண்டு வார்த்தை சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன்," என்று அவளை உட்கார வைத்துவிட்டுப் போனான் அவன்.

அது ஒரு பெரிய ஹால். அதில் பிளைவுட் தடுப்புகள், இருக்கை அமைப்பு, ஏசி பொருத்துதல் என்று விதம் விதமாக வேலைகள் நடந்து கொண்டு இருந்தன.

ஒவ்வோர் இடத்திலும் வேலையை வேகமாகப் பார்வையிட்டு குறைகள், திருத்தங்களைச் சொல்வதைக் கவனித்தவாறு உட்கார்ந்திருப்பது சாருமதிக்குச் சுகமாக இருந்தது.

ஒவ்வொரு விஷயத்தையும் எப்படிக் கவனிக்கிறான்! தப்பைக்கூட முகம் சுளிக்காமல் அமர்ந்த குரலில் எப்படிச் சொல்லுகிறான்!

தகப்பனார் இருந்தாலும், இவன்தான் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுச் செய்கிறவன் போலும், மற்றப்படி முக்கிய விருந்தாளி அருகே இவன் உட்கார முடியாது...

இவ்வளவு பொறுப்புகளை ஏற்று நடத்துகிறவன், சாதாரண விடலைப் பையனைப் போல, அந்தி சாய்ந்த பிறகு வரச் சொல்லலாமா?

ஒருவேளை பல பெரிய மனிதர்களைப் போல, இவனிடமும் மோசமான பக்கம் ஒன்று இருக்கிறதா? அல்லது வேலை மும்முரத்தில் நம் சமூகத்தின் எழுதாத சட்டங்களை அவன் எண்ணிப் பார்க்கவில்லையோ?

அப்படித்தான் இருக்க வேண்டும். அப்படியேதான் இருக்கும். ஏனெனில் சசிகாந்தன் கெட்டவன் அல்ல, நல்லவன். நல்லவனேதான்.



சசிகாந்தனுக்காகத் தன் மனம் திரும்பத் திரும்ப இவ்வளவு தீவிரமாக வக்காலத்து வாங்குகிறதே என்று சாரு திகைத்தாள்.

என்ன? மனம் முடிவே கட்டிவிட்டதா? கூடாது. நன்கு அறியுமுன் யாரைப் பற்றியும் எந்த முடிவும் எடுக்கக் கூடாது. அடக்கித்தான் வைக்க வேண்டும்.

பார்வையைப் பிடிவாதமாக அவனிடம் இருந்து அகற்றி, கையோடு கொண்டு போயிருந்த நோட்டுப் புத்தகத்தில், படங்கள் எடுப்பது தொடர்பாகச் சசிகாந்தன் சொன்ன குறிப்புகளை எழுதலானாள்.

அலுவலகக் கட்டிடத்தில் இருந்த வேலைகளை முடித்துவிட்டுச் சசிகாந்தன் தன் வீட்டுக்கு அவளை அழைத்துப் போனான்.

எதற்கும் தயாராக இருந்தவளுக்கு அங்கே பிரச்சனையே எழவில்லை.

ஓரளவு பெரிய வீடுதான் என்றாலும், சாருமதி எதிர் பார்த்த அளவு பெரிது இல்லை.

அளவில் அவள் வீடு மாதிரியேதான் - கிட்டத்தட்ட. ஆனால் பல விலை மதிக்க முடியாத கலைப்பொருட்களும், அவை வைக்கப்பட்டிருந்த விதமும் வீட்டைமிகவும் உயர்த்திக் காட்டின.

சாருவுடைய தாயார் கற்று வரைந்து தொங்க விட்டிருந்த தஞ்சாவூர்ச் சித்திரங்களுக்குப் பதிலாக இங்கே மெய்யான பழங்காலக் கலை வண்ணங்கள் இருந்தன.

ஒரு வகையில் தாயார் வரைந்தவற்றுக்கும் சாருவின் பார்வையில் விலை மதிப்பே கிடையாது என்ற போதும், இங்கிருந்தவைக்கு உலகம் முழுவதிலும் நல்லவிலை மதிப்பு உண்டு.

இன்னும் சில நூறு ஆண்டுகளில் என் அம்மாவின் படைப்புகளுக்கும், இதே விலை மதிப்பு ஏற்பட்டுவிடும். அப்போது இவன் குடும்பங்களே அதிக விலை கொடுத்து அவைகளை வாங்கி, இப்படி அழகாகத் தொங்க விட; அதைப் பார்க்க எவ்வளவு பெருமையாக இருக்கும் என்று எண்ணியவள், "என்ன யோசனை?" என்று அவன் கேட்கவும், நினைத்ததைச் சொல்லிவிட்டாள்.

வியந்து நோக்கிவிட்டுப் புருவம் உயர்த்தி, "சற்று அதிகப்படியான தொலை நோக்குப் பார்வையாகத் தோன்றுகிறதே!" என்று அவன் முறுவலிக்க, அவளுக்கும் சிரிப்பு வந்தது.

இன்னும் சில நூறு ஆண்டுகள் கழித்து, இப்படி அவள் எங்கே வந்து பார்ப்பது? அவள் உயிரோடு இருப்பதே இயலாதே.

படங்களைப் போலவே, மற்றப் பொருட்களும் தரமானவையாக இருந்தன.

நல்ல கடைசல் பிடித்த கால்களுடன் சோஃபாக்கள்... அதே மர வேலைப்பாட்டுடன் ஓவல் வடித்தில் கனமான கண்ணாடி மேஜை. மேலே ஷாண்டிலியர். சித்திரங்கள். சிற்பங்கள்.

ரசனையுடன் அவள் பார்த்துக் கொண்டிருக்கும், போதே குளிர்பானம் வந்தது.

அதைத் தொடர்ந்து சசிகாந்தனுடைய பெற்றோரும் வந்தார்கள்.

பிரியமாகவே பேசினார்கள்.

தன் மகளும் கம்ப்யூட்டர் இஞ்சினியரிங் படித்து விட்டு, அதைத் துருப் பிடிக்க விட முடியாது என்று



கணவன் வீட்டாரின் ஒத்துழைப்போடு ஒரு சென்டர் வைத்து நடத்துவதாகச் சசிகாந்தனுடைய தாயார் சொன்னது சாருவின் தயக்கத்தை அகற்றியது.

"நிர்வகிக்கும் கெட்டிக்காரத்தனம் இருந்தால் செய்ய வேண்டியதுதானே?" என்றார் அவன் தந்தை திவாகரனும்.

நிறையப் பரம்பரைப் பணக்காரர்கள் போலப் பெண்கள் வெளியே சென்று பொருளீட்டுவதை உயர்த்திய புருவத்துடன் கீழ் நோக்காய்ப் பார்க்கவில்லை அவர்கள்.

திவாகரனே வெளிநாடு சென்று படித்தவர். அவ்வப்போது அடுப்படியில்கூட வேலை செய்வார் என்று கேலியும் கிண்டலுமாகக் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர் இருவரும் கூறவும், சாருமதிக்குப் பேச்சு ரொம்பவே இலகுவாக வரத் தொடங்கி விட்டது.

"பாரம்மா... ஒரு நாள் என் சிக்கன் பையை நீயும் சாப்பிடும்போது உனக்கே தெரியும். இந்த இரண்டு பேரின் பேச்சும் பொய் என்று!" என்று திவாகரன் அறிவிக்க, "அய்யய்யோ! என்றைக்கு என்று முதலிலேயே சொல்லி விடுங்கள், அப்பா. ஏதாவது தொழில் ரீதி டின்னரை நான் அன்றைக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்," என்று மற்றவர்களைச் சிரிக்க வைத்துவிட்டுத் தந்தையைப் பார்த்தான் சசிகாந்தன்.

சிரிப்பினூடே, "அப்படியானால் எப்போதும் மாட்டுவது நீங்கள் மட்டுத்தானா ஆன்ட்டி?" என்றவாறு, சாருமதி, திவாகரனுடைய மனைவியைப் பார்க்க, அவளும் கணவரைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏதோ கவனப்படுவதுபோல.

ஆனால் என்னவென்று சாருமதி யோசிக்குமுன்பாக, "உன் அங்கிளுக்குப் பயங்கர மறதிம்மா. அவர் செய்வது

சிக்கன் பை அல்ல, சிக்கன் கரிக்கட்டை. பெயரைக்கூட மாற்றிச் சொல்லுகிறார், பார்," என்றாள் அந்த அம்மாள் கிண்டலாக.

"ஆமாமாம். மறதி அதிகம்தான். மற்றப்படி முன்னே பின்னே தெரியாத உங்கள் இரண்டு பேரையும் இங்கே உட்கார வைத்துப் பேசிக்கொண்டிருப்பேனா? ஆமாம், நீங்கள் யார்? இந்தக் கிரகத்துவாசிகள்தானா? வேற்றுக் கிரகமா? நீ கொஞ்சம் பார்த்துச் சொல்லம்மா... இவர்கள் இரண்டு பேருக்கும் கொம்பு கிம்பு எதுவும் இல்லையே!" என்று அவர் பாவனையுடன் ஏதேதோ கூற, அங்கே அவலை அலையாகச் சிரிப்பு பரவலாயிற்று.

ஆனால் சிரிப்பினூடேயும் ஏதா புரியாதது போலக் குழம்பியது அவளுக்கு.

## 9

எல்லோரும் அவளிடம் நன்றாகத்தான் நடந்து கொள்கிறார்கள்.

பின்னே சிரித்துப் பேசும்போதே மனம் குழம்புவானேன்?

கரெக்ட். அவள் இங்கே வெறுமென சிரித்துப் பேச வரவில்லை.

வந்த வேலை மறந்ததுதான் மனதைச் சங்கடப் படுத்தியிருக்கிறது.

"ஜப்பானியருக்கு விருந்து கொடுக்கும்போது எந்தெந்தக் கோணத்தில் எங்கேயிருந்து எடுப்பது என்று பார்க்க வந்தோம், ஆன்ட்டி. அதை மறந்து உங்களுடன்



அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறேன், பாருங்கள். அதுதான் என்னமோ போல இருந்திருக்கிறது. நல்ல வேளை, அந்த அளவு தொழில் உணர்வு ரத்தத்தில் இருக்கிறதே!" என்று தன் ஆறுதலை வாய்விட்டுச் கூறிய வண்ணம் சாருமதி எழுந்தாள்.

"உங்கள் பழச்சாறுக்கு, அதைவிட இவ்வளவு நேரம் என்னோடு உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்ததற்கு எல்லாம் நன்றி, ஆன்ட்டி! நன்றி. உங்களுக்கும்தான் அங்கிள். வேலையைத் தொடங்குவோமா, சார்?" என்று சசிகாந்தனிடம் வினவினாள்.

"அதென்ன எங்களை ஆன்ட்டி அங்கிள் என்கிறாய். தகப்பன் சாமி மாதிரி. அவனுக்கு மட்டும் சார், மோர் என்று என்ன தனி மரியாதை? எங்களைப் போல 'சசி' என்று கூப்பிடம்மா," என்றார் திவாகரன்.

"அது..." என்று தயங்கினாள் அவள்.

"மரியாதை, அப்பா. பதினாறு அடி பாய்கிற குட்டியாகச் சாதித்துக் காட்டுகிறேன் அல்லவா? அதற்கான மரியாதை. இவ்வளவு பெரிய மனிதனை எப்படிப் பேர் சொல்லி அழைப்பது என்ற எண்ணம் அவளுக்கு!" என்று காலரைத் தூக்கிவிட்டுப் பெருமை காட்டினான் சசிகாந்தன்.

"ஆமாம். ஆறடிக்கு மேலேயே இருப்பீர்கள் போலத் தெரிகிறதே. மெய்யாகவே நீங்கள் பெரிய மனிதன் என்று ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். இல்லையா, சசி?" என்று அவள் கேட்க, எல்லோருமே நகைத்தனர்.

"இப்படிக் காலை வாருவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை, சாருமதி!" என்று சசி கூற, "அதுதானே, சும்மாவா சொன்னார்கள் சேலை கட்டிய பெண்ணை

நம்பக் கூடாது என்று? என்றைக்கோ எழுதி வைத்து விட்டார்கள்!" என்று மகனுக்கு ஒத்து ஊதினார் திவாகரன்.

"அதனால்தான், நாங்கள் எல்லாம் இப்போது சேலையே கட்டுவதில்லை. சுரிதார் செட்தான். எனவே நீங்கள் தாராளமாக எங்களை நம்பலாம்!" என்று சாருமதி கூற, மற்றவள் கை தட்டிச் சிரித்தாள்.

"சரியாகச் சொன்னாய், சாருமதி. நான்கூட இவரது இந்த அறுவைப் பாட்டுக்குப் பயந்து பெரும்பாலும் வீட்டில் கஃப்தான் மாதிரி எதையாவதுதான் அணிவது. முக்கியமான யாராவது வரப் போகிறார்கள் என்றால்தான் இந்தச் சேலையெல்லாம்... வந்து..."

மந்தாகினி பேச்சைப் பாதியில் நிறுத்த, "பார்த்தால் உங்கள் முக்கிய விருந்தாளிக்குப் பதிலாக நான் வந்து நிற்கிறேன்!" என்று சிரித்தாள் சாருமதி.

"இப்படியே உங்களோடு உரையாடிக் கொண்டிருந்தால் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நேரம்தான் ஓட்டமாய் ஓடுகிறது!" என்று விட்டுச் சசிகாந்தனிடம் திரும்பி, "என்ன சார்... வேலையைப் பார்ப்போமா?" என்று வினவினாள்.

"ம்... பார்ப்போம் பார்ப்போம்! இங்கே பக்கவாட்டில் ஒரு புல்தரை இருக்கிறது. அதில்தான் விருந்து..." என்றவாறு அவளுக்குச் செல்லும் வழியைக் காட்டிவிட்டு, பெற்றோரிடம் திரும்பித் தலையசைத்தான். அதன்பின் சாருமதியை வெளியே அழைத்துப் போய், இடத்தைக் காட்டினான் அவன்.

கிளம்புகையில் பெரியவர்களிடம் சொல்லிக் கொள்ளப் போனபோது, ஓரத்து மேஜை மீது ஒரு தாம்பாளத்தில் குங்குமம் பூ, வெற்றிலை பாக்கு பழத்தோடு, ஒரு பட்டுச் சேலையும் இருக்கக் கண்டாள் சாரு.



சேலை அவளுக்கா?

இதை எப்படி மறுப்பது என்று அவள் யோசித்து மனதினுள் ஒத்திகை பார்க்கையில், சசிகாந்தனும் பெற்றோரை நேராகப் பார்த்துவிட்டு, வாயிற்புறம் திரும்பினான். "வா, போகலாம்," என்று சாருமதியை அழைத்தான்.

அவனுக்கு ஏதோ கோபம் என்று சாருமதிக்குப் புரிந்தது. வேலை விஷயமாக வருகிறவளுக்கு இப்படி எல்லாம் கொடுப்பது வீண் விரயம் என்று எண்ணுகிறானோ?

ஆனால் அவள் ஒன்றும் இதை வாங்கிக் கொள்ளப் போவதில்லையே.

ஆனால் தராத ஒன்றை மறுக்கவும் முடியாது.

முகத்தை முறித்துப் போகவும் முடியாமல், சாருமதி தயக்கத்துடன், "கிளம்புகிறேன் ஆன்ட்டி," என்றாள்.

"கொஞ்சம் இரும்மா!" என்றாள் மந்தாகினி. "இந்தப் பூவைத் தலையில் வைத்துக் கொள். இதோ ஹேர்கிளிப் கொணர்ந்து நானே வைத்து விடுகிறேன்," என்றவள், சாருமதி ஏற்கெனவே தலையில் மாட்டியிருந்த ஒரு கிளிப்பை எடுத்துக் கொடுக்க அதைக் கொண்டே அந்தச் சின்ன சண்பகச்சரத்தைச் சின்னவளுக்கு வைத்துவிட்டாள்.

"நல்லவாசம், ஆன்ட்டி, என் அம்மா அத்தை இரண்டு பேருக்குமே இந்த வாசம் ரொம்ப பிடிக்கும்!" என்றவள், சசிகாந்தனைப்பார்த்து "அத்தை என்றால் ரஞ்சனுடைய அம்மா!" என்று விளக்கினாள்.

"அது யார் ரஞ்சன்?" என்று பெரியவர்கள் இருவருமே கோரசாகக் கேட்க, "இவளுக்கு இன்னோர் அண்ணன் மாதிரி!" என்று சுருக்கமாக முடித்துவிட்டு, "இனியும் தாமதித்தால் ஸ்டுடியோவுக்குப் போய்விட்டு வீடு திரும்ப உனக்குத் தாமதம் ஆகிவிடும்," என்று சாருமதியை அவசரப்படுத்திக் கொண்டு சசி கிளம்பிவிட்டான்.

இப்போது அவளுக்கு ஏதோ புரியாமல் உறுத்தியது.

ஆனால் என்னவென்று கேட்பது?

குடும்பத்தில் அவர்களுக்குள் என்ன தகராறோ? எல்லாருமே என்னதான் நன்றாகப் பழகினாலும் தகராறு பற்றி அவள் எப்படிக் கேட்க முடியும்? ஆனாலும்...

ஒருவேளை அவனுக்கே ஏதோ அவசர வேலையோ, என்னவோ? நேரமாகிறது என்றுகூட முகம் மாறியிருக்கலாம். நல்லவேளையாக வந்த வேலையும்தான் முடிந்து போயிற்று.

சசிகாந்தனும், சாருமதியும் ஏறும்போது இன்னொரு கார் வந்து நின்றது.

அதிலிருந்து பதுமை போல ஒரு பெண்ணும், சற்றுக் குள்ளமாய் கஷ்குமுஷ்கென்று ஓர் இளைஞனும் இறங்கினார்கள்.

சசியின் கார் கிளம்புவதைக் கண்டு "அத்தான்... அத்தான்..." என்று உரக்க அழைத்தவாறு, அந்த இளைஞன் ஓடிவர இவன் காரை நிறுத்தினான்.

ஏசி காரின் கண்ணாடியை இறக்கி, "என்ன நந்தகுமார், வாருங்கள். வீட்டில் அப்பா அம்மா இருக்கிறார்கள். உள்ளே போய்ப் பாருங்கள். எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருப்பதால் உடனே போக வேண்டியிருக்கிறது. தப்பாக நினையாதீர்கள். வரட்டுமா?" என்ற சசிகாந்தன் காரைக் கிளப்பப் போவதற்கு அடையாளமாகச் சாவியைத் திருப்பி இஞ்சினை ஆன் செய்து ஓடவிட்டான்.



"அம்மா, அப்பாவிடம்தானே? கட்டாயம் பேசுவேன். அவர்களிடம் பேசாமல் எந்தக் காரியம் எனக்கு நடக்கும்? ஆனால், உங்களைப் பார்க்க வேண்டும் என்றுதான் அழகி என்கூட வந்தாள்..."

அந்தப் பெயரைக் கேட்டதும், சாருமதியின் பார்வை தன்னையறியாமல் அந்தப் பெண்ணிடம் பாய்ந்தது. பெயருக்குப் பொருத்தமாக, பார்க்கும்போதே அழகுறச் செதுக்கிய பதுமையின் நினைவுதான் அவளுக்கு வந்தது.

அவள் பதுமையாகவே இருக்கட்டும். அல்லது பதுமையைவிட அழகாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப்போகட்டும். ஆனால் அவள் ஏன் சசிகாந்தனைப் பார்க்க வர வேண்டும்?

அங்கேதான் பொருந்தாமல் ஏதோ நிரடியது சாருவுக்கு.

யோசனையோடு திரும்பும்போது சசிகாந்தனைத் தாண்டிக் கொண்டு அந்த நந்தகுமாரின் ஓரக் கண் பார்வை அவளை அளவிடுவது புரிய, தலையை நன்றாகத்திருப்பி நேராக அவனை நோக்கினாள் அவள்.

இந்தக் கள்ளப் பார்வைக்காரர்களுக்கு எப்போதும் இது ஒரு கஷ்டம். நேர் பார்வையை எதிர்கொள்ள இயலாது.

பலமுறை நேர்ந்தது போலவே, நந்தகுமாரும் அவசரமாகப் பார்வையை அகற்றிக் கொண்டான்.

"இன்னொரு முறை பார்க்கலாம், நந்தகுமார். விலகிக் கொள்ளுங்கள்," என்ற சசி, மற்றவன் நிமிர்ந்ததுமே காரைக் கிளப்பிச் சென்றுவிட்டான்.

தொழில் தொடர்பான பேச்சு வார்த்தை என்றால், தொடர்ந்து அதையே நினைத்துக் கொண்டிருப்பதுதான் சாருமதிக்குப் பழக்கம். அப்படி நினைத்துக் கொண்டிருந்தால், புதிய உத்திகளைக் கண்டுபிடித்து, செய்வதை மேலும் சிறப்பாகச் செய்ய முடிவதை அனுபவத்தில் கண்டவள் அவள். அதனாலேயே அதே பழக்கத்தைத் தொடர்பவளும் கூட.

ஆனால் இன்று மனம் வம்பு செய்தது. அந்தப் பெண் அழகிக்கு, மெய்யாகவே அழகியுமான அந்தப் பெண்ணுக்குச் சசிகாந்தனிடம் என்ன வேலை இருக்கக் கூடும்?

அந்த நந்தகுமார் 'அத்தான்' என்று சசிகாந்தனை அழைத்தான். எனவே அவர்கள் உறவுக்காரர்கள். அந்த முறையில், அதாவது உறவு முறையில் ஏதாவது வேலைக்குச் சிபாரிசு செய்யும்படி கேட்டு வந்திருக்கலாம் என்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்ள முயன்றாள் சாருமதி.

ஆனால் அதற்குள், உறவு முறை அத்தானாக இருக்கிறதே என்று மீண்டும் குரல் கொடுத்துத் தொல்லை செய்தது மனது.

அந்தப் பெண் அழகாக இல்லாமலாவது இருந்திருக்கலாமே என்று எண்ணும்போதே நல்ல காலமாக ரஞ்சனின் நினைவு அவளுக்கு வந்தது.

ரஞ்சனுக்கும் நல்ல தோற்றம்தான். அவளுக்கும் அத்தான் முறையும்கூடத்தான். ஆனால் அதனால் என்ன ஆகிவிட்டது? அவளோடு கூடப் பிறந்த அண்ணன்



மனோகரனுக்கும் ரஞ்சனுக்கும் அவளைப் பொறுத்த வரையில் எந்த வேறுபாடும் கிடையாதே. அவனுக்கும் அப்படித்தான்.

இங்கே மட்டும் ஏன் வேறுபாடாக எண்ண வேண்டும்?

சுற்றியுள்ள உலகம் சட்டென அழகு பெற, விருந்து நடைபெற இருந்த புல்வெளி நினைவுக்கு வந்தது. வேலையையும் யோசிக்க முடிந்தது.

"விருந்து எத்தனை மணிக்கு முடியும்? அழைத்துப் போக அப்பா அல்லது யாராவது அண்ணனை வரச் சொல்ல வேண்டும்," என்றாள்.

"எதற்கு அவர்களைத் தொல்லை செய்ய வேண்டும்? திரும்பிச் செல்ல நான் ஏற்பாடு.."

"நன்றி, சார். ஆனால் வேலையென்று செல்லும் போது போக்குவரத்துக்கு அவர்களை நம்பி இருக்கக் கூடாது என்று வைத்திருக்கிறோம். நான் என் சன்னியில் கூடப் போய்விடுவேன். ஆனால் இரவாகி விட்டால் தனியே வரக்கூடாது என்று அம்மா சொல்லியிருக்கிறார்கள். அதை மீற முடியாது."

"ஒன்று புரியவில்லை!" என்று அவன் தொடங்க, சட்டென அவளது விழிகள் பளிச்சிட்டன.

அவன் மேலே பேசுமுன் குறுக்கிட்டு, "ஒன்றுதானே சார் புரியவில்லை? இரண்டு மூன்று... அதெல்லாம் புரிகிறதில்லையா? இது ஒன்று போனால் போகிறது விடுங்கள்," என்றாள் அவள் நகையடக்கிய குரலில்.

உச்சுக் கொட்டினான் அவன்.

"இதெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இவ்வளவு பழகிய பிறகும், என் பெற்றோரிடம் கேலியும் கிண்டலுமாக உரையாடிவிட்டு வந்த பிறகும்கூட திடீரென்று அன்னியமாகத் தூர நிறுத்திப் பேசுவதுதான் புரியவில்லை. புரியாத அந்த ஒன்று இப்படி முக்கிய மானது என்பதாலேயே, போகிறது என்று விட முடியாது," என்றான் சசிகாந்தன்.

எப்படி முக்கியம் என்ற கேள்வி, அவளதுதொண்டை வரை வந்து தடைப்பட்டு நின்றது. நட்பு வகையில் முக்கியம் என்றுகூடப் பதில் சொல்லலாமே.

அவள் ஆயிரம் நினைக்கலாம். ஆனால் அவள் மாதிரியே அவனும் நினைக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்?

லேசாக முறுவலித்து, "தொழில் தொடர்பானவர் களைச் சற்று தூரத்தில் நிறுத்திப் பழகுவதுதான் நல்லது என்று என் அம்மா..." என்றவளின் பேச்சில் அவன் குறுக்கிட்டான்.

"ஒரு நாள் உன் வீட்டுக்கு வந்து, உன் அம்மாவைப் பார்த்துப் பேசப் போகிறேன். என்னை மட்டும் சார் மோர் என்றுதான் கூப்பிட வேண்டும் என்று உங்கள் மகளுக்கு ஏன் சட்டம் போட்டீர்கள் என்று கேட்டாக வேண்டி யிருக்கிறது. ஏன் சண்டையே போடப் போகிறேன்."

"ஐயோ, ராமா... உங்களுக்கு மட்டும் என்று ஒரு சட்டமும் இல்லை. சா.. வந்து... சசிகாந்தன். பொதுவாகத் தொழில் முறைப் பழக்கம் ரயில் சிநேகிதம் மாதிரி. அதே அளவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று..."

"அம்மா சட்டமாக்கும். இந்தியன் பீனல் கோட் மாதிரி. அம்மா சட்டத்தில் இது எத்தனையாவது பிரிவு?"



"பெற்றவளுக்கு மிஞ்சிப் பிள்ளைகள் மேல் அன்பு செலுத்துகிறவர் கிடையாது. அம்மா சொல்வது பிள்ளை களின் நலனுக்காகத்தான் இருக்கும்!" என்றாள் அவள் வெடுக்கென.

"'அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்... ஏனை மறத்திற்கும் அஃதே துணை' என்று ஒரு குறள் இருக்கிறது தெரியுமா?"

திருவள்ளுவரை மறுத்து, ஒருவர் என்ன சொல்ல முடியும்?

சிறு மௌனத்தின் பின், "எங்கோ ஏதோ ஒன்றிரண்டு அப்படி நேர்ந்திருக்கலாம். ஆனால் என் அம்மா சொன்னதைக் கடைப்பிடிப்பது எனக்கு நன்மையாக இருப்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன்," என்றாள் அவள் பிடிவாதமாக.

"மறுக்க முடியாத அறிவிப்பு. ஆனால் உன் அம்மாவிடம் போய்க் கேட்டால்தானே நீ எந்த அளவுக்கு அவர்கள் சொல்லைக் கேட்பவள் என்று தெரியும்? என் தாயாரைப் பொறுத்தவரை நான் சொல் பேச்சுக் கேட்கிறவன் இல்லை என்கிற குறை உண்டு!" என்று உதட்டைப் பிதுக்கினான் சசி.

அவள் வியப்புடன் நோக்கவும், "ஆமாம். அவர்கள் சொல்லுக்குப் பணிகிறவனாக நான் இருந்திருந்தால், இப்போது குறைந்தது இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை ஆகியிருப்பேன். என் இருபத்தோராவது வயதில் இருந்தே திருமணம் செய்து கொள்ளுமாறு என்னை விரட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அம்மா சொன்னதைக் கேட்டிருந்தால் குஞ்சும் குளுவானும் புடை சூழத்தான் நான் உன்னைச் சந்தித்திருப்பேன். பரவாயில்லையா?" என்று புன்னகையோடு கேட்டான் அவன்.

குஞ்சும் குளுவானுமாகப் பிள்ளைகள் புடைசூழ.

கூடவே ஒருமனைவியுடனும். அந்த அழகி மாதிரி ஒரு மனைவி.

கற்பனை செய்த சித்திரத்தைக் கொஞ்சமும் ஒத்துக் கொள்ள முடியாமல் சாருமதியின் உள்ளம் எதிர்த்துப் புரட்சி செய்தது.

அந்த வினாடியில் சட்டென அவளுக்கு ஒன்று தெளிவாயிற்று.

என்னதான் அம்மா பேச்சு நல்லது என்றாலும்கூட, சசிகாந்தனை வெறும் ரயில் சினேகிதனாக விட முடியாது. அவன் நல்லவனோ, கெட்டவனோ அவனை விட்டு ஒதுங்கவும் அவளால் முடியாது.

அன்று தோன்றிய பொறி, அணையாத பெரு நெருப்பு.

## 10

அலுவலகத் திறப்பு விழாவுக்கு உணவு வகை யறாவைச் சசிகாந்தன் ஒரு பெரிய ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தான். அந்த இடத்தில் சமையல் செய்ய வசதி கிடையாது என்பதால் சௌபாக்கியத்தில் சொல்ல வில்லை என்று அவளை அழைத்துப் பெரிதாக விளக்கம் கொடுத்தான்.

தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாதாம்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு ஹோட்டல்தான் வசதியாக இருக்கும் என்பதால் இங்கேயும் அதை யாரும்



எதிர்பார்க்கவில்லை என்று சாருமதியும் விவரமாக எடுத்துரைத்தாள்.

தவறாக எடுத்துக் கொள்ளும் எண்ணமே வரவில்லையாம்.

அப்புறம், இருவருமாக வேறு பேச்சுப் பேசிக் கொண்டிருந்தனர்.

விழாவன்று, அலுவலக வளாகத்துக்கு இருவருமே முன்னதாக வந்து விட்டிருந்தனர்.

அவளைக் கண்டதும், குளிர்ச்சியாகப் பாதாம்பால் கொண்டு வந்து கொடுக்கச் செய்தான் சசிகாந்தன்.

"இதே வேலையாக அலைந்து கொண்டு இருக் கிறீர்கள், முதலில் நீங்கள் குடியுங்கள்!" என்றாள் சாருமதி.

கடைசியாக இன்னொரு பாட்டிலில் கொண்டு வரச் செய்து, இருவருமே அதை அருந்தியபடி பேசிக் கொண்டிருந்தனர்.

'ஜிப்' பிட்டு மூடியிருந்த வீடியோக் கருவிப் பையைப் பார்த்துவிட்டு, "இது ரொம்பக் கனமா?" என்று வினவினான் சசி.

"அப்படி ஒன்றும் கனம் இல்லையே!" என்றாள் சாரு.

"இல்லையே, சாரு. அன்று சிவா நிச்சயத்தன்று சாவி எடுப்பதற்காக அடுத்த தோளுக்கு மாற்றியபோது சிரமத்தோடு முகம் சுளித்தாயே. கனம்தான், இல்லையா?"

"ம்ம்ம்..." என்று யோசித்துவிட்டு "ஒரேநிலையில் நின்றுவிட்டு மாற்றியதால் ஒரு மாதிரி இருந்திருக்கும். எப்படியும் பழகிப் போய்விட்டதால் ஒன்றும் தெரிவது இல்லை, சசி!" என்றாள் அவள்.

"ஆனால்கூட ஏன் கஷ்டப்பட வேண்டும், சாரு? மேலும் ஓரிருவரை வேலைக்கு அமர்த்திக் கொண்டு அவர்களைக் கொண்டு படம் எடுப்பதுதானே? சம்பளம் கொடுத்தால்கூட லாபம் வரும்தானே?"

"லாபத்துக்காக மட்டும் செய்யவில்லை, சசி. இந்த வேலை எனக்குப் பிடித்தமும்கூட. இதன் காமிராக் கண்வழியே பார்க்கும்போது எவ்வளவு சுவாரசியமாக இருக்கும் தெரியுமா? ஏன், உங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். அன்று முன்னே பின்னே தெரியாத போதும், என் சன்னியை உங்களுக்கு ஏன் கொடுத்தேன், சொல்லுங்கள். காமிரா வழியே பார்த்தபோது நீங்கள் இருக்க முடியாமல் சங்கடப்படுவது நன்றாகத்தெரிந்தது. யாரும் அறியாமல் கையைத் திருப்பித் திருப்பி மணி பார்த்தீர்களே, அதனால்தான் அவசரமாகப் போக வேண்டும் என்றதும் நம்பி என் வண்டியைத் தந்தேன்."

"ஓஹோ!" என்றான் சசிகாந்தன். "ஆக, இந்த என் தொழில் முயற்சியின் வெற்றிக்கு உன் வீடியோ காமிராவும் உதவியிருக்கிறது என்று சொல்லு. ஞாபகச் சின்னம் நம்பர் இரண்டு. இல்லையில்லை. இதுதானே முதலாவது. இதன் வழியே பார்த்ததால்தானே உன் வண்டியைத் தந்ததாகச் சொன்னாய். கடவுளே, பழசாகித் தூக்கிப் போடுகிற காலத்தில் ஞாபகச் சின்னமாக வாங்குவதற்கு இதற்கு என்ன விலை தர வேண்டி யிருக்குமோ?" என்று கவலை காட்டிக் கேட்டான்.

"சேச்சே, ரொம்ப எல்லாம் வேண்டாம் சசி. ஆனால் முதல் ஞாபகச் சின்னம். அதற்கும் மதிப்பு கொடுத்தாக வேண்டும். அதனால் என்ன ஒரு.. ஒரு ஐம்பது மடங்கு என்று வைத்துக் கொள்ளுவோமா?" என்றவளுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது.



"ஐம்பது மடங்கா, தேவுடா. உன்னோடு வியாபாரம் செய்தால் எதிராளி அம்பேல்தான்!" என்றுரைத்து அவளோடு அவனும் சேர்ந்து நகைத்தான்.

அங்குமிங்கும் தயார் நிலையில் நின்று கொண்டிருந்த பலர் புன்னகையோடு திரும்பிப் பார்க்க, ஒரு ஜோடிக் காதுகளில் மட்டும் இந்தச் சிரிப்புச் சத்தம் நாராசமாக விழுந்தது.

அந்தக் காதுகளுக்குச் சொந்தக்காரன் நந்தகுமாரன்.

சசிகாந்தனுக்குச் சுற்றி வளைத்து ஏதோ ஒரு வகையில் உறவினன் இந்த நந்தகுமாரன். சசி குடும்பங்களில் கலந்த ஒரு திருமண உறவின் ஒரு தூரத்து உறவு. அந்தத் திருமணத்துக்கு வந்திருந்தவனுக்கு, இந்தக் குடும்பங்களின் வளமும், ஒட்டுறவும் பிடித்துப் போயிற்று.

அவர்களோடு, தானும் ஐக்கியமாகிவிட வேண்டும் என்று அப்போதே அவன் முடிவு செய்துவிட்டான்.

ஆனால் எப்படி ஐக்கியமாவது?

திருமணஉறவின்றி, வேறு விதமாய் அதனுள் நுழைய முடியாது.

'சசி' குடும்பத்துப் பெண்கள் யாரையாவது மயக்கி, மணந்து உள்ளே புகுந்து விடலாமா என்று யோசித்தான். ஆனால் அதற்குரிய கவர்ச்சிகரமான தோற்றமோ, அந்தஸ்தோ அவனிடம் இல்லை.

ஆனால் பதுமை போல அழகிய தோற்றத்துடன் அவனுக்கு ஒரு தங்கை இருந்தாள்.

அவள் பெயரும் அழகிதான்.

அக்கம் பக்கம் உள்ள பலரும், அவள் அழகுக்குப் பெரிய பணக்காரன் ஒருவன் அவளைக் கொத்திக்

கொண்டு போய்விடுவான் என்றார்கள். அப்படிக் கொத்திக் கொண்டு போகும்போது நந்தகுமாரின் நிலை உயரும்தானே?

ஆனால் அப்படி ஒரு பணக்காரன் கண்ணில் அவள் பட்டால் அல்லவோ அவன் அவளைக் கொத்திக் கொண்டு போவதற்கு?

மாதக் கடைசியில் வியஞ்சனத்துக்கு வழியில்லாமல் வெறும் ரசம், துவையலில் சாப்பாட்டை முடிக்கும் இடத்தில் இருந்து கொண்டு அவள் எந்தப் பணக்காரன் கண்ணில்பட முடியும்?

தங்கை திருமணம் செய்யப் போகிற பணக்காரக் குடும்பம் சசி குடும்பங்களில் ஒன்றுதான் என்பது அவன் ஏற்கெனவே முடிவு செய்துவிட்ட விஷயம்.

அங்கேதான் இப்போது உறவென்று சொல்லிக் கொண்டு உள்ளே தலையை நீட்ட ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எனவே அங்கே முயற்சி செய்வதுதான் இலகுவாக இருக்கும்.

அடுத்து, அவற்றுள் எந்தக் குடும்பம் என்று நந்தகுமார் ஆராய்ந்தான்.

மொத்தத்தில் அங்கே நாலைந்து திருமண வயதுப் பையன்கள் இருந்தார்கள்.

ஆனால், அந்தக் குடும்பங்களில் வெளிநாட்டுப் படிப்பை ஒரு கட்டாயமாகக் கொண்டிருந்ததால் அவர்களில் மூன்று பேர் இந்த நாட்டிலேயே இல்லை. குறைந்தது ஏழெட்டு மாதங்களுக்கு முன்பாக எவனும் திரும்பி வருவதாகவும் இல்லை.



மீதி இருந்தவர்களில் ஒருவனுக்குத் திருமணம் நிச்சயமாகியிருந்தது. இன்னொருவன் தன் காதலிக்காக உயிரை விடுகிறவனாக இருந்தான்.

கடைசியாக மிஞ்சியவன் சசிகாந்தன்தான்.

அவனைப் பற்றி விசாரித்து அறிந்தபோது நந்த குமாரனுக்குத் தன் அதிருஷ்டத்தில் ரொம்பவும் நம்பிக்கை வந்துவிட்டது.

சொல்லப் போனால் இவ்வளவா என்ற வியப்புக்கூட.

மற்றப்படி, வீட்டின் ஒரே ஆண் வாரிசாக இருந்தும் கிட்டத்தட்ட முப்பது வயது வரை, இருபத்தெட்டு முடிந்து விட்டதாகக் கேள்வி, அதுவரை அவன் மணமாகாமல் இருப்பானா?

அதிலும் அவனுடைய தாயாருக்கு எந்த இளம் பெண்ணைப் பார்த்தாலும் முகத்தில் ஏக்கப் பார்வை தோன்றிவிடும். தன் மருமகளாகக் கற்பனை செய்யத் தொடங்கி விடுவாளாம்.

அவ்வப்போது அழகியைக் கூட்டிப் போய் அந்த அம்மாள் முன்னிலையில் நிறுத்தினாலே அந்தம்மா கவிழ்ந்துவிடுவாள். அடிக்கடி பார்க்கும்போது அழகியின் எழிலில் பையனும்தான் மையலாகிவிட மாட்டானா என்ன?

அவன் இவ்வளவு காலம் திருமணமாகாமல் இருந்ததே அழகியை மணப்பதற்காகத்தான்.

சொல்லப் போனால் நந்தகுமாரனுடைய தூரத்து உறவுக்காரி 'சசி' குடும்பத்து மருமகள் ஆனதே இந்தத் திருமணத்துக்கு அடிக்கல் நாட்டத்தான் என்று, அவன் மனதில் வெகுவாக நிச்சயப்பட்டுவிட்டது.

அதிலும் 'சசி' குடும்பங்களிலும் சசிகாந்தன் குடும்பம் மற்றவரைவிட உயர்ந்தது.

அவனது மனக்கண்ணில் அழகி அந்தவீட்டு மருமகள் ஆகிவிட்ட மாதிரியும், தங்கையைப் பார்க்கவென்று அவன் செல்லும்போதெல்லாம் இருபது, முப்பது என்று ஆயிரக்கணக்கில் பணத்தைப் பிறர் அறியாமல் அழகி அவனுக்கு அள்ளித்தருவதுபோலவும் காட்சிகள் தோன்றி அவனை உள்ளம் குளிரச் செய்து கொண்டிருந்தன.

ஆனால், இதெல்லாம் சும்மா கையைக் கட்டிக் கொண்டிருந்தால் நடக்காது. அடிப்படை வேலைகள் பல செய்தாக வேண்டும்.

முக்கியமாகச் சசிகாந்தன் முன்னிலையில் அவள் காட்சி கொடுக்குமாறு செய்ய வேண்டும். இந்தவயதில் ஓர் இளைஞனும், இளம் பெண்ணும் அடிக்கடி பார்க்கும்படி நேர்ந்தாலே ஒருவருக்கொருவர் மன்மதனும், ரதியுமாகத் தோன்றத் தொடங்கி விடுவார்கள் என்று சொல்லக் கேட்டிருந்தான். அவன் தங்கையோ, சும்மாவே அழகி. பின்னே சசிகாந்தன் அவள் காலில் விழுந்துதானே ஆகவேண்டும்.

முதலில் ஏதாவது காரணங்களைச் சொல்லிக் கொண்டும், பிறகு காரணமே இல்லாமலும், சசிகாந்தன் வீட்டுக்கு நந்தகுமாரன் தன் தங்கையை அழைத்துச் சென்றான்.

தாயில்லாத தங்களுக்கு, சசிகாந்தனுடைய அன்னையைப் பார்க்கையிலே தாயாகத் தோன்றுவதாகச் சொல்லி, ஒரு தரம் கண்ணைக் கசக்கவும், மந்தாகினி உருகி, அடிக்கடி வந்து போகும்படி அனுமதி கொடுத்தாள்.



பொதுவாகவே, பணக்காரர்கள் என்றால், ஏதாவது உறவைச் சொல்லிக் கொண்டு இச்சகம் பேசுவோர் வந்து நிற்பது இயல்புதான்.

அதிலும் 'சசி' குடும்பங்கள் பரம்பரைப் பணக் காரர்கள் என்பதால், இது போன்ற உறவுகள் வருவதும், போவதும் மந்தாகினிக்குப் பழக்கமே.

எனவே இவர்களையும் அவ்வாறே எண்ணி சகஜமாக நடத்தினாள்.

ஆனால் ஏதேதோ கற்பனைகளில் ஆழ்ந்திருந்த நந்தகுமார், தன் எண்ணம் விரைவிலேயே பலிக்கப் போவதாக எண்ணினான்.

வாரத்துக்கு மூன்று நாட்களாவது, சசிகாந்தனின் வீட்டுக்குப் படையெடுத்ததோடு, ஏதாவது காரணம் காட்டித் தங்கையை அவன் முன்னே கொண்டு நிறுத்திப் பேச வைக்கலானான்.

கஷ்டப்படுகிற தோழியைப் பார்த்தால், பா...வமாக இருக்கிறது . அவளுக்கு வேலை போட்டுத் தர முடியுமா?

அக்கம் பக்கத்தில் ஒரு சிறுமிக்குப் பெற்றோர் இறந்து விட்டார்கள். அவளை அனாதை இல்லத்தில் எப்படிச் சேர்ப்பது?

இப்படி அழகியின் நல்ல சுபாவத்தை வெளிக் காட்டும் விதமான கேள்விகளை முதலில் வைத்தான். பிறகு அடுத்த படிக்குப் போனான்.

மேலே படிப்பதா, போதும் என்று விட்டுவிடுவதா என்று ஒரே குழப்பமாக இருக்கிறதே, என்ன செய்வது?

கம்ப்யூட்டர் படிப்பில், எது குடும்பத்துக்குப் பயன் படுவது? அதை நான் எடுத்துப் படிக்கவா வேண்டாமா?

இப்படித் தங்கைக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து, அவனிடம் கேட்க வைத்தான்.

எல்லாமே, மேலே படிப்பு எதற்கு? என்னைத் திருமணம் செய்து கொள் என்ற பதிலுக்கு உரிய கேள்விகள்.

அழகிக்கு அழகு இருந்த அளவுக்குப் புத்திகூர்மையும் இருந்திருந்தால் ஒருவேளை அந்தப் பதிலை வரவழைத்தும் இருக்கலாம். ஆனால் அவள் கிளிப் பிள்ளையாக அண்ணன் சொன்னதைச் சொன்னாளே தவிர, வாசகத் தோடு மேற்கொண்டு பேச்சை வளர்க்க அவளுக்குத் தெரியவில்லை.

ஐந்தாறு ஆண்டுகளாகத் தொழிலைக் கவனிப்ப தோடு அதை நல்ல முறையில் வளர்த்தும் வந்த சசி காந்தனுக்கு முதலிலேயே அழகி எப்படி என்று புரிந்து விட்டது. பாவம்! வீட்டுப் பறவை. ஆனால் மற்றவர்களைப் பார்த்துத் தானும் ஏதாவது பெரிதாகச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறாள் என்று எண்ணினான்.

மாறாக, அண்ணன் ஆட்டி வைக்கிறான் என்றோ, அவனது குறி தானே என்றோ, சசி கொஞ்சமும் எண்ணினானில்லை.

கல்யாணத்தைப் பண்ணிக்கொண்டு குடும்பத்தை நல்லபடியாக நடத்துவது தவிர, நீ வேறு எதற்கும் லாயக்கு இல்லை என்று எப்படிச் சொல்வது, முகத்தில் அறைந்தது போலத் தோன்றாதா என்று உள்ளதைச் சொல்லத் தயங்கிக் கொண்டிருந்தான் அவன்.

கூடவே 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்', உறவு விருந்தினர் என்று வருகிறவர்களிடம் நல்லவிதமாகப் பேசிப் பழகுவதே நாகரீகம் என்று வளர்ந்திருந்ததால்,



அவள் கேட்ட கேள்விக்கு ஏதாவது நோகாமல் பதில் சொல்லிவிட்டுப் போவான்.

"மாதர் மன்றத்து உப தலைவி, என் அம்மா. பொது வாகப் பெண்களுக்கு எது நல்லது என்று என்னை விட, அம்மாவுக்கு நன்றாகத் தெரியும். இதெல்லாம் பற்றி, அவர்களிடம் கேள்," என்று மெல்லத் தாயிடம் தள்ளி விட்டான்.

தாயில்லாப் பெண் என்ற பரிதாபத்தில் மந்தாகினியும் அழகியைத் தன்னோடு கூட்டிக் கொள்ளுவாள். சொன்னதைச் செய்வதோடு, கூடவே சிறுசிறு வேலை களைத் தானாகவும் செய்து கொண்டு, சத்தமின்றி அடக்க ஒடுக்கமாக இருக்கும் இந்தப் பெண்ணிடம் பெரிய வளுக்குப் பரிதாபம் உண்டு. துணி மணி சிறுநகை என்று அந்தத் தாயில்லாப் பெண்ணுக்கு ஏதாவது வாங்கிக் கொடுப்பாள். வெளியே செல்லும்போது தன்னோடு அழைத்துச் செல்வதும் உண்டு.

ஒரு நல்ல வேலையில் இருப்பவனுக்கு அவளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது, மந்தாகினியின் எண்ணம் என்று நல்ல வேளையாக நந்தகுமாரனுக்குத் தெரியாது.

எறும்பூரக் கல் தேய்கிற மாதிரி, தான் போட்ட திட்டம் நல்லபடியாக நிறைவேறிக் கொண்டு இருப்பதாக எண்ணி அவன் தன் வருங்கால கனவுகளில் திளைத்து மகிழ்ந்தான்.

இந்த நிலையில்தான் சிவானந்தனின் நிச்சய தார்த்தமும், அதை அடுத்துச் சசிகாந்தனின் புதிய தொழில் ஏற்பாடுகளும் நடந்தன.

சிவானந்தனின் நிச்சயதார்த்தத்துக்கு நந்தகுமார் குடும்பத்துக்கு அழைப்பு இல்லாவிட்டாலும், அலுவலகத் திறப்பு விழாவுக்குத் திவாகரனிடம் இருந்து, ஓர் அழைப்பைக் கறந்துவிட்டான் அவன்.

மந்தாகினியோடு வருமாறு தங்கையை அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு, சசிக்கு உதவிபுரியும் சாக்கில் அவன் முன்னதாகவே வந்தான்.

ஏனெனில், அந்த வீடியோக்காரி பற்றி நந்த குமாரனுக்கு ஒரு சிறு கலக்கம் இருந்தது. அவளிடம் ஒரு காரியமாக அழகி வந்திருக்கிறாள் என்று, அவன் பொய் சொன்ன பிறகும், வேலையிருப்பதாகச் சொல்லி, அந்த வீடியோக்காரியோடு சசிகாந்தன் போனானல்லவா? அப்போதிருந்தே உறுத்தல்தான்.

அலுவலகத் திறப்பு விழாவைப் படம் பிடிக்கப் போகிறவளைப் பற்றி, மந்தாகினிதான் பேசித் தீர்த்து விட்டாளே.

அவளுக்கென்ன பேசுவதற்கு வேறு விஷயமா கிடைக்கவில்லை? கண்ணராவி. அந்தப் பெண்ணைப் பற்றி அறுத்துத் தள்ளிவிட்டாள்.

என்ன... அவள்தான் வருங்கால மருமகள் மாதிரி, சாரு இப்படிப் பேசினாள்... அப்படிக் கேலி செய்தாள்... அது இது என்று...

அதென்ன சாரு? ஒரே தடவை பார்க்குமுன் அப்படியொரு கொஞ்சல்?

பெரியவள் சொல்லச் சொல்ல, கண்கள் விரிய உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த தங்கையின் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைக்க வேண்டும் போல, நந்த குமாரனுக்குக் கை துறுதுறுத்தது.



அவளும் இப்படிச் சிரிக்கச் சிரிக்கப் பேசியிருந்தால் இன்னொருத்தி நினைவு அந்த அம்மாள்மனதில் தங்குமா? அவள் போன வினாடியே அவளைப் பற்றிய நினைவும் மறந்து, மறைந்தும் போயிருக்குமே.

இப்படிக் கண்ணால் பார்க்குமுன்பாகவே, உள்ளூர ஒரு கொதிப்பில் இருந்த நந்தகுமாரன் அலுவலகக் கட்டிடத்தினுள் நுழையும்போது, எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போல, பிரச்சனைக்குரிய இருவருமே கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்ததை நேரிலேயே பார்க்க நேர்ந்தது.

## 11

சசிகாந்தனிடம் பணிபுரிகிற பலர், அதிலும் முக்கிய மான பொறுப்புகளை நிர்வகிக்கிறவர்களும், அவர்களின் கீழ் வேலை செய்கிறவர்களுமாகப் பலர் அங்கே இருந்தனர். கடைசி நேரத்து டச் அப் என்பார்களே, அது போன்ற சிறுசிறு வேலைகளைச் செய்து கொண்டும், செய்வதை மேற்பார்வையிட்டுக் கொண்டும் அங்கே இருந்தனர்.

அவர்கள் அத்தனை பேரும் பார்க்க, இவர்கள் இருவரும் தனியாக உட்கார்ந்து சிரித்துப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்?

பார்க்கிறவர்கள் என்ன நினைத்தாலும் சந்தோஷம் தான் என்பதா? அல்லது நினைக்கட்டும் என்றே வேலை நடக்கிறதா?

தன் மனக் கோட்டைகள் எல்லாம் வெறும் மண் கோட்டையாக ஒரு காற்றில் உதிர்ந்து தரை மட்டம் ஆவது

போல உணர்ந்த நந்தகுமாருக்கு நெஞ்சு உலைக்களமாய்க் கொதித்தது.

நேரே போய் வெட்கமில்லையா உங்களுக்கு என்று கத்த வேண்டும் போல வந்த ஆத்திரத்தைப் பெரு முயற்சி செய்து அடக்கிக் கொண்டான்.

இல்லை. இது ஆத்திரத்தைக் காட்டுகிற நேரம் அல்ல.

இருவருமே திருப்பிக் கொண்டு, 'ஆமாம் அப்படித் தான்!' என்று விட்டால், அப்புறம் எல்லாமே கெட்டு விடும். அதிலும் சசிகாந்தனுக்குக் கோபமூட்டுவது ஆபத்து. அவளிடம் ஒரேயடியாக ஒட்டிக் கொண்டுவிடக் கூடும்.

எனவே அவர்களைப் பிரிப்பதானால் அமைதியாக யோசித்து வேலை செய்ய வேண்டும்.

அமைதி காக்க வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாலும், அதைச் செயல் படுத்துவது நந்த குமாரனுக்கு மிகவும் கடினமாக இருந்தது.

யாரும் கவனிக்குமுன், ஓசைப்படாமல் வெளியே சென்று, அந்தப் பக்கம் அலுவலகங்களுக்கு டீ கொண்டு சென்று கொண்டிருந்த ஒருவனிடம் ஒன்றிற்கு இரண்டு டீ வாங்கிக் குடித்த பிறகுதான் அவனால் நிதானமாகச் சிந்திக்க முடிந்தது.

பகையாளிக் குடும்பத்தை உறவாடிக் கெடு என்பது பழைய வாக்கு.

அந்தப் பெண்ணையும் உறவாடித்தான் கெடுக்க வேண்டும்.

அப்போதுதான் வருகிறவனைப் போல, அலுவலகத் துக்குள் சென்று. "அத்தான்... அத்தான் எங்கே?" என்று



சசிகாந்தனைத் தேடினான். தலை திருப்பிப் பார்த்து, "அட அத்தான், நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்? இது..." என்று இழுத்தான்.

சசிகாந்தன் சாருமதியின் பேரைச் சொல்லி அறிமுகப்படுத்தத் தொடங்கியதும், "ஓ! நீங்கள்தான் காமிராக்கார அம்மாவா? அய்யோ, எங்கள் அத்தைக்கு... அத்தானுடைய அம்மாவைச் சொன்னேன்... அவர்களுக்கு வாயைத் திறந்தால் உங்கள் பேச்சுதான். பேச்சில் ரொம்பக் கெட்டிக்காரியாம் மாமாவையே மடக்கிவிட்டீர்களாமே. உங்கள் துணிச்சலைப் பற்றியும் ரொம்பச் சொன்னார்கள். தொழிலில் மிகுந்த ஈடுபாடாம். தொழில் அவளுக்குக் குடும்பம் மாதிரி என்றார்கள். அப்படித்தான் இருக்க வேண்டும். அப்போதுதான் தொழிலில் முன்னேறி ஓர் உயர்ந்த இடத்தைப் பிடிக்க முடியும். இதோ என் அத்தானைப் பாருங்கள். அவரும் அதே போலத்தான். செய்கிற தொழிலே நினைவாக உழைத்தால்தானே ஜெயிக்க முடியும்? ஆனால் என் தங்கை... நல்ல அழகிதான். ஆனால் மற்றப்படி உங்கள்கிட்டேகூட வரமாட்டாள். அவளெல்லாம் கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு புருஷனுக்குப் பிடித்த மாதிரி அவனுக்காகத் தியாகங் களை மகிழ்ச்சியோடு செய்து கொண்டு, அவன் எந்நேரம் வந்தாலும் அவனுக்காகச் சாப்பிடாமல் காத்துக் கிடக்கிற தினுசு. அது... குடும்பத்துக்குச் சரிப்படலாம். ஆனால் உங்களை மாதிரிப் பேரும் புகழும் பெற முடியாது. அடடா...நான் யாரென்றுகூடச் சொல்லாமல் நானே பேசிக் கொண்டு போகிறேனே! சார்... அத்தான்... அத்தை இவர்களைப் பற்றியே பேசிக்கொண்டே இருந்தார்கள்? மனதில் ரொம்ப ஒரு இது வந்துவிட்டது. நேரில் பார்த்ததும் என்னையே மறந்து விட்டேன். நீங்கள்

பார்வைக்கு இவ்வளவு அழகாய் இருப்பீர்கள் என்று எதிர் பார்க்கவே இல்லை....சாரு...சாருமதி!" என்று யாரும் குறுக்கிட முடியாதபடி வேகமாக நீளமாகப் பேசி முடித்தான்.

இந்தப் பேச்சுக்கு என்ன மாதிரிப் பதில் சொல்வது என்று சாருமதி திகைத்தாள்.

அவளை வெகுவாகப் புகழ்ந்தபோதும் குடும்பத்துக்கு லாயக்கு கிடையாது என்று சொல்லாமல் சொல் கிறானோ என்ற சந்தேகம் நந்தகும்ாரனின் முகத்தைப் பார்த்ததும் மறைந்தது.

அந்த அளவுக்குப் பிரமிப்பும் ஆர்வமுமாகப் பார்த்துக் கொண்டு நின்றான் அவன்.

ஓரக் கண்ணால் சசிகாந்தனைப் பார்த்தால், அவன் முகத்திலும் சிறு இறுக்கம் காணப்பட்டது.

ஆனால் உடனேயே அதை மாற்றிக் கொண்டு, "இவர் பெயர் நந்தகுமாரன், சொந்தக்காரர்!" என்று முறைமை தவறாமல் அறிமுகம் செய்து வைத்தான் அவன்.

ஆனால் அவள் எதுவும் பேச இடம் கொடாமல், "என்ன நந்தகுமார் இப்போதே இந்தப் பக்கம்? விழாத் தொடங்க, இன்னும் நேரம் இருக்கிறது," என்றான்.

"அழகியை அத்தை தன்னோடு கூட்டி வருவதாகச் சொன்னார்கள். உங்கள் வீட்டுக்குச் சரியாக அலங்காரம் எதுவும் பண்ண வேண்டியிருக்குமோ என்று அவளைச் சீக்கிரமாக அழைத்து வந்தேன். இங்கே உங்களுக்கு ஏதாவது உதவி தேவையிருக்குமோ என்று நான் இங்கே வந்தேன்," என்றான் நந்தகுமாரன்.

உறவினர் என்றால் செய்ய வேண்டியதுதானே என்று எண்ணிய சாருமதியின் பார்வை, சுற்றிலும் ஒரு தரம் சுழன்றது.



ஆனால் எங்கும் எந்த வேலையும் பாக்கி இராதது போலத் தோன்றவும் பெருமிதமாக உணர்ந்தாள் அவள்.

சசி, திட்டமிட்டுச் செயல் புரிகிறவன் கடைசி நேரத்தில் அவசர அவசரமாகச் செய்ய எந்த வேலையும் அங்கே இல்லை.

அவளது பெருமித நோக்கு சசியிடம் திரும்பவும், நந்தகுமாரன் குறுக்கே வந்தான்.

"சொல்லப் போனால் அத்தான் வேலையில் நான் உதவி செய்ய ஒன்றும் இராது. எல்லாம் ஆட்களை வைத்துப் பார்த்துக் கொள்வார். நீங்கள் தனியாக இருக்கிறீர்களே, உங்களுக்கு நான் ஏதேனும் உதவக் கூடுமா?" என்று அவளிடம் வினவினான்.

இந்த வேலையில் இவனுக்கு என்ன தெரியும் என்று ஏளனமாக எண்ணிய சாருமதி, அதைக் காட்டிக் கொள்ளாமல், "இல்லை, அவசியம் இல்லை!" என்று இதமாகவே மறுத்தாள்.

எப்படியும் உதவ நினைக்கிறவன், அத்தோடு சசியுடைய உறவினன். இவனை மட்டம் தட்டக்கூடாது அல்லவா?

அதற்குள், "உங்கள் படம் பிடிக்கிற விவகாரம் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. சும்மா இந்தச் சுமையை இங்கும் அங்கும் தூக்கி வந்து, அந்த மாதிரி உதவி பண்ணலாமே என்றுதான் கேட்டேன்," என்று ஒரு பணிவுடன் நந்தகுமாரன் கூறவும், அவளுக்கு மனம் இளகிக் கழிவிரக்கம் தோன்றிவிட்டது.

"எனக்கும் உதவி செய்ய என் ஆட்கள் வருவார்கள், மிஸ்டர் நந்தகுமாரன். அநேகமாக இன்னும் பத்து நிமிஷங்களில் வந்து விடுவார்கள் வீடியோவோடு

ஃபோட்டோவும் எடுக்க வேண்டும் அல்லவா? இதிலேயே சிலதை ஃப்ரீஸ் பண்ணி எடுக்கலாம். ஆனால் தனியாக எடுத்தால் வெவ்வேறு கோணத்தில் எடுக்கலாம். அதனால் இன்னும் இரண்டு பேரை வரச்சொல்லியிருக்கிறேன்," என்று விளக்கமாகக் கூறினாள்.

சசிகாந்தன் தயங்கினாற்போல் நிற்கவும், "நீங்கள் போங்கள், அத்தான். போய் உங்கள் வேலையைப் பாருங்கள். நான் இங்கே சாருமதிக்குத் துணை இருக்கிறேன். பேச்சுத் துணை என்றாலும் சரி. ஏதேனும் உதவி வேண்டுமானாலும் செய்கிறேன். குடிக்கக் கொள்ள ஏதாவது எடுத்துக் கொடுக்கட்டுமா?" என்று நந்தகுமாரன் கேட்டான்.

அதேசமயம், சுவரை ஒட்டிப் போடப்பட்டிருந்த சிறு மேடைப் பக்கம் இருந்து யாரோ அழைக்க, 'செய்' என்பதுபோல ஒரு கையசைவுடன் சசிகாந்தன் அங்கிருந்து அகன்றான்.

அவன் செல்வத்தைச் சாருமதி பார்வையால் தொடர்வதைக் கவனித்த நந்தகுமாரனுக்கு மீண்டும் கோபம் பொங்கியது. பார்க்கிற விழியிரண்டையும் நோண்டிவிட வேண்டும் போல ஒரு வேகம்.

ஆனால் நடக்க வேண்டிய முறை பற்றி ஏற்கெனவே திட்டமிட்டு வைத்திருந்தபடியால் அவசரமாக முகபாவத்தை மாற்றிக் கொண்டு, "சொல்லுங்கள், சாரு, உங்களுக்கு என்ன கொண்டு வரட்டும்?" என்று வினவி, அவள் பார்வையைத் தன்புறம் திருப்பினான்.

"ஒன்றும் வேண்டாம், நந்தகுமாரன். சசி ஏற்கெனவே பாதாம் பால் கொணர்ந்து கொடுத்தார். இப்போது வயிறு ஃபுல்!" என்றாள் சாருமதி.



'குடிக்கிற பானத்தைத்தானே வேண்டாம் என்கிறாய். கூடிய சீக்கிரமே சசிகாந்தன் சம்பந்தப்பட்ட எதுவுமே வேண்டாம் என்று ஓடும்படி உன்னைப் பேயோட்டி விடுகிறேன், பார்' என்று உள்ளூரக் கறுவினான் அவன்.

முடிவு என்னவாக இருக்க வேண்டும் என்பதில் அவனுக்குத் தெளிவு இருந்தது.

ஆனால் அதை அடையும் வழி பற்றித்தான் அவனுக்குக் கொஞ்சம் குழப்பம். ஏனெனில் சாருமதியின் கெட்டிக்காரத்தனம், துணிச்சலோடு அவளுக்கும் சசிகாந்தனுக்கும் இப்போதுள்ள நெருக்கத்தையும் பொறுத்திருந்தது அது.

கொஞ்சம் பயந்தவள் என்றால் இதிலேயே ஓடிவிடுவாள் என்று தொடங்கியதுதான் அவனது முதல் பேச்சு. அதையே தொடர்ந்து, "அன்றைக்கு என் தங்கையைச் சரியாகப் பார்த்தீர்களா? பேரழகியில்லை! அவள் பெயரும் அழகிதான். அத்தானுடைய அம்மாவுக்கு அவளைப் பார்த்ததுமே மிகவும் பிடித்துப் போயிற்று. அடிக்கடி வரச்சொல்லிப் பக்கத்திலேயே வைத்துக் கொள்வார்கள். அவளுக்குப் பெரிய வீட்டு இயல்புகள் வேண்டும் அல்லவா? இப்போதுகூட அவள் தன்னோடு தான் வர வேண்டும் என்று வீட்டுக்கு அழைத்து வரச் சொல்லி விட்டார்கள். அவள் அதிருஷ்டக்காரி. நல்லவேளை, அந்த வகையில் அவள் என்னை மாதிரி இல்லை," என்றான் சிறு சோகம் காட்டி.

நந்தகுமாரின் பேச்சு சாருமதியைச் சஞ்சலப் படுத்தியது உண்மை.

இன்னோரன்ன வார்த்தைகளால் இப்படித்தான் என்று தெளிவாக சொல்லவில்லை என்றாலும், சசியுடைய

தாயார் அழகி என்ற பெண்ணைத் தன் மருமகளாக வரித்து விட்டது போல, அவள் அண்ணனான இந்த நந்தகுமாரன் கூறுகிறான் எனும்போது, அவளுக்கு உள்ளூர ஒரு கலக்கம் உண்டாகத்தான் செய்தது. சசியின் சம்மதம் இல்லாமலா அவன் தாய் அப்படிச் செய்யக்கூடும்.

வெறும் பொறியல்ல, பெரு நெருப்பு என்று உணர்ந்த பிறகு, 'இம்' எனுமுன் எந்த முயற்சியும் செய்யாமல் சும்மாஒதுங்கி நின்று கண்ணீர் வடிக்கும் அளவு, அவள் கோழையல்ல.

ஆனால் இவனிடமோ. அன்றிச் சசியிடமோ கூட நேரடியாகக் கேட்கும் அளவுக்கு இப்படித்தான் என்று இந்த நந்தகுமாரன் உறுதியாக எதையும் கூறவில்லை.

சட்டெனச் சாருமதியுள்ளே ஏதோ நிமிர்ந்தது.

அதுவே, நந்தகுமாரன் உறுதியாக எதையும் சொல்லாததே அவளுக்குரிய செய்தியாகவும் இருக்கலாம்.

என் தங்கைக்கும் சசிகாந்தனுக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது. நிச்சயமாகப் போகிறது... அப்படி யென்று நந்தகுமாரன் சொல்லவே இல்லை.

அதாவது உண்மையில் அப்படி ஒன்றுமே கிடையாது.

அவன் குறிப்பாகப் பேசுவது எல்லாம் உள்ளூர அவனுக்கு இருக்கும் ஆசையாகக்கூட இருக்கலாம். அப்படித்தான். ஆசை மட்டும்தான். சசியுடைய தாயார் கருணையினாலோ, உறவு என்ற காரணத்தினாலோ பரிவு காட்டிப் பழகுவதை இவனது தங்கைப் பாசம் இப்படி யெல்லாம் கற்பனை செய்து கொள்கிறது போல.

அப்படித்தான் இருக்க வேண்டும்.



மற்றப்படி இத்தனை பேர் பார்க்க சசி அவளுடன் உட்கார்ந்து சிரித்துப் பேசியிருக்கமாட்டான். அன்று அவனிடம் பேச வேண்டும் என்றே அழகி வந்தபிறகும் தன்னைக்கூட்டிக் கொண்டு கிளம்பியிருக்கமாட்டான். அவன் மனதில் இருப்பது தானேதான் என்று எண்ணம் ஓடும்போது சாருமதி அவசரமாக அதற்குக் கடிவாள மிட்டாள்.

சசி வெறும் நட்பினால்கூட அவளுடன் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம். அன்றுகூட உண்மையிலேயே அவனுக்கு அவசர வேலை ஏதேனும் இருந்திருக்கலாம். அப்படி இல்லை என்று நிரூபிக்க என்ன இருக்கிறது.

நந்தகுமாரின் பேச்சு அவனது ஆசை மனதின் கற்பனை என்றால் அவளது எண்ணம் மட்டும் என்ன?

அவனைப் போலவே, அவளும் சொந்த விருப்பத் துக்கு ஏற்றவாறு சாதாரண நிகழ்வுகளுக்கு வேறு வண்ணம் தீட்டுகிறாள்.

இருவரும் ஒரே மாதிரிதான். ஆனால் அதிலும்கூடத் தன்னை விட நந்தகுமாரன் மேல் என்று சாருவுக்குத் தோன்றியது. ஏனெனில் அவள் தன் சொந்த வாழ்வு பற்றி சுயநலத்தோடு எண்ணமிடுகையில், நந்தகுமாரன் தங்கைக் காக அவளது நல்வாழ்வின் மீதுள்ள ஆசையில் அந்த மாதிரிக் கற்பனை செய்திருக்கலாம்.

பாசம் என்று தோன்றிவிட, "உங்களுக்குத் தங்கை யிடம் மிகுந்த பாசம் போல இருக்கிறதே. அந்த வகையிலும் உங்கள் சகோதரி அதிருஷ்டக்காரிதான்!" என்று முறுவலித் தாள் சாருமதி.

"உங்களைப் போலக் கெட்டிக்கார அழகான பெண் ணின் வாயிலிருந்து இப்படிப்பட்ட வார்த்தைகள் வரவும்

என் தங்கை கொடுத்து வைத்திருக்க வேண்டும். அந்த வகையிலும் அவள் அதிருஷ்டசாலிதான்!" என்றான் அவன்.

அவனது முதல் பேச்சு நினைவு வந்தது சாருமதிக்கு. இப்போது தங்கையை அதிருஷ்டக்காரி என்றதற்காக அவளையே அழகான பெண் என்று விட்டானே, வேடிக்கைதான்.

சிறு முறுவலோடு அவனைப் பார்த்தாள் அவள்.

பேச்சு வாக்கில் அவர்கள் புறமாகத் திரும்பிய சசிகாந்தன் முகம் கடுத்தான்.

அதேசமயம் அவனுடைய பெற்றோரும் அவன் தாயை ஒட்டியவாறு அழகியும் உள்ளே வந்தார்கள்.

"அதோ, அத்தை மருமகளை அழைத்து வந்து விட்டார்களே! அழகியின் நிறத்துக்குப் பொருத்தமாக எவ்வளவு அழகான சேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்!" என்றபடி, வந்தவர்கள் பக்கம் சென்றான் நந்தகுமாரன்.

அன்று தட்டில் இருந்த சேலைப் பெட்டி நினைவு வர, சாருமதி திகைத்து நின்றாள்.

அதுவா இது?

அந்தச் சேலை தனக்கோ என்று எண்ணி, அதைத் தவிர்ப்பது பற்றி யோசித்ததை நினைத்த அவளுக்கு அவமானமாக இருந்தது.

அதிலிருந்து மீள அவள் பெரு முயற்சி பண்ண வேண்டியிருந்தது.



## 12

அந்தத் திறப்பு விழாவைப் பற்றி நினைத்துப் பார்க்கும்போது ஒரே ஒரு விஷயம் தவிர மற்றதெல்லாம் சாருமதிக்கு மகிழ்ச்சி தருவதாகவே இருந்தது.

தொழில் தொடர்பான விழா என்பதால், அதிகக் கூட்டமின்றி, 'சசி' குடும்பங்கள் அனைத்திலிருந்தும் ஓரிரு ஆண்கள் மட்டும் வந்திருந்தனர்.

வெகு விரைவிலேயே திருமண மாப்பிள்ளையாகப் போகிற சிவானந்தன் விழாவுக்கு வந்திருந்தான். எல்லோருமே அவனைக் கோட்டா செய்து சிரித்தார்கள்.

அதிலும் காயத்ரியைத் தன்னோடு அழைத்து வரமாட்டாரா என்ற ஆவலில், அவன் தன் வருங்கால மாமனாருக்குச் சசி மூலம் அழைப்பு விடுத்திருந்தான். ஆனால் அவர் விவரம் புரியாமல் தனியே வந்து நின்று, 'மாப்பிள்ளை! மாப்பிள்ளை!' என்று உருகி வழிய எல்லோருமே வேடிக்கை பார்த்து நகைத்தார்கள்.

அதற்கு இடையில் சசியோடு சேர்ந்து, சாருவிடம் வந்து, "இனி எங்கள் விழாக்களுக்கெல்லாம் போட்டோ வீடியோ நீங்கள்தான் என்று கேள்விப்பட்டேனே!" என்று கிண்டல் குரலில் கூறினான்.

"நல்லசெய்தி. என் ஸ்டுடியோவை விரைவிலேயே இரண்டு மடங்கு பெரிதாக்கி விடுவேன்!" என்றாள் அவள்.

"செய்வீர்கள். தேவையான திறமை இருக்கிறதே!" என்றவன், அவனுக்கும் காயத்ரிக்குமாக அவள் எடுத்துக் கொடுத்த தனி ஆல்பங்களுக்கு நன்றி தெரிவித்தது அவளுக்கு மகிழ்ச்சி அளித்தது.

"ஆமாமாம். இப்போதெல்லாம் அந்த ஆல்பத்தை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தால் மணிக்கணக்காக அய்யா அசையவே மாட்டாராமே. கூப்பிட்டால்கூடக் காதே கேட்காதாம். சித்தி ரொம்பக் குறைப்பட்டார்கள். பார், எல்லாம் உன்னால் வந்தது!" என்று நண்பனைக் கேலி செய்வதில் சசி அவளையும் சேர்த்துப் பேச அவளுக்கு ரொம்பவே உற்சாகமாக இருந்தது.

அவளது ஆல்பத்துக்கு ஒரு மறைமுகப் பாராட்டும் அல்லவா?

இலகுவாக உரையாடலில் இணைந்து "ஊம்... நல்லதற்குக் காலமில்லை என்றால் இதுதான் போல. வேண்டுமானால் பாருங்கள் சசி. உங்கள் திருமணத்துக்கு நான் எதுவுமே பண்ணவே போவதில்லை!" என்றாள் அவள் பிகுவோடு.

உறவினரான இரு நண்பர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"முதலில் அதற்கு உங்களை யார் கூப்பிடப் போகிறார்கள்!" என்ற சிவானந்தனின் பேச்சில் குறுக்கிட்டு, "சிவா, அவர்கள் எந்த நிமிஷமும் வந்துவிடலாம். வா, வாசலுக்குப் போகலாம்," என்று நண்பனை இழுத்துக் கொண்டு போனான் சசிகாந்தன்.

பேச்சின் நடுவே திடுமெனச் செல்வதைப் பார்த்துத் திகைத்தவளுக்குச் சட்டென ஒன்று உறைத்தது. சசியின் திருமணத்துக்குப் படமெடுக்க முடியாது என்றல்லவா, சொல்லியிருக்கிறாள்.

அந்த வார்த்தைகள் எப்படி அவளது வாயில் வந்தன?

சரியாகச் சொல்லப் போனால் அவளது ஆசை நிறைவேறினால் அது முடியாதுதானே?



அவன் அருகில் அமர்ந்து கொண்டு அவளே எப்படிப் படம் பிடிக்க முடியும்?

அடி மனதில் இருந்த அந்த எண்ணம்தான் வார்த்தைகளாக வெளிவந்தனவா?

விதியின் வாக்கு என்பது இதுதானா?

அப்படித்தான் இருக்க வேண்டும். மற்றப்படி தொழிலை வளர்ப்பதில் எப்போதும் முனைப்போடு இருக்கும் அவள் வாயிலிருந்து அந்த எதிர்மறை வார்த்தைகள் எப்படி வர முடியும்?

கூடவே சிவானந்தனின் பேச்சும், அதை முடிக்க விடாமல் சிரித்துக் கொண்டு சசி அவனை இழுத்துச் சென்றதும், ஏதேதோ கற்பனைகளைத் தூண்ட, அவள் மிகுந்த உற்சாகத்துடன் வேலையில் ஈடுபட்டாள்.

ஜப்பானியர் வந்து விழா தொடங்கி நடந்து கொண்டிருக்கும்போதும், மேடையில் இருந்த சசிகாந்தன், சிவாவைக் கூப்பிட்டு ஏதோ சொல்ல, அவன் உடனே சாருமதியிடம் வந்து, "விழாவை வினாடி விடாமல் எடுக்க வேண்டியது இல்லையாம். எடிட்டிங்கில் பார்த்துக் கொள்ளலாமாம். வலிக்க வலிக்க இந்த இருநூறு கிலோ கனமுள்ள வீடியோ காமிராவைத் தூக்கிக் கொண்டே இருக்க வேண்டாமாம். அவ்வப்போது அதைக் கீழே வைத்துவிட்டு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமாம். மேலிடத்து உத்தரவு!" என்று மேடைப்பக்கம் கண்ணைக் காட்டிச் சொல்லிச் சிரித்தான்.

இருநூறு கிலோ காமராவாமே.

இவர்கள் எல்லோரும் கிண்டலடிப்பதில் வல்லவர்கள்தான் போலும்.

அதற்கு மேல் மேலிடமா?

முகச்சிவப்பையும், மென் சிரிப்பையும் சமாளித்துக் கொண்டு, "படம் பிடிக்கிற இலாகாவுக்கு நான்தான் தலைமை அதிகாரி. என் கணிப்புக்கு மாறாக வேறு எந்த மேலிடத்து உத்தரவையும் ஏற்பதற்கு இல்லை என்று சொல்லி விடுங்கள்," என்று திருப்பிச் சொல்லி அனுப்பினாள் அவள்.

"ஓகோ!" என்று உரக்கச் சிரித்தான் சிவா.

"பரவாயில்லையே. உங்கள் வீட்டில் சிவகாசிப் பட்டாசு நன்றாக வெடிக்கும்போல!" என்று மேலும் நகைத்தவாறே சென்றான் அவன்.

"சேச்சே. இந்த மனிதர் என்ன இப்படிச் சொல்லி விட்டுப் போகிறார்? உங்கள் முகத்தைப் பார்த்த பிறகு, யாருக்காவது உங்களோடு சண்டை போடத் தோன்றுமா? அப்படியே முழுச் சரணாகதிதானே!" என்றான், அருகிலேயே நின்று கொண்டிருந்த நந்தகுமாரன்.

சரணாகதியா? யார்?

சாருமதிக்கு மேலும் சிரிப்பு வந்தது.

நகை முகத்துடன் நந்தகுமாரனைப் பார்த்தவளுக்குச் சசியின் சொல்லை அலட்சியப் படுத்தவும் மனம் வரவில்லை. பேச்சு மரியாதைகள் எல்லாம் முடிந்து அப்போது மேடையில் பெரிதாக எதுவும் நடக்கவில்லை என்பதைக் கண்டதும் வீடியோ காமிராவைக் கீழிறக்கி வைக்க முற்பட்டாள்.

"கொடுங்கள், கொடுங்கள், நான் வைத்துக் கொள்கிறேன்," என்று கையை நீட்டினான். முறுவல் மாறாமல் அவனைப் பார்த்து, "நன்றி நந்தகுமார். ஆனால் இதை



நான் அடுத்தவர் கையில் கொடுப்பது இல்லை," என்று அவளே கவனத்துடன் அருகில் கிடந்த நாற்காலியில் வைத்தாள்.

தவறாக எடுத்துக் கொள்ளாதது போல, "பழைய காலத்தில் வாளையோ எதையோ யாரிடமும் கொடுக்க மாட்டார்களாமே, அது போலவா?" என்று கேட்டான் நந்தகுமாரன்.

"வாளைத்தான். ஆனால் அது கௌரவம் சம்பந்தப் பட்டது. இது அப்படியல்ல, கொஞ்சம் விலை உயர்ந்தது. அத்தோடு காமிராவை எப்படிக் கையாள்வது என்று எல்லோருக்கும் தெரியாது என்பதால் இதை வைப்பது எடுப்பது எல்லாமே நானேதான். சாரி, நந்தகுமார். உங்களுக்கும் இது பற்றித் தெரியாது என்று நான் சொல்லவில்லை. ஆனால் எதற்கும் கவனத்தோடு இருப்பது நல்லது என்றுதான் தரவில்லை. தப்பாக எண்ண வேண்டாம்," என்று விளக்கமாகச் சொன்னாள் சாருமதி.

ஏதோ உதவும் எண்ணத்தில் கேட்டானே என்பது அவளுக்கு.

ஆனால் இந்தக் காமிரா இவளுக்கு இவ்வளவு அருமையா? தற்செயலாக நடப்பது போல, இதை எப்படியாவது கீழே தள்ளி உடைத்து விட்டால், வருத்தப் படுவாள் அல்லவா என்று எண்ணினான் நந்தகுமாரன்.

ஆனால் அவள் வருத்தப்படுவதால், தன் ஆசை நிறைவேறப் போவது இல்லை என்ற ஒரு காரணத்துக் காகவே அந்தக் காமிரா பழுதாகாமல் தப்பித்தது எனலாம். கூடவே என்ன என்ன என்று சசிகாந்தனும் அவளிடம் வந்து நிற்கக்கூடும் அல்லவா? அப்படியொரு வாய்ப்பை அவனே ஏற்படுத்துவானேன்?

மேடை வேலை முடிகிறது என்கிற தருணத்தில் மந்தாகினி எழுந்து சாருமதியிடம் வந்தாள்.

அழகி பின் தொடர்ந்தாள்.

இப்படி ஒட்டிக் கொண்டே அலைகிறாளே, மந்தாகினியின் சம்மதம் இல்லாமலா இது நடக்கும்?

மகன் மனம் எப்படியாயினும், தாயின் தேர்வு இந்த அழகிதானோ என்ற கலக்கத்தை மறைத்து, பெரியவளைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள் சாருமதி.

"பாரம்மா, வீட்டிற்கு முன்னதாகப் போய் விருந்து ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. உன்னிடம் இருந்து இரண்டு வார்த்தை பேச முடியவில்லை. இடையில் பேசலாம் என்றால் வேலை நடுவில் உன்னைத் தொந்தரவு செய்யக் கூடாது என்று அங்கேயே உட்கார்ந்திருந்தேன். இப்புறம் அப்புறம் திரும்பாமல் எவ்வளவு தீவிரமாகப் படம் பிடித்தாய். பார்த்துக் கொண்டே இருந்தேன். உன் அங்கிளிடம் சொன்னால் மிகவும் சந்தோஷப்படுவார். அவருக்கு எதைச் செய்தாலும் முழு மனதோடு... ஊகூம்... உன்னிடம் நிறையப் பேச ஆசைதான். ஆனால் பேசிக் கொண்டு நிற்க நேரம் இல்லை, வரட்டுமா? நீதான் வீட்டுக்கு வருவாயே, விருந்து முடிந்ததும், எங்களோடு சற்று நேரம் இருந்துவிட்டு அப்புறமாகப் போகலாம். என்ன, வரட்டுமா?" என்று சின்னத் தலையசைப்புடன் கிளம்பிச் சென்றாள்.

"நீ வாம்மா. வீட்டில் நிறைய வேலை இருக்கிறது. சீக்கிரம் போக வேண்டும்," என்று கூட வந்த அழகியையும் மந்தாகினி விட்டு விடாமல் அழைத்துக் கொண்டுதான் சென்றாள்.

ஆனால் தன்னிடம் பேசிய தொனியும், விதமும் மனதை உறுத்திய எத்தனையோ கேளாத கேள்விகளுக்கு



உரிய பதிலைத் தந்துவிட்டது போல உணர்ந்து சாருமதி நிம்மதியுற்றாள்.

எதையும் தடுக்க முடியாமல் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்த நந்தகுமாரனுக்கு நெஞ்சு கொதித்தது.

வாடா போடா என்று இந்தப் பெண்ணிடம் என்ன கொஞ்சல். இந்த மந்தாகினிக்கு வீட்டில் ஓசி வேலை செய்ய மட்டும் அவன் தங்கையா?

ஒருவிதக் கடமையும் இன்றி, அவனுடைய தங்கைக்கு மந்தாகினி வாங்கிக் கொடுத்திருந்த அணிமணிகளைப் பற்றிய எண்ணமே அப்போது அவனுக்கு வரவில்லை. நினைவு வந்திருந்தாலும்கூட வருங்கால மருமகளுக்கு அந்த அம்மாள் இதைவிடக்கூட அதிகமாகக் கொடுத்திருக்க வேண்டும் என்றுதான் வாதாடியிருப்பான் அவன்.

ஆனால் இந்த ஆத்திரம் எரிச்சலிலும் சாருமதியின் உதட்டளவிலான முதல் முறுவலும் அடுத்து அவள் முகத்தில் மலர்ந்த ஆனந்தமும், அவனது கவனத்துக்குத் தப்பவில்லை.

எனவே, தன்னால் ஆன கைங்கர்யமாக, "இந்த மாதிரியான பெரிய விருந்துகள் வைக்கும்போது என்னென்ன முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும் என்று அழகிக்குக் கற்றுக் கொடுப்பதற்காகக் கையோடு அழைத்துப் போகிறார்கள். வருங்காலத்தில் அவளே செய்யத் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?" என்று விளக்கம் கொடுத்தான்.

மந்தாகினியின் அன்பான சிறு பேச்சினாலோ என்னவோ, சாருமதிக்கு இப்போது மனதில் பயம் தோன்றவில்லை.

மாறாக, அழகான தங்கையை உடையவன் அவளது வளமான வாழ்வு பற்றிய ஆசையில் பேசுகிறான். பாவம்! - என்று தோன்றியது.

ஒருவேளை அவளும் அப்படித்தானோ! உள்ளத்திலுள்ள ஆசை காரணமாகவே ஒன்றும் இல்லாததை எல்லாம் தனக்குச் சாதகமாக எண்ணுகிறானா?

ஒரு கணம் தோன்றிய சந்தேகம் உடனேயே மறைந்து விட, நந்தகுமாரனிடம் பரிதாபமே உண்டாயிற்று. "உங்கள் தங்கையின் அழகு, அடக்கத்துக்கு நிச்சயமாக ஒரு நல்ல இடத்தில் திருமணம் நடக்கும், நந்தகுமாரன்!" என்றாள் அவள்.

"கட்டாயம்!" என்றான் அவனும்.

தானும் கிளம்ப வேண்டியதுதானா என்று யோசனையோடு திரும்பிப் பார்த்தால் சசியின் முகம் சரியாக இல்லை. ஏதோ எரிச்சல் என்பது நன்றாகத் தெரிந்தது.

ஏதேனும் பிரச்சனையா? விழா நன்றாகத்தானே நடந்தது?

"இதைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ள முடியுமா, நந்தகுமார்?" என்று கேட்டு, அவன் தலையாட்டிவிட்டு அங்கேயே அமரவும், சசியிடம் விரைந்தாள்.

"என்ன விஷயம் சசி?" என்று மெல்ல விசாரித்தாள். "ஏதேனும் பிரச்சனை வந்து விட்டதா?"

"நல்ல கேள்விதான். ஆமாம், உன் அருகில் வஜ்ரப்பசை ஏதும் கொட்டி விட்டதா? அந்த நந்தகுமாரன் உன் பக்கத்தை விட்டு நகரவே காணோமே. அவன் கால் அங்கேயே ஒட்டிக் கொண்டு விட்டதோ?" என்றான் தாழ்ந்த குரலிலும் எரிச்சலைக் காட்டி.

ஒரு கணம் திகைத்து நோக்கியவளின் கண்களில் குறும்பு மலர்ந்தது.



"இது உங்கள் இடம். எங்கே கோந்து, எங்கே மார்பிள் போட்டு வைத்திருக்கிறீர்கள் என்று எனக்கென்ன தெரியும்? நந்தகுமாரனும் உங்கள் சொந்தக்காரர். உங்களுக்காக நான் வேண்டுமானால் அவரிடம் போய் அவரது கால் விஷயம் என்ன என்று கேட்டு வந்து சொல்லட்டுமா?" என்று அவள் பதவிசாகக் கேட்கவும் அவனுக்குத் தன்னை மீறிச் சிரிப்பு வந்தது.

நகை முகத்துடனேயே, "அதுதான் என் சொந்தக்காரன் என்றுவிட்டாயே, நானே பார்த்துக் கொள்கிறேன். இனி வீட்டில் பார்ப்போம்," என்று சொல்லிவிட்டு, இரண்டு எட்டில் தன் வெளிநாட்டு விருந்தினரோடு போய்ச் சேர்ந்து கொண்டான் சசிகாந்தன்.

பேச்சு காதில் விழாவிட்டாலும் நந்தகுமாரன் கண் குத்திப் பாம்பு மாதிரிக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சசி எரிச்சலோடு பேசியதையும், சாருமதியின் பதிலில் சிரிக்கத் தொடங்கியதையும் கண்டு, என்ன சாகசம் என்று எரிந்தான்.

இல்லை. இவள் வெறும் பேச்சில் ஓடிவிடக் கூடியவள் அல்ல. இவளை வேறுவிதமாகத்தான் அகற்ற வேண்டும் என்று முடிவு செய்தான் அவன்.

## 13

வீட்டு விருந்துக்குச் சசிகாந்தன் அதிகம் பேரைக் கூப்பிடவில்லை. அனாவசியமாக அதை நீட்டித்துக் கொண்டும் போகவில்லை.

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் அன்று யாரோ உலகப் புகழ் பெற்ற பாட்டுக் குழு பாடுவதாக இருந்ததால், அதற்கு டிக்கெட் வாங்கியிருந்ததால் அந்த ஜப்பானியரும் உடனேயே கிளம்பிவிட்டனர்.

நந்தகுமாருக்கு ஆத்திரம் என்னவென்றால், அவர்கள் கிளம்பியதுமே, அழகியையும் அவனையும்கூட மந்தாகினி கிளப்பி அனுப்பி விட்டாள்.

சும்மாவும் அனுப்பவில்லை. விருந்துக்குப் பரிமாறிய உயர்வகை உணவுப் பொருட்களில் பலதை பார்சல் பண்ணி எடுத்துப் போகும்படி கொடுத்துத்தான் அனுப்பினாள். "போனதும் ஃப்ரிஜ்ஜில் வைத்துவிடு அழகி. நாளைச் சூடு பண்ணிச் சாப்பிட்டால் நன்றாக இருக்கும்!" என்று அவற்றைப் பயன்படுத்தும் முறை விளக்கம் வேறு.

மீதியைக் கொடுத்தாளே என்று இதிலெல்லாம் நந்தகுமாரனுக்குக் கோபம் வரவில்லை.

ஏனெனில் பந்தா பாராமல் மந்தாகினியே இப்படிப் பயன்படுத்தக் கூடியவள்தான்.

ஆனால் சாருமதியைப் போக விடாமல் உட்கார வைத்துக் கொண்டு தங்களைக் கிளப்பியதுதான் அவனுக்குக் கோபம்.

இதில் உபதேசம் வேறு திருமணம் ஆக வேண்டிய பெண் அழகி. அண்ணனோடுதான் என்றாலும் அடிக்கடி தாமதமாக வீடு திரும்புவது அவ்வளவு சரியில்லையாம்.

அழகி திருமணம் ஆக வேண்டிய பெண் என்றால் அந்தச் சாருமதி?

அவள் என்ன துறவறமா மேற்கொள்ளப் போகிறாள்?

அவளை மட்டும், "இரு... இரு, பேச வேண்டும்," என்று அமர வைத்தாகிறதே.



அவள் நடுராத்திரி வீடு சென்றாலும் ஒன்றும் இல்லையாமா? அவள் என்ன செய்தாலும் சரியென்று ஆகிவிடுமா? காசு உள்ளவள் என்பதாலா?

ஆத்திரமும் கோபமுமாக ஏதேதோ எண்ணினாலும், நந்தகுமாரனால் வெளியே எதையும் காட்டிக் கொள்ள முடியவில்லை. அழகிக்கு நல்லது என்று மந்தாகினி சொல்வதை மீறவும் முடியவில்லை.

எந்த உரிமையில் எதிர்த்து மீறுவான்? அதற்குத்தான் கோந்து போட்டு ஒட்டி வைத்த மாதிரி, இந்த வீட்டில் யாருமே வாயைத் திறப்பதே இல்லையே.

உள்ளூரப் பொருமியபடியே தங்கையோடு கிளம்பிச் சென்றான் அவன்.

ஆனால் என்ன என்ன பேசப் போகிறார்களோ என்று அவன் அஞ்சியது போல அங்கே எதுவும் நடக்கவும் இல்லை.

சும்மா பொதுவாகத்தான் எல்லோருமாகச் சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்தனர்.

சாருமதியை அழைத்துச் செல்ல, அவளுடைய பெரிய தந்தையே வந்திருந்தார்.

அடுத்த சில நாட்களில் நடக்க இருந்த சிவானந்தன் - காயத்ரி திருமணத்தில் கவனிக்கப்பட வேண்டிய சிறுசிறு விஷயங்கள் பற்றிப் பேசித் தெளிவு செய்து கொண்டார். அதற்காகத்தான் அவரே அங்கு வந்ததே.

ஏற்று நடத்துகிறவர்கள் அவர் குடும்பத்து இளவல்கள் ஆயிற்றே. கன்னி முயற்சி வேறு. பிள்ளைகளுக்குக் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாதே என்கிற கவலை அவருக்கு.

ஆனால், சின்னவர்கள் ஏற்கெனவே இதையெல்லாம் பற்றிச் சிவானந்தன் குடும்பத்தோடு பேசி முடித்து விட்டார்கள் என்று அறியவும் அவருக்குப் பெருத்த நிம்மதி.

பேச்சினூடே சசியுடைய பெற்றோர் சாருமதியைப் பாராட்டிப் பேச, சுந்தரகணபதியும் தங்கள் குடும்பங் களுக்கு அவள் எப்படி அருமை என்று தெரிவித்தார். "அதுவரை மூன்று குடும்பங்களிலும் பையன்கள்தான். இவள் பெண்ணாகப் பிறந்ததே மகிழ்ச்சி. அதிலும் குழந்தை ரோஜாப்பூ மாதிரி என்ன அழகு தெரியுமா? அதற்கேற்ற கெட்டிக்காரத்தனம்.."

"பிறந்த அன்றே நீ கெட்டிக்காரியாமே. பிரசவம் பார்த்த டாக்டரின் மோதிரத்தை நைசாக உருவிக் கொண் டாயா?" என்று சின்னக் குரலில் கேட்டுச் சிரித்தான் சசிகாந்தன்.

"திருடுவதுதான் கெட்டிக்காரத்தனம் என்று எனக்கு நீங்கள் சொல்லித்தான் தெரிகிறது!" என்றாள் அவள் பதிலுக்கு. "நீங்கள் கெட்டிக்காரத்தனமாக ரொம்பச் சம்பாதித்து இருப்பதாக வேறு கேள்வி!" என்றுரைத்துக் கண்ணால் சிரித்தாள்.

"எப்படியும் நீ பேச்சில் கெட்டிக்காரி என்பதை ஒத்துக் கொண்டே ஆக வேண்டும்!" என்றான் அவன் தீர்மானமாக.

"அப்படி இல்லாவிட்டால் நீங்கள் ஆண்கள் எங்கள் தலையில் மிளகாய் அரைத்து விட மாட்டீர்களா?"

"எங்கள் வீட்டில் எல்லாம் மிஷினில்தான் மிளகாய் அரைப்பது, அடுத்தவர் தலையில் அல்ல, ஆனால் உன் அப்பாவின் தலை கொஞ்சம் வழுக்கை விழுந்திருக்கிறதே, ஏன் சாரு?"



சிரிப்பை அடக்கி கொண்டு அவனை முறைத்தாள் அவள்.

".. மொத்தத்தில் எங்கள் வீடுகளில் இவள் பேச்சுக்கு மறுப்புக் கிடையாது!" என்று முடித்தார் அவர்.

"அதானே பார்த்தேன். ஆனால் அதிலும் லாபம். ஒரு பெரிய கவலைவிட்டது!" என்று முணுமுணுத்தவாறு அவளைப் பார்த்துச் சசி முறுவலிக்க, சாருவின் முகம் ரோஜா நிறம் கொண்டது.

என்ன கவலைவிட்டதாம். இன்னமும் நேசிக்கிறேன் என்று அவன் அவளிடம் சொல்லக்கூட இல்லை. சொல்லி அவளது விருப்பம் அறிய முற்படவும் இல்லை. அதற்குள் ஆண்டுக் கணக்கில் காதலித்துப் பெரியோர் சம்மதத்துக் காகக் காத்துக்கிடக்கிற மாதிரி என்ன பாவலாவாம்?

பெரிய தந்தையோடு திரும்பி வரும்போது அவரும் சசிகாந்தன் பற்றிப் பேசினார். பேச்சு வாக்கில், "கல்யாண மார்க்கெட்டில் இன்றைக்கு இவனுக்குத்தான் பெரிய போட்டியாம். வீட்டாரும் நல்லவிதமாகப் பழகுகிறார்கள். எந்தப் பெண்ணுக்கு யோகம் அடிக்கப் போகிறதோ?" என்றார் அவர்.

எனக்குத்தான் என்று சொன்னால், பெரியப்பா என்ன சொல்லக் கூடும் என்று நினைத்துவிட்டுச் சாருமதி வாயை மூடிக் கொண்டாள்.

இந்த ஜாடை மாடைப் பேச்சை விட்டுவிட்டுச் சசி அவளிடம் நேரடியாகப் பேசி அவனுடைய பெற்றோரும் ஒத்துக் கொண்டு நூறு சதவீதமாய் எல்லாம் உறுதி யாகும்வரை அவளாக யாரிடமும் எதுவும் சொல்லப் போவது இல்லை.

திறப்பு விழா, விருந்து படங்களையும், சிடியையும் கொண்டு போய்க் கொடுத்தபோது, பேசிக் கொண்டே இருவரும் ஒரு பெரிய ஹோட்டலுக்குப் போய் உட்கார்ந்து காஃபி குடித்தார்கள்.

ஜப்பானுக்கு அனுப்ப ஒரு செட் பிரதிகள் வேண்டும் என்று சொல்வதற்காக அவன் மறுநாள் அவளது இடத்துக்கு வந்தான்.

அடுத்த நாள் அவள் அவனைப் பூங்காவில் சந்தித்து அந்தப் பிரதிகளைக் கொடுத்தாள்.

பேசிக் கொண்டே, இருவரும் பேல்பூரி சாப்பிட்டுப் பழச்சாறு குடித்தார்கள்.

மறுநாள் அந்தப் பக்கம் வந்ததால் அவளையும் எட்டிப் பார்த்துவிட்டுப் போக நினைத்தாகக் கூறிக் கொண்டு ஸ்டுடியோவுக்கு வந்தான்.

அப்புறம், சும்மாகவே போனான்.

திறப்பு விழாவுக்கும், சிவா - காயத்ரி திருமணத்துக்கும் இடையே இருந்த இரு வாரத்தின் முதல் ஆறு நாட்களுமே சாரு, சசி இருவரும் ஏதோ காரணமாகவும், காரணமே இல்லாமலும் சந்தித்து என்னென்னவோ பேசினார்கள்.

பார்க்கப் பார்க்க, சசிகாந்தனுடன் பேசப் பேச, இன்னும் இன்னும் என்று அவனோடு பழகும் ஆவல் சாருமதிக்கு அதிகமாயிற்று.

இரவின் தனிமையில் வேறு எண்ணமே இல்லாது போயிற்று. பகலிலும் திடுமென எதிர்பாராத நேரத்தில் எல்லாம் அவன் நினைவே வந்து தொல்லை தந்தது.

தனக்கு மட்டும் ஏன் இப்படி, அவனுக்கு ஒன்றுமே இல்லையா என்று அவள் தவித்த அன்று, வெகுநேரம்



பேசிக் கொண்டிருந்துவிட்டுக் கிளம்பும்போது, "நாளை வரை உன்னைப் பார்க்க முடியாதே என்று நினைக்கையில், போகவே மனம் வரவில்லை!" என்றான் சசி.

சிட்டுக் குருவியாய் மனம் சிறகடிக்க, மலர்ந்த கண்ணால் அவனை உற்றுப் பார்த்தாள் சாருமதி.

எதையோ உணர்ந்து ஆவலுடன் அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தவன், சட்டென நின்று, "இன்னும் இரண்டு நாட்கள். அதுவரையிலும் சிவாவும் காயத்ரியும் கதாநாயகன் நாயகி, அப்புறம்..." என்று முறுவலித்து விட்டுப் போனான்.

ஆனந்தக் கூத்தாடியது சாருவின் உள்ளம்.

இதற்கு மேல் என்ன வேண்டும்?

துள்ளிக் குதித்து ஆட வேண்டும் போல அவளது உடல் பரபரத்தது. ஆனால் அது வேலை இடம். திடுமென்று யாராவது வந்து பார்த்தால் பைத்தியம் என்று எண்ணிவிடக் கூடும் என்று தன்னை அடக்கிக் கொண்டு இனிய கனவுகளில் ஆழ்ந்து சும்மா அமர்ந்திருந்தாள் அவள்.

அதுவும் நல்லதே போல, "என்ன மேடம், சார் கார் போய்விட்டதே, உள்ளே வரலாமா?" என்று பதவிசாகக் கேட்டபடி வேணி தலையை நீட்டினாள்.

ஒரு கணம் திகைத்தவளுக்குச் சசிகாந்தனைக் கண்டதும் அவனுக்குக் குளிர்பானம் வாங்கி வரவென்று வேணி வெளியே சென்றது நினைவு வந்தது.

உடனே முதலாளியம்மாவாக, "என்ன வேணி, குளிர் பானம் வாங்கி வர இவ்வளவு நேரமா? போனால் உடனே வருவதில்லை?" என்று அதட்டிப் பேசினாள்.

ஆனால், "என்ன செய்வது, மேடம்? சார் இங்கே இருக்கும்போது பானகத் துரும்பாக நான் உள்ளே வந்து உட்கார்ந்திருக்க முடியுமா? அவர் கிளம்புவதற்கு இவ்வளவு நேரம் ஆகிவிட்டதால் நான் திரும்பி வரவும் இவ்வளவு தாமதம் ஆகிவிட்டது, மேடம்!" என்று பணிவு காட்டி வேணி சொல்லி முடிக்கையில் அடக்கப் பார்த்தும் முடியாமல் சாருமதிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

அவள் சிரிப்பதை ரசனையோடு பார்த்திருந்துவிட்டு, "மீண்டும் உங்கள் பல்லில் பல்ப் போட்டுவிட்டீர்கள் போலத் தோன்றுகிறது, மேடம். நாளுக்கு நாள் பிரகாசம் அதிகமாகிற பல்ப்!" என்று மேலும் கிண்டலைத் தொடர்ந்தாள் மற்றவள்.

சிரித்து முடித்துவிட்டு, "வரவர உனக்கு வாய் அதிகம் ஆகிவிட்டது வேணி. உனக்குச் சரியான தண்டனை கொடுக்கப் போகிறேனாக்கும்!" என்று பொய்யாக அவளைச் சாருமதி மிரட்டிக் கொண்டு இருந்தபோது வெளிக் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு யாரோ உள்ளே வந்தார்கள்.

உள்ளே வந்தவளைப் பார்த்த சாருமதி திகைத்துப் போனாள்.

ஏனெனில் சற்று வாடிய முகத்துடன் அங்கே உள்ளே வந்தவள் அழகி.

கவனத்துடன் செய்யப்பட்ட மெழுகுப் பொம்மை போல அழகான முக அமைப்பும், மாசு மருவற்ற சருமமும், அழகியைப் பேரழகியாகக் காட்டிய தனிச் சிறப்புகள். ஆயினும் மிக அழகாக இருந்தாலும் அழகியின் முகத்தைக் களை மிகுந்தது என்று சொல்ல முடியாது.



உயிர்ப்போடும், துடிப்போடும் அவள் பழகி, சாரு ஒருபோதும் பார்த்தது இல்லை. என்றாலும் இன்றைய வாட்டம் அவளை மேலும் திகைப்படையச் செய்தது.

வினாடிக்குள் தன் திகைப்பை மறைத்துக் கொண்டு, "வாருங்கள் அழகி. உட்காருங்கள். ஏதாவது சாப்பிடுகிறீர்களா? காஃபி? பழரசம்?" என்று விருந்தோம்பி வினவினாள்.

"ஒன்றும் வேண்டாம். நான்... நான் உங்களிடம் ஒரு காரியமாக... ஓர் உதவி கேட்டு வந்தேன்," என்றாள் அழகி.

"என்ன செய்ய வேண்டும்? ஃபோட்டோ எடுக்க வேண்டுமா? என்ன மாதிரி? சொல்லுங்கள், உங்கள் விருப்பம்போல எடுத்துத் தருகிறேன்."

வரன் பார்க்கையில் காட்டுவதற்கு என்று சிலர் தனியாகப் படம் எடுப்பார்கள். அதற்காக வந்துவிட்டுச் சொல்லக் கூச்சப்படுகிறாளோ என்று எண்ணினாள் சாருமதி.

"அதெல்லாம் வேண்டாம்," என்று அழகி மறுத்தாள். "எனக்கு..." என்று மீண்டும் தொடங்கியவள், வேணியைப் பார்த்துத் தயங்கி, "எனக்கு உங்களிடம் தனியே பேச வேண்டும்," என்று கேட்டாள்.

வேணிக்குத் தன் இனிய முதலாளியை அந்தப் பெண்ணுடன் விட்டுச் செல்ல மனமே இல்லை. அழகே உருவான அந்தப் பெண்ணின் கதையை அறிந்து கொள்ளும் ஆவல் வேறு. ஆனால் சாருமதியின் சொல்லை மறுக்க மாட்டாமல் ஒரு பிறந்த நாள் ஃபோட்டோவைக் கொடுத்து வருமாறு சாருமதி சொன்னதற்காக வெளியே சென்றாள்.

வேணி சென்றதும், "சொல்லுங்கள், அழகி. உங்களுக்கு நான் என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று சாருமதி வினவினாள்.

எழுந்து சென்று சாருவின் கைகளைப் பற்றி, "அக்கா! நீங்கள் எனக்கு அவரை... சசிகாந்தனைத் தர வேண்டும்!" என்று கேட்டாள் அழகி.

## 14

சசிகாந்தனைத் தர வேண்டுமா?

வேடிக்கையில் விருப்பம் உள்ள சாருமதியின் முதல் பிரதிபலிப்பு, "அய்யோ! அவரைச் சற்று முன்தானே பாக்கெட்டிலிருந்து வெளியே விட்டேன். இப்போது போய்க் கேட்கிறாயே!" என்று சிரிப்பதுதான்.

ஆனால் வாயைத் திறக்கு முன்பாகவே இவள் சசிகாந்தனைக் கேட்கிறாள் என்பது உறைத்துவிட, அழகியைக் கூர்மையாக நோக்கினாள்.

சிறு கவலை தென்பட்டாலும், அழகி ஒன்றும் சோகத்தில் ஓய்ந்து காணப்படவில்லை.

அதாவது சசியை இழந்துவிடுவோமோ என்று அவள் அப்படி ஒன்றும் அஞ்சி வருந்தி அழவில்லை. அப்படியானால் எப்படியும் சசி கையை விட்டுப் போய்விட மாட்டான் என்ற உறுதி அவளுக்கு இருக்கிறது என்று அர்த்தமா?

அந்த உறுதி எப்படி வந்தது?

ஒரு கணம் நெஞ்சு காந்தியது சாருமதிக்கு.



உடனேயே சசிகாந்தன் பார்வை, பேச்சு நினைவு வர மனம் திடப்பட்டது.

இருக்காது. அவன் இந்த மாதிரி இரட்டை வேஷக்காரன் அல்ல. அத்தோடு அவன் அழகியை வேறு நோக்காய்ப் பார்த்த மாதிரியே இல்லையே.

இவளிடமே விவரம் கேட்க வேண்டியதுதான் என்று எண்ணி வாயெடுக்கையில் அழகியே பேசினாள். நிறுத்தி நிதானித்து யோசித்துப் பேசினாள்.

"பாருங்கள்... உங்களுக்குத் திகைப்பாகத்தான் இருக்கும். வ...வருத்தமும் இருக்கும். ஆனால் முடியாது என்று மட்டும் சொல்லி விடாதீர்கள்..."

அவளது பேச்சு சம்பந்தமே இல்லாத எதையோ நினைவுபடுத்துவது போலத் தோன்ற, சாருமதி விழித்தாள். என்ன அது?

அழகி யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில், அவளும் தன்னைச் சமாளித்து, இந்தப் பிரச்சனையை யோசித்து, "பாருங்கள் அழகி, சசிகாந்தனை உங்களிடம் தூக்கித் தர அவர் ஒன்றும் ஏதோ ஒரு ஜடப்பொருள் அல்ல. யோசிக்கத் தெரிந்த, அதுவும் மிக நன்றாக யோசிக்கத் தெரிந்த மனிதர். இது அவராக முடிவு செய்ய வேண்டியதும்கூட. எனவே தேவை என்றால் நீங்கள் அவரிடம் பேசுங்கள்," என்றாள் தெளிவாக.

இன்னமும் அழகி பேச்சு-பேச்சைவிட அவள் பேசிய விதம் சாருமதியை உறுத்திக் கொண்டே இருந்தது. ஏன்?

கூடவே அந்தப் பேச்சின் கருவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஓர் ஆணுக்காக இரண்டு பெண்கள் போராடுவது அவளுக்கு வெறுப்பான விஷயம். அதென்ன, அவன்

அப்படியென்ன உயர்த்தி என்று எரிச்சல் படுவாள். இப்போது தானே அந்தக் கேவலத்துக்கு இறங்க, அவளுக்குப் பிடிக்கவில்லை. தேவைப்பட்டால் இவள் அவனிடம் சென்று கேட்பதுதானே? அதை விட்டு இங்கே என்ன வருகை?

அதையே வெளிப்படையாகச் சொல்ல வாய் திறந்தால், அழகி மீண்டும் பேசத் தொடங்கியிருந்தாள்.

"... அக்கா! நீங்கள் படித்தவர்கள். கையில் தொழில்..." என்றவளை இடையிட்டு, "நான்தான் சசியிடம் பேசச் சொன்னேனே!" என்றாள் சாருமதி.

சில கணங்கள் பேந்த விழித்துவிட்டு, அழகி மறுபடியும் தொடங்கினாள்.

"அக்கா! நீங்கள் படித்தவர்கள். கையில் தொழில் இருக்கிறது. சசி அத்தான் இல்லாமலும் உங்களால் வாழ முடியும். நா...ன் நான் அப்படியல்ல. அநியாயமாகச் செத்துப் போவேன்!" என்றாள் அவள் தெளிவாக.

ஒரு கணம் சாருமதி திகைத்துப் போனாள்.

சசிகாந்தன் மீது இவள் இந்த அளவு அன்பு வைத்து விட்டாளா? ஆயினும் ஆசைப்பட்டவன் கிடைக்க வில்லை என்று தற்கொலை செய்து கொள்வது என்றால் அது பைத்தியக்காரத்தனம் இல்லையா?

அதையே அவள் சொன்னபோது அழகி விழித்தாள்.

"தற்கொலையா? நான் எப்போது அப்படிச் சொன்னேன்?" என்று குரல் நடுங்க வேகத்துடன் கேட்டாள்.

வேகம். படபடப்பு, இதுவரை இல்லாதது. இயல்பாய் வந்த எதிரொலி.



ஏதோ தோன்ற, "அப்படியானால் சசியும் நானும் மணந்து கொண்டாலும் உனக்குப் பரவாயில்லைதானே?" என்று வினவினாள்.

சற்றுத் திகைத்துவிட்டு, யோசித்து, "வந்து... அக்கா! நீங்கள் படித்தவர்கள். கையில் தொழில் இருக்கிறது... சசி அத்தான் இல்லாமலும்..." என்று மீண்டும் முதலில் இருந்தே தொடங்கினாள் அழகி.

சாருமதிக்குப் புரிந்து போயிற்று.

அழகி பேசிய விதம் என்ன என்று தெரிந்து போயிற்று. எல்லாம் உருப் போட்டு வந்து ஒப்பித்திருக்கிறாள்.

பள்ளியில் படிக்கும்போது சிலர் இப்படி நெட்டுருப் போடுவதைச் சாருமதி பார்த்திருக்கிறாள். குறுக்கே ஏதாவது கேட்டால் எல்லாமே மறந்து போகும். மீண்டும் முதலில் இருந்தே தொடங்கிச் சொன்னால்தான் உண்டு.

இவளும் அதையே செய்திருக்கிறாள். இப்படிப் பதில் வந்தால் இப்படிப் பேச வேண்டும் என்று நெட்டுரு. இடையிலே சாருமதி தற்கொலை எனவும் குழம்பிவிட்டு மீண்டும் தொடங்கிச் சொல்லுகிறாள்.

இதன் வசன கர்த்தா இயக்குநர் எல்லாம் அவள் அண்ணன் நந்தகுமாரனா?

நன்றாக யோசித்தால் அழகியின் பார்வை சசியைத் தேடியோ, பின் தொடர்ந்தோகூடச் சாருமதி கண்டது இல்லை. மந்தாகினியைப் பின் தொடர்வதில்தான் அவளது முழுக் கவனமும் இருந்தது.

அப்படியானால் இங்கே ஆசை முழுவதும் நந்த குமாரனுடையதுதான்.

அதற்காக அவனை ஒரேயடியாகக் குற்றம் சொல் வதும் முடியாது. ஏனெனில் அவனது குறிக்கோள்

தங்கையின் வளமான வாழ்வுதானே? தங்கை பணக்காரர் வீட்டுக்கு மருமகளாக வேண்டும் என்ற ஆசை எந்த அண்ணனுக்கு இல்லாமல் இருக்கும்?

அதிலும் தப்புச் சொல்ல முடியாது.

ஆனால் அவன் ஆசைப்படுகிறான் என்பதற்காக எல்லோரும் அவன் விருப்பப்படி ஆட முடியுமா என்ன?

சற்று யோசித்துவிட்டு எதற்கும் தெளிவுபடுத்திக் கொள்ள எண்ணி, அழகியிடமே, "ஏன் அழகி, நந்த குமாரன் சொல்லித் தந்ததை அப்படியே சொல்லு கிறீர்களே... உங்கள் விருப்பம் என்று ஒன்றும் கிடை யாதா?" என்று சாருமதி வினவினாள்.

சற்றுத் திகைத்துவிட்டு, "என் நன்மை பற்றி என்னைவிட அண்ணனுக்குத்தான் நன்றாகத் தெரியு மாம்!" என்று அழகி பதிலிறுத்தபோது அவளுக்குப் பரிதாபமாகக்கூட இருந்தது.

"அப்படிச் சொல்ல முடியுமா, அழகி? உங்களுக்கு என்று ஒரு மனசு, மூளை எல்லாம் கடவுள் கொடுத் திருக்கிறாரே, அதைக் கொண்டு நீங்களாகவும் யோசிக்க வேண்டும் என்றுதானே?"

"வசதியாக வாழலாம். தனிக் கார், ஏசி... பட்டுச் சேலைகள்... இதெல்லாம் யோசித்தால், அண்ணன் சொல்வது சரியாகத்தான் தெரிகிறது."

ஆச்சரியமாகப் பார்த்தாள் சாருமதி. வசதிகள்தான் வாழ்க்கையா?

"இதற்கெல்லாம் மேலாக மனது என்று ஒன்று இருக் கிறதல்லவா? அது ஒத்துப் போகாமல் வாழ்க்கை எப்படி நன்றாக இருக்கும்? வாழ்க்கைக்கு அன்பு வேண்டாமா?



அதை யோசித்துப் பார்த்தீர்களா?" என்று மேலும் துருவினாள்.

குழப்பத்துடன், "என்ன கேட்கிறீர்கள், அக்கா? அத்தை என்னிடம் பிரியமாகத்தான் இருக்கிறார்கள். பாருங்கள், இந்த வாட்ச்கூட அத்தை வாங்கித் தந்ததுதான். அப்புறம்... அவரும்... நான் ரொம்ப அழகாக இருப்பதால் அவருக்கும் பிரியம் வந்துவிடும் என்று அண்ணன் சொன்னார்," என்று இழுத்தாள் அழகி.

சாதகமாக ஒன்றைக் கண்டு, "அப்படியானால் நீங்கள் இங்கே வரத் தேவையே இல்லை!" என்றாள் சாருமதி.

மற்றவள் புரியாமல் விழிக்கவும், சசி, 'உங்களை ஒரு பெரும் போரடிக்கும் வாழ்க்கையில் இருந்து காப்பாற்றத் தான் இதெல்லாம்,' என்று மனதினுள் சொல்லிக் கொண்டு, அழகியிடம் பேசினாள். "பாருங்க அழகி, சசி என்னைப் பார்த்துக் கிட்டத்தட்ட ஒரு மாதம்தான் இருக்கும். ஆனால் நீங்களோ உறவுக்காரி. ரொம்ப நாள் பழக்கம்... சரியா?" என்று கேட்டாள்.

"நாலுமாதம். எங்கள் பெரியப்பாவுடைய மைத்துனி மகளை மாமாவுடைய சித்தப்பா பேரனுக்குக் கொடுத்திருக்கிறது. நாலு மாதம் முன்னால் அந்தக் கல்யாணம் நடந்தது. அதிலிருந்து பழக்கம்!" என்று வெகு சிரத்தையோடு தெளிவுபடுத்தினாள் அழகி.

"ரொம்ப சந்தோஷம். இப்போது விஷயத்துக்கு வருவோம். நீங்கள் நல்ல அழகி. என்னை விடவும் அழகி. அதை நானே ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் பேரழகியான உங்களை நாலு மாதங்களாகப் பார்த்துப் பழகிய பிறகும், பார்த்து ஒரே மாதமே ஆன என்னிடம் வந்து, அவரை விட்டுக் கொடு என்று நீங்கள் கேட்கும்படி ஆகிவிட்டதே, ஏன்? அதைப் பற்றி யோசித்தீர்களா?"

அழகியின் அகன்ற விழிகள் வட்டமாக விரிந்தன.

அவளுக்குப் புரியத் தொடங்கி விட்டது என்று உணர்ந்து, பரிவான குரலில், "உங்களை மணக்கும் எண்ணமே சசிக்கு வரவில்லை அழகி. நான் இல்லா விட்டால் இன்னொருத்தி. புரிகிறதா?" என்று மெல்லக் கேட்டாள் சாருமதி.

"அய்யோ! ஆமாம். இப்போது என்ன செய்வது?" என்று அழகி திகைத்தாள்.

சிறு மௌனத்தின்பின், "நீ... நீங்களும் சசியை மறப் பது, மறந்து வேறு ஒருவரை மணப்பதுதான்... அதுதான் உங்களுக்கும் நல்லது. சுயநலத்தில் சொல்லுகிறேன் என்று எண்ண வேண்டாம், அழகி!" என்றாள் சாருமதி.

"ஆனால், ஆனால் அது முடியாதே!" என்று அழகி கலக்கத்துடன் கூறவும் அவளை விடச் சாருமதிதான் அதிகம் கலங்கிப் போனாள் எனலாம்.

இந்தப் பெண்ணின் மனம் பாதிக்கப்படவில்லை என்று எண்ணினாளே, தப்பா? 'கடவுளே, இப்போது என்ன செய்வது?' என்று அவள் திணறும்போதே, "அப்படியெல்லாம் சொன்னால் அண்ணனுக்குக் கோபம் வரும்!" என்று கவலைப்பட்டாள் அழகி.

"உண்மையைச் சொன்னால் ஏன் கோபம் வரும்?"

அழகி தயங்கவும், "அழகி! நீ... நீங்கள்... அழகி! நம் இருவருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான் இருக்கும். இந்த நீங்கள் நாங்களை விட்டுவிட்டு நாம் இருவரும் சினேகிதிகளாகப் பழகலாமே. சரியா? இப்போது இந்தப் பிரச்சனையில் உனக்கு உதவி பண்ணத்தான் நான் விரும்புகிறேன். ஆனால் நீ உண்மையைச் சொன்னால் தானே அது சாத்தியம்? சொல்லு. இவ்வளவு அழகாக



இருக்கும் உன்னை மணக்க யாராவது முன்வரத்தான் செய்வார்கள். சசி இல்லாவிட்டால் இன்னொருவர். அப்படியிருக்க உன் அண்ணனுக்கு எப்படிக் கோபம் வரும்?" என்று சாரு வினவினாள்.

"வந்திருக்கிறதே!" என்றாள் அழகி. "வ...வந்து எங்கள் வீட்டுப் பக்கம் ஒருவர் ஆசைப்படுவதாகச் சொல்லி அண்ணனும் மறுக்கவில்லை. பிறகு நாலு மாதம் முன்பு அந்தக் கல்யாணம் நடந்த பிறகு மந்தாகினி அத்தை வீட்டுக்கு அண்ணன் என்னைக் கூட்டி வந்து சசி அத்தான் பற்றியெல்லாம் சொன்னார். இந்த வீட்டுப் பழக்க வழக்கம் எல்லாம் எனக்குப் பயமாக இருந்ததால் அண்ணனிடம், 'பழசையே பார்ப்போமே' என்றேனா? ரொம்ப ரொம்பக் கோபப்பட்டுவிட்டார். இப்போதும் அப்படித்தான் நடக்கும். அதுதான் எனக்குப் பயம்."

ஒரு வகையில் சாருமதிக்கு நிம்மதியாக இருந்தது. இவளது உள்ளம் சசியால் பாதிக்கப்பட்டுவிடவில்லை. ஆனால் அண்ணனிடம் சொல்லப் பயப்படுகிறாள்.

"அது மட்டும் அல்ல, சசி அத்தானை விட்டு விலகு வதாக உங்களிடம் சத்தியம் வாங்காமல் போனாலும் அண்ணன் கோபிப்பார்!" என்றாள் அழகி கவலையோடு.

நந்தகுமாருக்கு அன்புத் தங்கை செல்வச் சீமாட்டி ஆகவேண்டும். அதைக் கெடுக்க வந்தவளை விரட்டா விட்டால் அந்தத் தங்கையிடமே ஆத்திரப்படுவான்.

ஆனால், சும்மா ஒரு சமாதானத்துக்காகக்கூடச் சசியை விட்டு விலகி விடுவதாகச் சொல்லச் சாருவுக்கு மனம் இல்லை. அத்தோடு சசியே கிளம்பும்போது என்ன சொன்னான்?

இன்னமும் இரண்டு நாட்கள், அதன் பின் அவனே சாருமதியை விரும்புவதாக வெளிப்படையாகச் சொல்லி விட்டால் அப்புறம் நந்தகுமார் தங்கையைத் திட்டி என்ன பயன்?

அன்புள்ள ஓர் அண்ணன், பயன் ஏதும் இல்லாததால் தங்கையை நோகடிப்பானா என்ன?

எப்படியும் இவள் அழகி... நல்லவளாகவும் தெரிகிறாள். சசிகாந்தன் மூலமாகவே இவளை ஒரு நல்ல இடத்தில் மணமுடித்து வைப்பது கடினம் அல்ல.

யோசித்தவாறே சாருமதி அழகியைப் பார்த்தாள்.

"அழகி, இப்போது நேரமாகிவிட்டது. சிவா - காயத்ரி திருமணத்து வேலைக்கு வேண்டியது எல்லாம், போய் வாங்கி வைக்க வேண்டும். நாளைக்கு வெயிலில் அலைந்தால் முகம் களைத்துக் கறுத்து நன்றாயிராது. அதனால் என்ன செய்யலாம் என்று இப்போது உட்கார்ந்து யோசிக்க, எனக்கு நேரம் இல்லை. ஆனால் உன் நன்மையை நான் மறக்க மாட்டேன். ஒன்று செய்வோமோ? இப்போதைக்கு உன் அண்ணனிடம் இதுபற்றி நான் யோசித்துச்சொல்வதாகச் சொன்னேன் என்று சொல்லி விடு. துருவிக் கேட்டால் நான் உருகிப் போனதாகத்தான் தோன்றுகிறது என்று சமாளி. அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். நீ மட்டும் இப்போது போலவே சசியைப் பெரிதாக நினையாமலே இரு. ஏனென்றால்..."

அவள் சொல்லத் தயங்கியதை அழகி முடித்து வைத்தாள். "ஏனென்றால் நீயும் சசி அத்தானும் ஒருவருக்கொருவர் ரொம்ப இது. அப்படித்தானே சாரு?" என்று அழகாக முறுவலித்தாள்.



# 15

பொதுவாகத் திருமணங்களில்... ஏன், எந்த விழா என்றாலுமே வீடியோ ஃபோட்டோ எடுப்பவர்களை யாரும் கண்டு கொள்வதே கிடையாது. அவர்கள் நெட்டையோ, குட்டையோ அழகா இல்லையா என்று அறியும் ஆவல் யாருக்கும் இருப்பது இல்லை.

ஃபோட்டோவுக்கு போஸ் கொடுப்பது, வீடியோ லைட் நெருங்கி வரும்போது அழகாக அல்லது அப்பாவி போலக் காட்சி கொடுப்பதிலேயே எல்லோர் கவனமும் இருக்கும்.

எனவே இயற்கையாக உள்ள அழகுணர்ச்சி காரணமாகத் தோற்றத்தில் அசட்டை காட்டமாட்டாளே தவிர இந்த விழாக்களுக்காகச் சாருமதி தன்னைத் தனிப்பட அழகுபடுத்திக் கொள்வது இல்லை.

படம் எடுப்பதற்கு இடைஞ்சல் இல்லாத வகையில் கூந்தலைச் சேர்த்துப் பின்னுச்சியில் இறுக பான்டு போட்டுவிட்டிருப்பாள். ஒரு ஜீன்ஸ் பான்ட். தவிர ஒரு டாப்ஸ்.

சாருமதியின் வழக்கமான உடை இதுதான்.

ஆனால் இன்று அப்படி வர அவளுக்கு மனமில்லை.

அங்கே சசிகாந்தன் வருவானே, அவனுடைய பெற்றோர் மற்ற உறவினர்கள் அத்தனை பேர் முன்னிலையில் அவ்வளவு சாதாரணமாக எப்படி நிற்பது?

ஆனால் அதே சமயம் வேலைக்கு எதையும் அணியவும் முடியாது.

யோசித்து அவள் அணிந்த பூ வேலை செய்த ஜீன்சும், பொருத்தமான ஷார்ட் குர்த்தாவும் 'காதணி'யும் கூந்தலைப் பின்புறம் இழுத்து க்ளிப் மாட்டியிருந்ததும் அவளை எழில் அரசியாகக் காட்டின.

நிகிலன், அகிலன், ரஞ்சன், மனோகரன் என்று இளைய தலைமுறையினர் அவரவர் வேலைகளில் மும்முரமாக இருந்ததைக் பார்க்க அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

தன் குடும்பத்துப் பெரியவர்களிடம் வாதாடி இவர்களுக்கு இந்த வாய்ப்பைப் பெற்றுத் தந்தது சசிகாந்தன் என்று அறிந்திருந்ததால் அவளுக்கு உள்ளூரப் பெருமையாகவும் இருந்தது.

அவள் வீட்டுப் பெரியவர்களுக்கும் அழைப்பு இருந்தது. அழைப்பை ஏற்று வந்து, பிள்ளைகளின் வேலையைப் பார்த்து அவர்களும் பூரித்துத்தான் போயிருந்தனர்.

மணப்பெண்ணின் அலங்காரத்தையும் அவளுடைய தோழியர் உறவினரையும் சற்றுநேரம் படம்பிடித்துவிட்டு மண்டபத்து முகப்பு, மேடை மண்டப அலங்காரங்களை மற்றவர்கள் எடுப்பதை மேற்பார்வையிட்டு விட்டு மாப்பிள்ளை வீட்டாரின் வருகைக்காகச் சாருமதி காத்து நின்றாள்.

எவ்வளவு நேரம் என்று அடிக்கடி மனம் பொறுமை இழந்து வாயிலை நோக்கிவிட்டுக் கடிகாரத்தைப் பார்த்தால் கடிகார முள்ளும் நகராமல் சதி செய்தது.

ஒருவாறு தூரத்தில் வேட்டுச் சத்தமும் நாதஸ்வர ஓசையும் கேட்டபோது, பல பெரிய மூச்சுகளை எடுத்துத் தான் சாரு தன்னைச் சமனப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.



மாப்பிள்ளைத் தோழனாக வந்த சசிகாந்தனைப் பார்த்து அவள் மதி மயங்கி நின்றது. ஒரு சில கணங்களே...

நல்ல வேளையாகச் செய்யும் தொழிலில் அவளுக்கு மிகுந்த ஈடுபாடும் இருந்ததால், காமிராக் கண் கொண்டு பார்த்துப் படம் எடுக்கத் தொடங்கியதுமே மற்ற சலனங்களை அடக்கி வேலையைச் சரியாகச் செய்ய முடிந்தது.

சீர்த் தட்டுகளை ஏந்தி வந்த மணமகன் வீட்டுப் பெண்கள், அந்தத் தட்டுகளைக் கொண்டு போய், மேடையில் வைக்க, பெண் வீட்டைச் சேர்ந்த மைத்துனி முறைப் பெண்கள், மாப்பிள்ளைக்கு ஆரத்தி எடுக்கலாயினர்.

ஆரத்தி முடிந்து மணமகன் உள்ளே வந்து அமர்ந்து, நாத்தனார் சேலையை எடுத்துக் கொடுக்க, காயத்ரி அதை வாங்கிக் கொண்டு உள்ளே சென்ற பிறகுதான் சாருமதி காமிராவிலிருந்து கண்ணை எடுத்துக் காமிராவைக் கீழே வைத்தாள்.

அதற்காகவே காத்திருந்தது போலச் சசிகாந்தன் அவளை நெருங்கினான்.

"உடை பிரமாதம், சாரு. அப்படியே பார்வையாலேயே விழுங்கிவிடலாம் போல இருக்கிறது. என்னை மாதிரி மற்றவர்களும் பார்ப்பார்களே என்பதுதான் சற்று எரிச்சலாக இருக்கிறது!" என்று முறுவலித்தான்.

"ம்ம்? மற்றவர்களைவிட நீங்கள் என்ன சார் தனி?" என்று புருவம் தூக்கிக் கிண்டலாகக் கேட்டாள் சாருமதி.

"உனக்கு நான் 'தனி'யேதான். இல்லையென்று சொல்வாயா என்ன?"

"ஏன் சொல்ல மாட்டேனாம்?" என்று மிடுக்காகப் பேச முயன்றபோதே அவள் குரல் குழைந்தது.

மேலும் நெருங்கிக் குரலைத் தணித்து, "இதற்கான பதிலை உன் ஸ்டுடியோ மேஜை அறையில் மறைத்து வைத்திருக்கிறாயே, அந்த ஆல்பத்தையும் கேசட்டையும் போய்க் கேள், சொல்லும்," என்று போட்டு உடைத்து விட்டு, அவளது முகம் திகைத்துச் சிவப்பதைக் கண்டு ரசித்துச் சிரித்தான் அவன்.

"அது...அது..." என்று திகைத்துத் திணறியவளுக்கு உதவி செய்கிறவளாக அப்போது அழகி அங்கே வந்து சேர்ந்தாள்.

மந்தாகினியின் சொற்படி, பெண்ணுக்கு நலுங்கிடு வோர் வந்து போக வசதியாக இருக்குமாறு சேர்த்தட்டு களை ஒதுக்கி வைப்பதில் மற்றவர்களோடு உதவி செய்து கொண்டிருந்த அழகி வேலையை முடித்ததும் சாருவிடம் ஓடி வந்திருந்தாள்.

"சாரு... நீ சூப்பர். ஜீன்ஸ்கூட இவ்வளவு சூப்பராக இருக்கும் என்று எனக்குத் தெரியவே தெரியாது. ரொம்ப அழகாக இருக்கிறது!" என்று மனமாரப் பாராட்டினாள்.

ஒருவாறு சமாளித்துக்கொண்டு "நீயும்தான். நீ சும்மாவே அழகு. இந்தக் கரும்பச்சை நிறப்பட்டுச் சேலை அப்படியே தூக்கி அடிக்கிறது!" என்றாள் சாருமதி.

"கண்ணாடியில் பார்த்தபோது, அப்படித்தான் தோன்றியது. ஆனால் நீ சொன்னதும், ரொம்ப நிச்சய மாகிவிட்டது!" என்று சந்தோஷமாகச் சொன்னாள் அழகி.

பிறகு அருகில் நின்று கொண்டிருந்த சசிகாந்தனை ஒரு தரம் பார்த்துவிட்டு, "அப்புறம்... சசி அத்தானும் நீயும் ஜோடிப் பொருத்தம்கூட ரொம்ப சூப்பர்!" என்று வெட்கத்துடன் கூறி முடித்தவள், "நான் அத்தையிடம் போகிறேன்," என்று ஓடிவிட்டாள்.



"அடேங்கப்பா!" என்று ஆச்சரியப்பட்டான் சசி காந்தன். "மெய்யாகவும் அழகியா பேசியது? தானாக இரண்டு வார்த்தை இவ்வளவு சரியாகப் பேசக்கூட அவளுக்குத் தெரியுமா?" என்று ஆச்சரியப்பட்டுவிட்டு, "பூவோடு சேர்ந்த நாராக உன் பாடமோ என்று நினைக்கிறேன். பேர் சொல்லி அழைக்கும் அளவுக்கு உன்னோடு பழகியிருக்கிறாளே. ஆனால் இத்தோடு நிறுத்தி விடு, தாயே! பாவம் அவளைக் கட்டிக் கொள் கிறவனாவது பிழைத்துப் போகட்டும்!" என்றுரைத்துக் கண்ணால் சிரித்தான்.

சட்டென்று பதிலுக்கு, "அவனாவதா?" என்று தொடங்கிவிட்ட போதும், சாருமதிக்குச் சசியளவு துணிவாகப் பேசவும் முடியவில்லை. அதேசமயம் தன் ரகசியத்தை அறிந்துவிட்டவனிடம் எதையும் மறுக்கவும் கூடவில்லை. எனவே, "இப்போது நேரம் இல்லை. இருங்கள், உங்களை அப்புறம் பார்த்துக் கொள்கிறேன்!" என்று சும்மாவேனும் மிரட்டிவிட்டு அவசரமாக மணப் பெண் அறைப் பக்கம் திரும்பி வேகமாக நடக்கலானாள்.

"ஓட்டம்! ஓட்டம், ஒலிம்பிக்கில்கூட இவ்வளவு வேகமாக ஓடமாட்டார்கள்."

தன் பெரிய எட்டுகளோடு அவள்கூடவே நடந்தபடி கிண்டலடித்தவன், நல்ல வேளையாக அதற்குமேல் அவளை வாட்டாமல் மணமகனான தன் நண்பன் அருகில் போய் அமர்ந்துவிட்டான்.

"என்ன தரிசனம் ஆயிற்றா?" என்று சிவானந்தன் கேலி செய்ய, "நம்மை விடு. தம்பி, உன் ஆளை எங்கே? இங்கே ஒருவன் ஏங்கித் தவிப்பது தெரியாமல் சிஸ்டர் இவ்வளவு தாமதம் செய்கிறார்களே!" என்று நகைத்தான் சசிகாந்தன்.

அலுவலகத் திறப்பு விழாவன்று போலவே அன்றைக்கும் நந்தகுமாரனுக்குப் பற்றி எரிந்தது.

அன்றாவது சசிகாந்தனும், அந்தப் பெண்ணும் மட்டும்தான். இப்போது தங்கையும் அல்லவா விரோதியாகிப் போனாள்.

அண்ணன் மாடியில் நின்று கவனித்துக் கொண்டிருப்பது தெரியாமல் அந்தப் பெண்ணிடம் என்ன கொஞ்சல்.

முன்தினம், அந்தச் சாருமதியிடம்போய் வந்து, அவள் சொன்னது எல்லாம் பொய். பித்தலாட்டம். இரண்டு பெண்களுமாகச் சேர்ந்து ஏதோ நாடகம் அரங்கேற்றியிருக்கிறார்கள்.

அதாவது அந்தச் சாருமதி கெட்டிக்காரத்தனமாக அழகியை அவள் பக்கம் வளைத்துவிட்டாள். இந்த மக்கும் அவள் சொல்படி ஆடிக் கொண்டு இருக்கிறது.

எல்லாவற்றையும்விட, மேடையிலிருந்து இறங்கிச் சாருமதியிடம் செல்லுமுன், அழகி எச்சரிக்கையோடு ஒரு தரம் சுற்றிலும் பார்த்துவிட்டுத் திருப்தி அடைந்தாற் போலப் போனதுதான் அவன் நெஞ்சை அறுத்தது.

எங்காவது இருந்து அண்ணன் கவனிக்கிறானோ என்று தேடியிருக்கிறாள். அவன் இல்லை என்று தெரிந்ததும் அவனுடைய விரோதிக்கு... சொல்லப் போனால் அவளுக்குமே விரோதிதான். அது புரியாமல் இந்த மட்டி அழகி, அந்த வில்லி சாருமதிக்குக் கால் வருடப் போய்விட்டாளே.

இவளா பின்னொரு காலத்தில் புருஷன் சொத்திலிருந்து அண்ணனுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கப்



போகிறாள்? ஒருக்காலும் இல்லை. ஐந்து பத்து தருவதே அபூர்வம்தான்.

ஆக, அவன் வழியை அவனேதான் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வளவு அழகான தங்கை கிடைத்திருந்தும் அவளால் அவனுக்கு ஒரு பயனும் இல்லை. வருமானத்துக்கு அவன் வேறு வழிதான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாடியில் இருந்தும், கீழே திருமண மேடையைப் பார்க்க இயலுகிற மாதிரியான மண்டபம் அது. திருமணக் கோலாகலத்தில் கலந்து கொள்ள விரும்பாமல் மாடியில் போய்த் தனியே அமர்ந்திருந்தபோதுதான் தங்கையின் திருட்டுத்தனத்தை நந்தகுமாரன் கண்டுபிடித்தான்.

இப்போதும், அதே தூண் மறைவில் அமர்ந்தபடிதான் அவன் தன் எதிர்காலம் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்.

இன்னமும் சாருமதி குறுக்கே வந்திராவிட்டால் நாளாவட்டத்தில் சசிகாந்தன் அழகியை மணந்திருப்பான் என்பதுதான் அவனுக்கு, இப்போதும்கூட அவள் இல்லை என்றால் அதுதான் நடக்கும்.

அப்படி நடக்கும்போது அழகியாக அண்ணனுக்கு எதுவும் கொடுக்கா விட்டாலும் சசிகாந்தன் மைத்துனனுக்கு ஏதாவது செய்யத்தான் செய்வான். அல்லது மந்தாகினியே கொடுப்பாள். அந்த அம்மாள் குணம் அப்படி. சும்மாவே எவ்வளவு கொடுக்கிறாள். உறவாகி விட்டால் இன்னமும் அதிகமாகக் கொடுப்பாளே.

எனவே இதை விட முடியாது. அதுவும் திட்டமிட்டு நாலு மாத காலம் வேலை செய்துவிட்டு, ஒன்றுமே

இல்லாமல் போவதா? நிச்சயம் கூடாது என்று ஆத்திரத்துடன் எண்ணினான் நந்தகுமாரன்.

யோசிக்க யோசிக்க அவனது எதிர்காலச் சுக வாழ்வுக்குத் தடையாக இருப்பது சாருமதி மட்டும் தானென்று அவன் உறுதியாக நம்பத் தொடங்கி விட்டான்.

முந்திய நாள் அழகியை அவளிடம் அனுப்பியபோது தங்கையின் கண்ணீருக்குச் சாருமதி இளகாமல் போனால் என்ன செய்வது என்று, அரை குறையாக ஒரு திட்டம் போட்டு வைத்திருந்தான். அதைப்பற்றி உரிய சிலரிடம் பேசியும் இருந்தான். இனி அதைத்தான் நிறைவேற்ற வேண்டும்.

இந்த நாட்டில் எத்தனை பெண்கள் தடயமே இல்லாமல் காணாமல் போகிறார்கள். அப்புறம் வெளி உலகத்தையே பாராமல் படு கேவலங்களுக்கு ஆளாக்கப் பட்டுக் கண்ட கண்ட நோய்ப் பட்டுச் சாகிறார்கள்.

சாருமதியும் அவர்களில் ஒருத்தியாக வேண்டியது தான்.

அவளது தலைவிதி அப்படி அவளாக அமைத்துக் கொண்டது.

இந்த நந்தகுமாரனின் திட்டத்துக்குக் குறுக்கே வந்ததற்கான தண்டனை.

தப்பு செய்தால் தண்டனை அனுபவித்துத்தானே ஆக வேண்டும்?

என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானித்துவிட்ட நந்தகுமாரன், அதை எப்போது நிறைவேற்றுவது என்று யோசிக்கலானான்.



கீழே அமர்ந்து கல்யாண மாப்பிள்ளையுடன் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த சசிகாந்தனைப் பார்க்கையில் சற்று முன் கண்ட காட்சி அவனுள் படமாக ஓடிற்று.

எவ்வளவு தைரியமாக யார் யார் பார்க்கக்கூடும் என்கிற கவலையே இல்லாமல் அவளோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தான். அப்படியானால்? அதற்கு அர்த்தம் ஒன்றே ஒன்றுதான்.

சசிகாந்தன் ஏதோ முடிவெடுத்து விட்டான். விரைவிலே அதை வெளிப்படையாக உலகுக்கு அறிவிக்கவும் துணிந்து விட்டான்.

அப்படி அவன் அறிவிக்குமுன் சாருமதியை அகற்ற வேண்டும்.

அப்படியானால்தான் யாரோ ஒரு சாருமதி எப்படியோ காணாமல் போனதாக இருக்கும்.

சசி அறிவித்த பிறகு மறைந்தாள் என்றால், அந்தத் திருமணம் பிடிக்காத யாரோ அவளைக் கடத்தியதாக ஆகிவிடும்.

அப்புறம் சந்தேகம் நந்தகுமாரன்மீதேகூட விழக் கூடும். ஏனெனில் அழகியின் எதிர்காலம் பற்றி ஜாடை மாடையாகப் பல பேரிடம் அவன் பேசியிருக்கிறானே, யாராவது மூட்டி விட்டுவிடக் கூடும்.

எனவே, அதற்குள் வேலை நடந்தாக வேண்டும்.

கீழே ஓர் ஆரவாரம் கேட்டது.

மணப்பெண் அலங்காரம் முடிந்து வந்துவிட்டாள்.

'பார்...பார்...ஏ, மாப்பிள்ளைக்கு மறைக்காதீர்களப்பா!' என்று கேலியும் சிரிப்புமாக இருந்தது.

வருங்கால மாமியாரின் காலில் விழுந்து பணிந்த காயத்ரியை எழுப்பி மணையில் உட்கார வைத்தார்கள்.

அவள் கழுத்தில் ஒரு வைர மாலையை அணிவித்து விட்டு ஒரு ஜோடி வைர வளையல்களையும் மருமகளுக்கு அணிவித்தாள், அவளுக்கு மாமியாராகப் போகிறவள்.

அடுத்து நலுங்கு.

வரிசையாக மணமகன் வீட்டுப் பெண்கள் எல்லோரும் தாம்பாளத்தில் வைக்கப்பட்டிருந்த வளையல்களில் ஒன்றை அணிவித்து இதே சடங்குகளைச் செய்வார்கள்.

செய்து முடிப்பதற்குக் குறைந்தது ஒரு மணி நேரம் ஆகும்.

ஓசையின்றி நழுவிப்போய் இரண்டு மூன்று பேருக்கு நந்தகுமாரன் டெலிஃபோன் செய்தான்.

## 16

சென்ற காரியம் கிட்டத்தட்ட வெற்றியாகிவிட, நந்தகுமாரன் உற்சாகத்துடன் திரும்பி வந்தான். அவன் மண்டபத்துக்குள் வந்தபோது வளையல் போடுவதும், நலுங்கும் முடிந்து மூத்த பெண்மணிகள் காயத்ரிக்குக் கடைசியாக ஆரத்தி எடுத்து மணையை விட்டு அவளை எழுப்பிக் கொண்டு இருந்தனர்.

பந்தி தயார் நிலையில் இருந்தது.

சாருமதி குடும்பத்துப் பையன்கள் எல்லோருமே பரிமாறுவதை மேற்பார்வையிடச் சாப்பாட்டு அறையில் நின்றார்கள்.



மாப்பிள்ளை வீட்டுக்காரர்களைச் சாப்பிட வருமாறு உபசரித்த சிதம்பரம், அப்படியே சாருமதியிடம், "அம்மா சாருமதி, மற்றதை எடுத்த மாதிரிபந்தியையும் கொஞ்சம் தெளிவாகப் படம்பிடித்துவிடும்மா. இலையில் என்னென்ன பரிமாறி இருக்கிறது என்று தெரியும்படி... செலவைப் பாராமல் செய்திருக்கிறேன்... அது தெரிய வேண்டும் அல்லவா? அப்படிப் பார்த்து எடம்மா!" என்று கேட்டுக் கொண்டார்.

இலையில் வைப்பது அவளுடைய அண்ணனின் கை வரிசையும் அல்லவா?

கூடவே சசியும் மணமகனோடு சாப்பிடச் சென்றிருந்தான்.

சிதம்பரம்கேட்ட விதமாக வீடியோஎடுத்துவிட்டு காமிராவின் கண்ணைப் பார்த்துச் சசி சன்னமாய்க் கண் சிமிட்டியதை அந்தக் காமிராவின் கண்ணின் வழியாகவே பார்த்து முகம் சிவந்து வெளியே வந்தாள் சாருமதி.

தானும் தங்கையும் சாப்பிட்டுவிட்டுச் சீக்கிரமாக வீட்டுக்குப் போவதாகவும் காலையில் கல்யாண மண்டபத்துக்கே நேராக வந்துவிடுவதாகவும் மந்தாகினியிடம் சொன்ன நந்தகுமாரன் எல்லோரும் சாப்பிடச் செல்லும்போது தங்கையைக் கூப்பிட்டுப் பேச்சுக் கொடுத்தான்.

காலையில் எத்தனை மணிக்கு வர வேண்டும் என்பது போல உப்புச் சப்பற்ற பேச்சு.

அதை உணராமலே அண்ணனின் கேள்விகளுக்கு யோசித்துப் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் அழகி.

காமிராவைக் கழற்றி அதன் பைக்குள் சாருமதி வைப்பதை ஓரக்கண்களால் கவனித்து, "அடடா.." என்று கைகளை உதறினான் நந்தகுமாரன்.

"என்ன அண்ணா?" என்று அழகி கவலையுடன் கேட்டாள்.

"மறந்தே போனேன் பார். அந்தச் சாருமதி படம் பிடிப்பதைப் பார்த்து ஒரு பெரிய பணக்காரர் - சிங்கப்பூர்க் காரர் - அவர் வீட்டு விசேஷத்துக்கு அவளைத்தான் ஒப்பந்தம் பண்ண வேண்டும் என்று காத்திருக்கிறார். இருபதாயிரம் ரூபாய் முன் தொகையாகவே கொடுக்கப் போகிறாராம். இங்கே வெளியே சொன்னால் நான்,நீ என்று மொய்ப்பார்கள் என்று வாசலில் அவரது காரில் காத்திருக்கிறார். நான் அழைத்தால் என்னோடு பக்கவாட்டு வாசல்வரை வருவாளோ என்னவோ? நீ போய்க் கூட்டி வருகிறாயா? நீ கூட விஷயத்தைச் சொல்லாமலே அவளைக் கூட்டி வா," என்றான் அவன்.

"ஏண்ணா?"

"அண்ணனிடம் கேள்வி கேட்கக்கூடத் தொடங்கி விட்டாய் போல, இருக்கட்டும். ஆனால் நான் இப்போது தானே காரணம் சொன்னேன். சாருமதியோடுகூட வந்து படம் எடுப்பவர்கள் அவளிடம் வேலை பார்ப்பவர்கள் அல்ல, அவளை மாதிரியே சொந்தத் தொழிலாகப் பண்ணுகிறவர்கள். அவர்களுக்கு விஷயம் தெரிந்தால் சிங்கப்பூர்க்காரரைப் பிய்த்துப் பிடுங்கி இவளது வாய்ப்பைத் தட்டிப் பறித்துவிட மாட்டார்களா? அதனால்தான் சாப்பாட்டுப் பந்திக்காகக் காத்திருப்பதை விடக் காலாற நடக்கலாம் என்று மட்டும் சொல்லிக் கூட்டி வா. பிறகு விவரம் தெரிவிக்கலாம்."



சந்தேகமே படாமல் அந்தப் பேதைப் பெண்ணும் சந்தோஷமாகச் சாருமதியை நாடிச் சென்றாள்.

தன் புதிய சினேகிதிக்கு நல்ல வாய்ப்புக் கிடைக்கப் போகிறதே.

அண்ணன் சொல்லிக் கொடுத்தபடியே அழகி கூறவும், சாருமதியும் மறுப்புக்கூறாமல்கூட வந்தாள். கள்ளமற்ற அந்த அழகான பெண்ணிடம் அவளுக்குப் பிரியம் ஏற்பட்டிருந்தது ஒரு காரணம்.

அத்தோடு அவளுக்குமே அவ்வளவு நேரம் கூட்டத்தில் ஒளி விளக்குகளின் நடுவில் நின்றது அலுப் பாகத்தான் இருந்தது. மண்டபத்தின் பக்கவாட்டுப் புல் தரையில் நடப்பது, புத்துணர்ச்சி ஊட்டும் என்று எண்ணினாள்.

வாயில் பக்கமாகச் சென்றபடி, "சாரு! உனக்கு ஒரு சிங்கப்..." என்று தொடங்கிய அழகி, அதற்கு மேல் பேசுமுன், அவளுடைய அண்ணன் மூன்று பேரோடு வரவும், "இவர்களில் யார் சிங்கப்பூர்க்காரர் அண்ணா?" என்று அவனிடம் கேட்டாள்.

சாருமதி ஓரளவு தற்காப்புக் கலை கற்றவள்தான்.

ஆனால் சற்றும் எதிர்பாராதபோது மயக்க மருந்துடன் மூன்று பேர் சேர்ந்து மடக்கவும், அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. மயங்கித் தொய்ந்தவளை யாரும் பார்த்தால்கூடத் தெரியாதபடி மறைத்தவாறே கொண்டு போய்க் காரில் ஏற்றினர்.

பயத்தில் வெலவெலத்துப் போய், "என்ன அண்ணா..." என்று குரல் நடுங்கிய தங்கையின் வாயைப் பொத்தி அவளையும் காரினுள் இழுத்துப் போட்டான் நந்தகுமாரன்.

கார் பறந்தது.

அந்தக் கார் முதலில் சென்ற இடம் நந்தகுமாரின் வீடுதான்.

கார் அவனது வீட்டை அடையும் வரையிலும், நந்த குமாரன் தங்கையின் வாயிலிருந்து கையை எடுக்கவில்லை.

வீட்டை நெருங்கியதும் அவளது காதருகில் வாயை வைத்து, "இதோ பார். எனக்கு இருக்கும் ஆத்திரத்துக்கு நீ சத்தம் போட்டால் உன்னைக் கொல்லக்கூடத் தயங்க மாட்டேன். எனக்கு எதிராக இந்தக் கழுதையுடன் கூட்டு சேர்ந்து வேஷம் போட்டாயா? என்ன ஆயிற்று பார்த் தாயா? வீடு வந்து விட்டது. கையை எடுக்கப் போகிறேன். மூச்சு விடுகிற சத்தம்கூடக் கேட்கக்கூடாது. ஜாக்கிரதை!" என்று மிரட்டிவிட்டு அவள் வாயிலிருந்த கையை எடுத்தான்.

காரில் இருந்த மற்றவர்களிடம், "இவளை வீட்டில் விட்டுவிட்டு கொஞ்சம் பாடம் சொல்லிக் கொடுத்து விட்டு வருகிறேன். விளக்கை அணைத்துக் காரை ஒதுக்குப் புறமாக நிறுத்தி வையுங்கள்," என்று விட்டுக் காரில் இருந்து இறங்கி அழகியையும் இறங்கச் சொன்னான்.

வீட்டைத் திறந்து உள்ளே சென்றதும், "சாரு... சாருமதியை என்ன செய்யப் போகிறாய்? கொ...கொல்ல மாட்டாயே?" என்று அச்சமும் கவலையுமாகக் கேட்டாள் அழகி.

"நல்ல ஐடியாதான். ஆனால் அவளைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். உன் வாழ்க்கையில் அவள் இனிக் குறுக்கே வரமாட்டாள். அவளை அடியோடு மறந்து சசிகாந்தனை மணந்து அப்படி ஒரு பணக்கார வாழ்வை அமைத்து தரும் அண்ணனிடம் நன்றி மறக்காமல், நல்லபடியாக வாழ்க்கை நடத்து!" என்று அதிகாரமாக உத்தரவிட்டான் அண்ணன்.



"ஆனால் சசி அத்தான் சாருவைக் காதலிக்கிறாரே!" என்றாள் தங்கை அழுகுரலில்.

"அப்படியென்று அந்தக் கழுதை சொல்லிற்றா?" என்றான் அவன் ஆத்திரத்துடன். "அப்படி எதுவும் இல்லை. அவள் கண்ணில் படாவிட்டால் அவள் நினைவே அவனுக்கு வராது. உங்கள் திருமணத்துக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்."

"வேண்டாம்! எனக்கும் பிடிக்கவில்லை."

"தோலை உரித்து விடுவேன்!" என்றான் அன்பு அண்ணன். "அந்தப் பயல் சேது நினைவா? அதெல்லாம் நடக்காது."

"அண்ணா! எனக்குக் கல்யாணம் வேண்டாம். தயவு பண்ணிச் சாருவை விட்டுவிடு!" என்று கெஞ்சினாள் தங்கை.

"இனி நானே நினைத்தாலும் அது முடியாது. ஆனால் ஒன்று ஞாபகத்தில் வை. இது அது என்று அவளைப் பற்றி ஏதாவது உளறி வைத்தாயானால், நீதான் முதலில் மாட்டுவாய். நீதானே அவளைப் போய்க் கூட்டி வந்தாய்? போலீஸ் உன்னைத்தான் முதலில் பிடிக்கும். அப்புறம் தர்ம அடி, ஜெயில்."

முகம் வெளுத்து, "ஐயையோ! சாருவைத் தேடுவார்களே! நான் கூட்டிச் சென்றதை யாராவது பார்த்திருந்தால்? ஐயோ! விட்டு விடு, அண்ணா!" என்று தவித்தாள், அழகி.

"ஏய், வாயை மூடு. யாரும் பார்த்திருந்தால்தான் என்ன? கொஞ்ச நேரம் புல் தரையில் உலாவிக்

கொண்டிருந்தோம். நான் அண்ணனோடு வீட்டுக்குப் போய்விட்டேன் என்று சொல்லு. நானும் அதையே சொல்லுகிறேன். அப்புறம் நம்மிடம் எப்படிச் சந்தேகம் வரும்? நமக்கும் அவளுக்கும் என்ன விரோதம்? நாம் ஏன் அவளுக்குக் கெடுதல் செய்யப் போகிறோம்?"

"ஆனால் செய்துவிட்டாயே. விரோதம் இருக்கப் போய்த்தானே செய்தாய்!" என்று அழுதாள் தங்கை.

"மட்டி... மட்டி!" என்று அவளைப் பிடித்து உலுக்கினான் நந்தகுமாரன். "உனக்கு ராமாயணம் சொல்லிக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. அதனால் சொல்லுவதைக் குறுக்கே பேசாமல் கவனமாகக் கேள். நான் சொன்னது மற்றவர்கள் என்ன நினைக்கக்கூடும் என்பது பற்றி. மற்றவர்களைப்பொறுத்த வரையில் நமக்கும் அவளுக்கும் விரோதம் கிடையாது. அதுவும் அந்த சசிகாந்தன் முன்னிலையிலேயே சாருமதியுடம் நீ வழிந்ததால் அவனுக்கும் சந்தேகம் வராது. புரிகிறதா? நீ உளறிக் கொட்டா விட்டால் உன்னைப் போலீஸ் பிடிக்கவே பிடிக்காது. நினைவில் வைத்துக் கொள். அதனால் யார் கேட்டாலும் இப்படி.... அதாவது புல் தரையில் நடந்து கொண்டு இருக்கும்போது அண்ணன் வந்து கூப்பிட்டதால் கிளம்பிவிட்டேன். சாருமதி பற்றித் தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். வேண்டு மானால் மனதில் உருப்போட்டு வை. உருப் போட்டு விட்டுப் போய்ப் படுத்துத் தூங்கு. ஆனால் உளறினாயோ, நீ தொலைந்தாய். நினைவிருக்கட்டும்."

முகம் வெளுத்துப் போய் நின்ற தங்கையைப் பார்த்ததும், இவளை வேண்டிய அளவு பயமுறுத்தி ஆயிற்று என்ற திருப்தி ஏற்பட்டுவிட, "வா, வந்து கதவைத் தாழ் போட்டுக் கொள். நான்..." என்றவனுக்கு உடனே வேறு தோன்றியது.



உள்ளே போய்ப் பூட்டையும் சாவியையும் எடுத்து வந்தான்.

விழித்துக் கொண்டு நின்ற தங்கையிடம், "இல்லை! உன்னை நம்ப முடியாது. இப்போதெல்லாம் உனக்குத் திடீர்க் கிறுக்குப் பிடிக்கிறது. அத்தோடு நான் திரும்பிவர எவ்வளவு நேரம் ஆகும் என்றும் சொல்வதற்கு இல்லை. அதனால் நான் வெளியே பூட்டிக் கொண்டே போகிறேன். திரும்பி வரும்போது உன்னை எழுப்பத் தேவையிராது பார்," என்று கூறிக் கதவை வெளியே பூட்டிக் கொண்டு போய்விட்டான்.

சில வினாடிகளில் கார் கிளம்பிச் செல்லும் சத்தம் கேட்டது.

நெஞ்சுக் கூடு காலியாகிவிட்ட உணர்வுடன் கால்கள் துணியாய்த் துவள, அழகி தரையில் சரிந்தாள்.

அன்று மாலையில்தான் சசிகாந்தனோடு சாருவை இணைத்து, அவள் பாராட்டியது என்ன? இப்போது நடந்திருப்பது என்ன?

சாருவுக்கு மயக்கம் தெளியும்போது அவளை யல்லவா தப்பாக நினைப்பாள். உலாவலாம் என்று அழைத்துச் சென்றது அவள்தானே? அண்ணன் அவளையே ஏமாற்றியது சாருவுக்கு எப்படித் தெரியும்?

அதைவிடச் சாருவை இப்போது அண்ணன் என்ன செய்யப் போகிறான்?

அவளைக் கொலை செய்யும் எண்ணம் இருப்பதாக அழகிக்குத் தோன்றவில்லை. ஏனெனில், கொல்லப்

போகிறாயா என்று கேட்டதற்கு, நல்ல ஐடியா என்று புது விஷயம் போலச் சொன்னானே, அப்படியானால் அதுவரை அந்த எண்ணம் இல்லை என்றுதானே அர்த்தம்?

வேறென்ன செய்யக் கூடும்?

தீவிரமாக யோசித்த அழகியின் முகம், சட்டென வெளுத்துப் போயிற்று.

இப்படிக் கடத்தப்படும் இளம்பெண்கள் கடைசியாக எந்த மாதிரி இடங்களில் விற்கப்படுகிறார்கள் என்று அன்றுகூட டிவி செய்திகளில் சொன்னார்களே.

கடைசியில் சாருவுக்கா இந்தக் கதி! ஐயோ! தாங்க மாட்டாமல் அவள் செத்தே போவாளே.

அண்ணன் இவ்வளவு மோசமானவனா?

இன்றைக்குச் சாருவுக்கு இந்தக் கொடுமை செய்கிறவன், நாளைக்கு அவனுக்கு ஒரு தேவை ஏற்பட்டால் சொந்தத் தங்கையையும் விற்கமாட்டான் என்று என்ன நிச்சயம்?

ஒருவேளை சசி வீட்டுப் பணம், பணம் என்பதே அந்தப் பணத்தில் தானும் கை வைக்கலாம் என்றுதானோ? 'நன்றி மறக்காமல்' வாழச் சொன்னது... அந்த வீட்டுப் பணத்தை எடுத்து அவனிடம் கொடுக்க வேண்டும் என்றுதானா?

ஆமாம்! அப்படித்தான் இருக்கும். அப்படியேதான்.

இப்படிப்பட்டவன் சொல்லைக் கேட்டு நடப்பது எவ்வளவு ஆபத்தாக முடியக் கூடும்.

என்னவோ, அவன் சொல்படி நடக்காவிட்டால் போலீஸ் அவளைத்தான்பிடிக்கும் என்றானே? அண்ணன்



சொல்வது எல்லாம் பொய். அவனது சொந்த வசதிக்காக அவளை மிரட்டிப் பணிய வைக்கிறான்.

சாருவை மீட்பதற்கு உதவிசெய்தால், பாராட்டாமல் எப்படி ஜெயிலில் போடுவார்கள்,

அப்படியே ஜெயிலில் போட்டாலும்கூட, சாரு அவளை விடுவித்து விடுவாள்.

எப்படியும் சாவிலும் கேடான இந்தக் கதி, தன் சினேகிதிக்கு நேரவிடக் கூடாது என்று அழகி முடிவு செய்தாள்.

ஆனால் எண்ணியதை எப்படிச் செயல்படுத்துவது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

வீட்டில் ஃபோன் கிடையாது. வெளியே எங்காவது போய்ப் பேசலாம் என்றாலோ கதவைப் பூட்டிக் கொண்டு போய்விட்டான், பாவி.

கத்தி யாரையாவது கூப்பிடலாம் என்றாலோ, அக்கம் பக்கம் உள்ளவர்கள் எல்லோருமே அண்ணனுக்கு விரோதம்... அல்லது அவனுக்குப் பயந்தவர்கள். அவனை எதிர்த்து அவளுக்கு இந்த மாதிரி உதவி யாரும் செய்ய மாட்டார்கள்.

ஒன்றும் செய்யமாட்டாமல் திகைத்த அழகி தனக்குத் தெரிந்ததைச் செய்தாள்.

உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழுதாள்.

திருமண மண்டபத்தில் நந்தகுமாரன் எதிர்பார்த்ததை விட, விரைவிலேயே சாருமதியைத் தேடத் தொடங்கிவிட்டார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் உணவருந்தும்போது ஏதாவது சாக்கில் சாருமதி மீண்டும் வருவாளோ என்று

சசிகாந்தனுக்கு ஒரு நப்பாசை. அவள் வரவில்லை என்றதும் வேகமாக உண்டு முடித்துவிட்டு அவளைத் தேடி அவன் சென்றான்.

ஆனால் அவளைக் காணவில்லை என்றதும் தானாகச் சற்று நேரம் தேடிப் பார்த்தான்.

அவளோடுகூட வந்த மற்ற ஃபோட்டோ வீடியோ எடுப்பவர்களிடம் விசாரித்தான்.

சீக்கிரமே வீட்டுக்குப் போக வேண்டும் என்பதால், அடுத்த பந்திக்காகக் காத்திருக்கும் ஹாலுக்குஅப்போதே வந்துவிட்டதாக எல்லோரும் சொன்னார்கள்.

"பாத்ரூம் எங்கேயும் போயிருக்கிறாளோ என்னவோ?" என்றாள் தோழி ஒருத்தி.

தேடி வந்தவன் முகத்தில் ஏதோ உணர்ந்து, "கண்ணாமூச்சி ஆடுகிறாள் போல!" என்று சிரித்துவிட்டு, "நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்... ஏய், அந்தப் பந்தி முடிந்துவிட்டால் உள்ளே எனக்கு ஓர் இடம் போட்டு வையுங்களப்பா" என்று எழுந்து போனாள் ஒருத்தி.

"அங்கே காணோமே!" என்று அவள் திரும்பி வந்த போது, முதல் பந்தி முடிந்து அடுத்த பந்தி தொடங்கவும், "நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்," என்று அந்தத் தோழியைச் சாப்பிட அனுப்பி வைத்தான் சசி.

மாடிக்குச் சென்று பார்த்துவிட்டுத் திரும்பியதும் மந்தாகினி மகனிடம் வந்தாள். "சாருவைப் பார்த்தாயாடா? சொல்லிக் கொண்டு கிளம்பலாம் என்று சாப்பிட்டு வந்ததிலிருந்து அவளைத் தேடுகிறேன். காணவே இல்லை," என்று சொன்னபோதுதான் அவன் மனதில் முதல் துணுக்கம் உண்டாயிற்று.



நைசாக நழுவிச் சென்று காயத்ரியுடன் பேசிக் கொண்டிருந்தான் சிவானந்தன்.

அங்கேயே தங்குகிறவர்கள் தவிர, மற்ற மணமகன் வீட்டார் விடை பெற்றுக் கிளம்பிக் கொண்டிருந்தனர்.

மாப்பிள்ளைத் தோழனான சசிகாந்தன் மண்டபத்திலேயே தங்க, அவன் பெற்றோர் வீட்டுக்குப் போவதாக ஏற்பாடு.

"இங்கேதான் ஏதாவது வேலையாக எங்காவது இருப்பாள். நான் சொல்லிவிடுகிறேன்," என்று தாயை அனுப்பிவிட்டு மீண்டும் ஒருதரம் மண்டபம் முழுவதும் சுற்றி வந்தான் சசி.

வீட்டுக்குப் போயிருப்பாளோ என்று எண்ண வழியின்றி அவளது காமிராப் பை அங்கேயே இருந்தது.

அத்தோடு தன்னிடம்சொல்லாமல்போகமாட்டாள் என்பதும் அவனுக்கு.

அவனே தேடிக் கொண்டிருக்கையில், ரஞ்சன் வந்து, "சசி சார், எங்கள் சாரு எங்கே சார்? சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டு அவளை முதல் செட்டில் வீட்டுக்கு அனுப்பி விடலாம் என்று பார்த்தால் ஆளையே காணோம்!" என்று கேட்கவும் ரொம்பவே பதறிப் போனான்.

தானும் வெகுநேரமாகத் தேடுவதைச் சசிகாந்தன்கூற, ரஞ்சனுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது.

அதன்பின் ஒருவரிலிருந்து ஒருவராக எல்லோருமே சாருமதியைத் தேடலாயினர்.

காமிராப் பையை விட்டுவிட்டு அவளாக எங்கேயும் போகமாட்டாள் என்பதோடு, திரும்பிச் செல்ல நேரம்

ஆகும் என்பதால், சாரு தன் சன்னியையும் கொண்டு வரவில்லை.

பெரியதே என்றாலும் மிஞ்சி மிஞ்சி ஒரு திருமண மண்டபம், அதற்குள் எவ்வளவு நேரம் தேடுவது?

சின்ன இடம்கூட விடாமல் தேடிவிட்டு அக்கம் பக்கத்திலும் சற்றுத் தூரம் சென்று பார்த்துவிட்டு வீட்டுக்கு ஃபோன் செய்தார்கள்.

அங்கே ஒரு வேளை வந்திருக்கிறாளா என்றுதான்.

வீட்டுப் பெரியவர்கள் எல்லோரும் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்து கலங்கித் தவித்ததுதான் மிச்சம்.

தெரிந்த அளவில் கடைசியாகப் பச்சைப் பட்டுச் சேலை கட்டிய பெண்ணோடு பேசிக் கொண்டிருந்தாள் என்பதுதான் கடைசித் தகவல்.

திருமண வீட்டில் பச்சைப் பட்டுச் சேலை எத்தனை பேர் கட்டியிருப்பார்கள்.

அத்தோடு அந்தப் பச்சைப் பட்டுச் சேலைக் காரிக்கும், சாருமதி காணாமல் போனதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்பதுகூட யாருக்கும் தெரியவில்லையே.

இருந்த எல்லோருமே ஓரளவு செல்வாக்கு உள்ளவர்கள்.

வயதுப் பெண் காணவில்லை என்றால் கண்ட கண்டபடி அசிங்கமான கேள்விகள் வருமே என்று அனைவருக்குமே தயக்கம்தான்.

ஆயினும் வேறு வழியின்றிக் காவல்துறையில் அவரவருக்குத் தெரிந்த உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர்.



ஆனால் அவர்களும்தான்காற்றில் கரைந்தாற்போலக் காணாமல் போனவளை எப்படிக் கண்டுபிடிப்பார்கள்?

அவர்கள் முறையில் தேடியபோது மயக்க மருந்து நெடியுடன் ஒரு துணி கிடைக்க, சாருவுடைய தாயாருக்கு மயக்கமே போட்டுவிட்டது.

சாருமதியை மயக்கமூட்டி யாரோ கடத்தியிருக்கிறார்கள்.

யார்? ஏன்?

ஒன்றும் புரியாமல் எல்லோரும் திணறியபோது திருமண மண்டபத்து நிர்வாகி சசிகாந்தனைக் கூப்பிட்டார். "சார்! உங்களுக்கு ஃபோன். பெயர் அழகியாம்!" என்றார்.

## 17

முதலில் அழகியுடன் பேசச் சசிகாந்தனுக்கு விருப்பம் இல்லை. அண்ணன் கேட்கச் சொன்னான் என்று அசட்டுத்தனமாக எதையாவது கேட்டுக் கொண்டிருப்பாள்.

அதைக் கேட்கிற மனநிலையிலா அவன் அப்போது இருந்தான்.

அவனது உலகமே உடைந்து துகள் துகளாகச் சிதறிக் கொண்டு இருக்கும்போது இது என்ன தொல்லை? பேச மறுத்துவிட வேண்டியதுதான் என்று எண்ணும்போதே அன்று அவள் கரும்பச்சை நிறச் சேலை கட்டியிருந்தது நினைவு வந்தது.

அது அவளுக்கு அழகாக இருப்பதாகச் சாருகூடச் சொன்னாளே.

பாய்ந்தோடிச் சென்று டெலிஃபோன் கருவியை எடுத்து, "சாரு? சாருமதி எங்கே?" என்று பதட்டத்தை அடக்கப் பாடுபட்டபடி அவசரமாகக் கேட்டான் அவன்.

நாலு மாதங்கள் முன்புவரை சேதுவின் வாழ்வு ஒளி மயமாக இருந்தது. அழகியின் எழில், அப்பாவித்தனம், அமைதி எல்லாமே அவனுக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

மின்பொறியியலில் டிப்ளமோ வாங்கியிருந்தான். நல்ல வேலைதான். கூடவே முயற்சி உள்ளவன். மோட்டாருக்குக் காயில் சுற்றித் தனியாகக் கொஞ்சம் சம்பாதித்தான்.

அதனால் அழகி கிடைக்காமல் போவாளோ என்று அவன் எண்ணவும் இல்லை.

அதற்கேற்ப, நந்தகுமாரன் அவனை மறுக்கவும் இல்லை.

ஆனால் சுமார் நாலு மாதங்களுக்கு முன்பாக, "இனி இந்தப் பக்கம் வந்தால் காலை உடைத்து விடுவேன்!" என்றும் அதே நந்தகுமாரனே சொல்லிவிட்டான்.

அவன் இல்லாத நேரம் பார்த்துப் போய் அழகியிடம் கேட்டால், அண்ணன் சொல்லை மீற அவள் தயாராக இல்லை. அந்தச் சாதுப் பெண் மீறுவாள் என்று சேது எதிர்பார்க்கவும் இல்லை.

மனதளவில் ஒரு தேவதாசாக வாழ்ந்து கொண்டிருந்தான்.

என்ன ஒரு வித்தியாசம், தேவதாஸ் தன் வேதனையை மறக்கக் குடித்தான். இவன் தன் துன்பத்தை வேலையில் மறக்க முயலவே, வருமானம் பெருகியது. அவ்வளவே வேறுபாடு. வருத்தம் அப்படியே இருந்தது.



அந்த வழியே செல்லும்போது நந்தகுமாரன் இல்லாத வேளைகளில் வீட்டு ஜன்னல்பக்கம்போய் நிற்பான். அந்த வீட்டுக்குள் அழகி இருக்கிறாள் என்பதே திருப்தியாக, சற்று நேரம் நின்றுவிட்டுப் போய்விடுவான். ஏதாவது அரவம் கேட்டால், பாத்திரம் துவைப்பது, துணி துவைப்பது, வீடு கூட்டுவது இப்படி எந்தச் சத்தம் கேட்டாலும் மனம் நெகிழ்ந்து போவான்.

அன்றும் அதைப் போலப் போனவன்தான்.

கதவில் பூட்டைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது வீட்டுக்குள் யாரோ விசும்பும் சத்தம் கேட்டு அதிர்ந்து நின்றான்.

விட்டுக்குள் யாரோ அழுவது என்றால் அது அழகியாகத்தானே இருக்க முடியும்.

அவளுக்கு என்ன? மறுபடியும் அடித்தானா?

ராட்சசன். அவளை அழும்படி கொடுமை செய்து விட்டு, உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுப் போயிருக்கிறானே.

விரைந்து ஜன்னலருகே சென்று, "அழகி! என்னம்மா, ஏன் அழுகிறாய்?" என்று பரிவுடன் கேட்டான்.

சேதுவைக் கண்டதும், அவளுக்கு அழுகை அதிகமாயிற்று.

அவள் மேலும் அழவும், "என்னம்மா, உன் அண்ணன் அடித்தானா? வலிக்கிறதா?" என்று வருத்தத்துடன் வினவினான் சேது.

அண்ணன் என்றதும் அழகி விலுக்கென நிமிர்ந்தாள்.

அவசரமாக எழுந்து ஜன்னல் அருகே ஓடி வந்தாள்.

"சேது, அண்ணன் என்னை அடிக்கவில்லை. ஆனால் ஒரு பெண்ணைக் கடத்தி..." என்று தொடங்கி விவரம் சொன்னாள்.

"அவர்களுக்கு ஃபோன் செய்து இங்கே வரச் சொல்ல வேண்டும், சேது. அண்ணன் போகிற ஒன்றிரண்டு இடங்கள் எனக்குத் தெரியும். அங்கே போகச் சொல்லி... முதலில் அவர்களை இங்கே..."

"யாருக்கு... எந்த எண்ணுக்கு ஃபோன் செய்ய வேண்டும்?"

"சசி அத்தான் வீட்டுக்கு... ஐயையோ, அவர்கள் எல்லோரும் கல்யாண மண்டபத்தில் அல்லவா இருப்பார்கள்? மண்டபத்து நம்பர் எனக்குத் தெரியாதே!" என்று மீண்டும் பதறினாள் அழகி.

"கவலைப்படாதே. பக்கத்தில் என் நண்பன் வீடு இருக்கிறது. அங்கே போய் டைரக்டரியில் மண்டபத்து எண்ணைக் கண்டுபிடித்து வருகிறேன்," என்று திருமண மண்டபத்தின் பெயரைக் கேட்டுக் கொண்டு போனவன் விரைவிலேயே ஒரு செல்ஃபோனுடன் திரும்பி வந்தான்.

"என் நண்பனுடையது!" என்று சொல்லி, செல்லில் நம்பரைத் தட்டி, அவளிடம் கொடுத்தான். "இந்தா, நீயே பேசு."

அழகியுடன் பேசி முடித்துவிட்டுச் சசிகாந்தன் திரும்பிச் சென்றபோது ஆவலும் பயமுமாக எல்லாக் கண்களும் அவனையே நோக்கின.

மற்றவர்கள் எதுவும் கேட்கு முன்னர் அவனே, "ஒரு சின்னத் துப்புக் கிடைத்திருக்கிறது. அதை வைத்து முயற்சிக்க வேண்டும்," என்று சுருக்கமாக விவரம் சொன்னான்.



"சாருமதி கிடைக்கும்வரை - குறைந்தபட்சம் நந்தகுமார் நம் கையில் சிக்கும்வரை - எதையும் காட்டிக் கொள்ளக்கூடாது. அதிகக் கூட்டமும் வேண்டாம். அவன் அறியாத வண்டி ஒன்று..." என்றவனை இடையிட்டு "என் வண்டிகளில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள், தம்பி," என்றார் சிதம்பரம்.

சாதாரண உடை அணிந்த போலீசார் கொஞ்சம் பேர் அந்தப் பகுதியில் வெவ்வேறு திசையாக ஊடுருவ, சிதம்பரத்தின் பழைய கார் ஒன்றில் நிகிலன், ரஞ்சன் சகிதம் கிளம்பிச் சென்று அழகியின் வீட்டுக்குச் சற்றுத் தொலைவிலேயே ஒரு மர நிழலின் இருளில், சசிகாந்தன் காரை நிறுத்தினான்.

தெரு விளக்கின் ஒளி விழாதபடி, ஓரமாகப் பதுங்கிப் பதுங்கி ஆனால் வேகமாக நந்தகுமாரின் வீட்டை அவர்கள் நெருங்கிக் கொண்டிருந்தபோது அவர்கள் கண் முன்னே ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

நந்தகுமாரனின் வீட்டு முன்னே, மெதுவே ஒரு கார் வந்து நிற்க, அதிலிருந்து சில ஆண்கள் இறங்கினர். அவர்களில் ஒருவன் குனிந்து உள்ளிருந்த ஒரு பெண்ணை இழுத்துத் தோளில் போட்டான். மற்றவர்கள் முன்னே செல்லும்வரை அவன் தோளில் தொய்ந்து கிடந்தாள் அந்தப் பெண். திடுமென அவளைத் தூக்கியிருந்தவன் அலறிக் கொண்டு கீழே சரிய, அவள் துள்ளிக் குதித்து ஓடத் தொடங்கினாள்.

நந்தகுமாரன் மூன்று பேரோடு சேர்ந்து வந்தபோதும், சாருமதி அதைப் பெரிதாக நினைக்கவில்லை. திருமண மண்டபம், கூட அழகி, அத்தோடு நந்தகுமாரனும் அவளைப் பொறுத்தவரையில் தங்கைப் பாசம் உள்ள அண்ணன், அவ்வளவுதானே?

அச்சப்படவோ, எச்சரிக்கையோடிருக்கவோ என்ன அவசியம்?

எனவே, அவள் சாதாரணமாக நந்தகுமாரனைப் பார்த்துப் புன்னகை புரியத்தான் தொடங்கினாள்.

ஆனால் வினாடிக்குள் மூன்று பேருமாக அவளைச் சூழ்ந்து பற்றிக் கொண்டு மயக்க மருந்து நனைத்த துணியை அவள் முகத்தில் வைத்து அழுத்தவும் அவளால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று.

அப்போதும் மலைக்கள்ளன் கதையும் படித்துப் படமும் பார்த்த நினைவில் முடிந்தவரை மூச்செடுப்பதை நிறுத்தித் தொய்ந்து விழுந்தாள்.

ஆனால் அவர்களுக்குள் ஏதோ பேசியவாறு மயக்க மருந்துத் துணியை அகற்றாமலே அவளை இழுத்துப் போகவும் தன்னை மீறி அந்த நெடியை உள்ளிழுக்க வேண்டியதாயிற்று.

அதுவே போதுமானதாக, அவளுக்கு மெய்யான மயக்கமும் வந்துவிட்டது.

ஆனால் நந்தகுமாரன் குழுவினர் நினைத்த அளவு ஆழ்ந்த மயக்கம் அல்ல. வந்த மயக்கம் அதிக நேரம் நீடிக்கவும் இல்லை.

ஓர் இடத்தில் கார் நின்று இவளுக்குப் பாடம் சொல்லிவிட்டு வருகிறேன் என்று யாரோ இறங்கிப் போனது கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலக் கேட்டது.

திரும்ப வந்து ஏறி, 'உள்ளே வைத்துப் பூட்டி விட்டேன், கழுதை! கூடப் பிறந்த என்னை ஏமாற்றப் பார்த்தாளே, எல்லாம் இந்த நாயின் பாடம்!' என்றான் அவன்.



மீண்டும் கார் குலுங்கிக் குலுங்கிச் சென்றது.

பிறகு யாரோ ஊரில் இல்லை. அதுதான் கவலை என்று பேசிக் கொண்டார்கள். ஊரில் இருந்தால் உடனடியாக மொத்தக் காசும் வந்து விடுமாம்.

அதற்குள் சாருமதிக்கு மயக்கம் அடியோடு அகன்று விட்டது. ஆனால் அதன் அசதி இருந்ததால் கைகால்கள் வலுவிழந்து துவண்டன.

எனவே அசையாமல் கிடந்து மெதுவான பெரிய மூச்சுகளால் ரத்தத்தில் கலந்திருந்த மயக்க மருந்து முழுவதையும் வெளியேற்றுவதில் முனைந்தாள் அவள்.

கண்ணையும் திறக்கவில்லை.

இந்த நாலு பேரையும் வெல்ல வேண்டுமானால் முழுப் பலமும் தேவைப்படுமே. அதுகூடப் போதுமோ என்னவோ?

மேலும் அவர்கள் பேச்சிலிருந்து நடந்த விவரம் முழுவதும் தெரிந்தது. அது மட்டுமின்றி அவளுக்காக நந்தகுமாரன் திட்டமிட்டிருந்த கொடிய தண்டனையும் தெரிந்தது. அதன் காரணமும்.

சசிகாந்தனின் பணத்தை அவன் அனுபவிக்க விடாமல் கெடுக்கப் பார்த்தாளாம்.

கடைசியில் அவனுக்குத் தங்கைப் பாசமும் இல்லையே.

சே... இவனிடம் இருந்து அழகியை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று எண்ணும்போதுதான், அவர்களிடமே மாட்டியிருந்த தன் ஆபத்தான நிலைமை, சாருமதிக்கு நன்றாகப் புரிந்தது.

முதலில், அவள் தப்பினால் அல்லவா, அழகியைக் காப்பாற்ற முடியும்?

தப்புவதற்கான வாய்ப்புக்காக அவள் கவனத்துடன் காத்திருக்க, கார் இங்கும் அங்குமாக வட்டமடித்தது.

நாலு இடங்களில்காரைநிறுத்திவிட்டு, நந்தகுமாரன் மட்டும் இறங்கிப் போய் விசாரித்துவிட்டு வந்தான்.

சென்னையில் நாலு குடித்தனங்கள் வைத்திருந்த அந்த மனிதன் நாலு வீட்டிலும் இல்லையாம். மும்பைக்குச் சரக்கு சப்ளை பண்ணப் போனவன் இன்னமும்திரும்பி வரவில்லை என்ற ஒரே பாட்டையே நாலு வீடுகளிலும் பாடினார்கள்.

அவனது தனியிடம் இன்னொன்றும் இருந்தது. அங்கே இறக்கி விட்டுப் போவதாக நந்தகுமாரன் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான்.

"சாப் வராமல் ஒன்றும் நடக்காது!" என்று விரட்டி அடித்து விட்டார்கள். "சாப்பை நாளை வந்து பார். அதுவரை இந்தப் பக்கம் வராதே!"

ஒரு வகையில் அது அவளது நல்ல காலமாகத் தோன்றினாலும் காரை விட்டுக் கீழே இறங்கினால்தான் தப்ப முயற்சிக்க முடியும். மற்றப்படி இருபுறமும் அண்டை கொடுத்த மாதிரி இருதடியன்கள் உட்கார்ந்திருக்கும் போது அவள் தானாக அசைவதுகூட ஆபத்தல்லவா?

மறுநாள் வரை சாருமதியை என்ன செய்வது என்று எல்லோருமாக யோசித்து, கடைசியாக நந்தகுமாரின் வீட்டிலேயே அவளை ஒளித்து வைப்பது என்று முடிவு செய்தார்கள்.



சாருமதிக்கு மயக்க மருந்து கொடுத்துக் கொண்டே இருப்பது. அழகியை மிரட்டினாலேபோதும். எனவே அவன் வீடுதான் வசதி.

நந்தகுமாரின் வீட்டின் முன் கார் நின்றதும், "இறங்குவதற்கு முன் இன்னொரு டோஸ் மயக்கம் கொடுத்துவிடு. ஆனால் ரொம்ப வேண்டாம். அப்புறம் மண்டையைப் போட்டு விட்டால் ஆபத்து!" என்று ஒருவன் சொல்லவும், ஒரு பெரிய மூச்சை எடுத்துக் கொண்டு சாருமதி தயாராக இருந்தாள்.

மயக்க நெடியுள்ள துணி மூக்கை விட்டு அகன்ற பிறகுகூட, சற்றுநேரம் அவளால் மூச்சுப்பிடிக்க முடிந்தது.

அவள் எதிர்பார்த்த தருணமும் வந்தது.

அவளது எதிர்ப்பை எதிர்பாராமல் அலட்சியமாகத் தூக்கிக் கொண்டு போனவனின் இரு காதுகளையும் சேர்த்து ஓங்கிக் குத்தியவள், அவன் வலி தாளாமல் சரியவும், அவன் கீழ் விழுந்து விடாமல் குதித்து ஓடலானாள்.

"ஏய்..." என்று அவளைப் பின் தொடர்ந்தவர்களைப் போலீஸ் சுற்றி வளைத்துப் பிடிக்க, எதையும் கவனியாமல் மானாய்ப் பாய்ந்தவளைச் சசிகாந்தன் தடுத்து நிறுத்தினான்.

ஒரு கணம் விடுபடப் போராடியவள், "ஷ்...சாரு!" என்ற குரலில் அப்படியே தொய்ந்தாள்.

அவளை அணைத்தவாறு காருக்கு அழைத்துச் சென்றவன், ரஞ்சனிடம் ஏதோ சொல்ல, அவன் போய் அதற்குள் போலீசாரால் திறக்கப்பட்டிருந்த நந்தகுமாரன் வீட்டிலிருந்து அழகியை அழைத்து வந்தான்.

"எல்லோரும் மற்ற கார்களில் மண்டபத்துக்கு வந்து விடுங்கள். நான் டாக்டரிடம் சாருமதியைக் காட்டிவிட்டு அங்கேயே வந்து விடுகிறேன்," என்றவன் யாருடைய ஒப்புதலுக்காகவும் காத்திராமல் அவளை மட்டும் ஒரு காரில் ஏற்றிக் கொண்டு கிளம்பிவிட்டான்.

மெய்யாகவே சசிகாந்தன் அவளை அழைத்துப் போனது மருத்துவரிடம்தான்.

குடும்ப வைத்தியரின் மருத்துவமனையில் அவளைப் பரிசோதித்து ஒன்றும் இல்லை என்ற பிறகே சாருமதியைத் தன் காலில் நடக்க விட்டான்.

பிறகும், "உன்னை எங்கேயும் கூட்டிப் போகவே மன மில்லை. ஆனால் எல்லோரும் கவலையோடு காத்திருப் பார்கள். அதனால்... ம்... போகலாம்..." என்று மண்ட பத்துக்கு அழைத்துப் போனான்.

செல்லும் வழியில் தாங்கள் எல்லோரும் அங்கே வந்த விதம் பற்றி அவளிடம் கூறினான். "அழகிக்குத்தான் நாம் எல்லோரும் நன்றி சொல்ல வேண்டும். ஆனால் நீ அவளைத் தப்பாக எண்ணியிருப்பாயே என்று கலங்கிக் கொண்டு இருக்கிறாள்!" என்றான்.

"இல்லையே, அவளை நந்தகுமார் எப்படி ஏமாற்றி னானோ என்றுதான் எண்ணினேன். பற்றாததற்கு அவர் கள் பேச்சிலேயே எனக்கு எல்லாம் புரிந்து போயிற்றுு. அந்த மயக்க மருந்தை நான்..." என்று நிமிர்ந்து உட்கார்ந்து தன் விவரம் சொல்லத் தொடங்கினாள் சாருமதி.

காரை நிறுத்திக் கையை நீட்டி அவளை இழுத்துத் தன் தோளில் மீண்டும் சாய்த்துக் கொண்டு மறுபடியும் காரை ஓட்டத் தொடங்கினான் சசிகாந்தன்.



"இப்படி இருந்து கொண்டே சொல்லு, சாரு. சற்று நேரம் உலகமே சூன்யமாகி விட்டது போல இருந்ததா? நீ கொஞ்சம் நகர்ந்து போனால்கூடக் கஷ்டமாக இருக்கிறது."

தலை திருப்பி அவனைப் பார்த்துவிட்டு, அவளும் வாகாகச் சாய்ந்து கொண்டு, சற்று நேரம் கண்மூடிப் பேசாதிருந்தாள்.

மீண்டும் அவள் பேசத் தொடங்கச் சற்று நேரம் ஆயிற்று.

சாருமதி வந்து விட்டாள் என்றதும், "சாரும்மா!" என்று கதறிக் கொண்டு ஓடிவந்த அன்னை அவள் சசிகாந்தனின் தோளில் சாய்ந்து நின்ற விதத்தைக் கண்டு திகைத்து நின்றாள்.

பெரியவர்கள் வாயடைத்து நிற்க, "ஏய் சாரு, என்னடி இது?" என்று நிகிலன் வியந்து வினவினான்.

"ஹைய்யோ! இது உங்களுக்குத்தான் நிகிலண்ணா அதிசயம். விஷயம் ரொம்ப நாளாக நடக்கிறது" என்றான் ரஞ்சன். பெரிதாகக் கதை சொல்லும் பாவனையோடு, "அன்று மாலைக் கடையில் தொடங்கி இவர்கள் வீட்டு நிச்சயத்தில் சாரு வண்டியைக் கொடுத்து..." என்று வளவளவென்று அளக்கத் தொடங்கினான்.

"ஆனால் உங்கள் பெற்றோர்கள் ஒப்புவார்களா?" என்று பெரியவராக விசாரித்தார் சுந்தரகணபதி.

"என் மனம் என் பெற்றோருக்கு முதலிலேயே தெரியும். விட்டால் அன்றைக்கு முதல் தடவையாகச் சாருமதி எங்கள் வீட்டுக்கு வந்தபோதே என் அம்மா அவளுக்குப் பட்டுச் சேலை பரிசு கொடுத்திருப்பார்கள். மிரட்டி விரட்டி விடாதீர்கள் என்று நான்தான் தடுத்து வைத்திருந்தேன்."

வியப்புடன் அவனைப் பார்த்தாள் சாருமதி. அன்று தட்டில் இருந்த அந்தச் சேலை அவளுக்குத்தான்.

அது மட்டுமல்ல, ஏதோ புரியாத மாதிரி அவளுக்கு மனம் குழம்பியதும் இதனால்தான்.

பெரியவர்கள் இருவரும் ஆர்வத்தில் அவ்வப்போது வார்த்தையை விட்டுவிட, அவளுக்குத் தெரியாமல் ஒருவர் மாற்றி ஒருவர் சரிப்படுத்த...

நினைக்கையில் தன்னையறியாமல் கன்னம் குழியப் புன்னகை பூத்தாள் அவள்.

முதல் ஆரவாரம் அடங்கியதும், அழகி மெல்ல அருகில் வந்தாள். "என்னைத் தப்பாக எண்ணவில்லையே சாரு?" என்றாள் கண்ணீருடன்.

"சேச்சே!" என்று அவள் கையைப் பற்றித் தன்னருகே இழுத்துக் கொண்டாள் சாருமதி. "உன் அண்ணனிடம் எப்படி ஏமாந்தாயோ, அவரிடம் இருந்து உன்னை எப்படிக் காப்பாற்றுவது என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தேன். உன்னை நான் எப்படித் தப்பாக நினைப்பேன் அழகி?" என்று பிரியமாகப் பேசினாள் சாருமதி.

"அழகியும் சேதுவும் இல்லாமல் உன்னைக் கண்டு பிடித்திருக்கவே முடியாது, சாரு!" என்றான் சசிகாந்தன்.

"நான் சொன்னேனே, சாரு," என்று சற்று ஒதுங்கி நின்ற சேதுவை அழைத்து அறிமுகம் செய்து வைத்தாள் அழகி.

"அழகி என் தங்கை மாதிரி. இப்போதும் என் அம்மா விடம்தான் அவளைக் கூட்டிப் போகப் போகிறேன். மாமனாராக என் தந்தையும் மைத்துனனாக நானும்



உங்கள் தொழிலுக்குத் தேவையானதைச் செய்வோம்," என்றான் சசிகாந்தன்.

"எனக்கு அழகி கிடைத்தால் போதும். மற்றதை நானே பார்த்துக் கொள்வேன்," என்று தன்னம்பிக்கை யோடு கூறி அழகியைப் பார்த்து முறுவலித்தான் சேது.

வெளிப்படையாகச் சொல்லாமல், மற்றவர்கள் தங்களுக்குள் உரையாடுவதுபோலக் காட்டி, இங்கித மாய்ச் சசி - சாருவைத் தனியே பேசவிட்டார்கள்.

"ஆன்ட்டி சேலை தந்தால் ஏன் தடுத்தீர்கள்? நான் என்னென்னமோ எண்ணினேன் தெரியுமா?" என்றாள் சாருமதி சிணுங்கலாக.

"என்ன செய்வது? நீதான் பெரிய பிகு பண்ணினாயே, தனியாகப் பேச வசதியாக இருக்கும். மாலையில் வா என்று கூப்பிட்டால் முகத்தில் அடித்தாற் போல முடியாது என்றாயே?"

"பின்னே? ஓர் அன்னியப் பெண்ணை இருட்டிய பிறகுகூட அலைய வா என்பதா? நீங்களே சொல்லுங்கள்," என்றாள் அவள், அப்போது சிறு கோபத்துடன்.

"அன்னியமாக நினைத்தால்தானே? உள்ளூர ஓர் ஈர்ப்பில் வந்தேன். போட்டோ கேசட் பார்த்ததும் உனக்கும் அதுபோலத்தான் என்று எண்ணி உரிமையாகப் பேசினால் திருப்பிக் கொண்டாய். சரி, இவளுக்கு லேசாக ஏதோ பொறி தட்டியிருக்கிறது. அதை ஊதிப் பெரிதாக்க வேண்டும். அதுவரை அடக்கி வாசிக்க வேண்டும் என்று எண்ணினேன். பார்த்தால் அப்போதே வெளிப் படையாகச் சொல்லியிருக்க வேண்டும் போல."

"எனக்கும் முதலிலேயே ரொம்பவே நிச்சயம்தான். மற்றப்படி இப்படி ஆல்பம் செய்திருக்க மாட்டேன்.

ஆனால் நீங்கள் இருட்டிய பிறகு கூப்பிட்டதும் கஷ்டமாகிவிட்டது. ஒரேதவிப்பு. அப்புறமாக நீங்கள் யோசியாமல் சொல்லி விட்டீர்கள். அப்படி இப்படி என்று உங்களுக்காக என்னுடனே வாதாடி என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்."

"சே... எத்தனை நாட்களை வீணாக்கிவிட்டோம். முன்பே மனம் விட்டுப் பேசியிருந்தால் இதற்குள் நம் திருமணத்தையும் நடத்தியிருக்கலாம். இன்னும் எத்தனை நாட்கள் காத்திருக்க நேருமோ?" என்றவன், அவள் காதருகில் குனிந்து, "உன்னை விட்டுப் பிரிந்து வீட்டுக்குப் போவதே முடியாது போல இருக்கிறது. அப்படியே கைப்பிடிக்குள் வைத்திருக்க வேண்டும் போல... கட்டிப் பிடித்து முத்தமிட வேண்டும் போல... ஆனால் ஹூம்..." என்று சோகம் காட்டிப் பெருமூச்சுவிட்டான் அவன்.

சாருமதியின் முகம் பூரிப்பும், வெட்கமுமாகச் செக்கர் வானமாகச் சிவக்க, திடுமென ரஞ்சனின் குரல் உரத்துக் கேட்டது. "ஆமாம் இவர்கள் திருமணத்துக்கு யார் வீடியோ எடுப்பது?"

திகைத்த ஒரு கண நேரத்து அமைதிக்குப் பின், "கடவுளே! நீ வேறு நினைவுபடுத்திவிடாதேப்பா... அப்புறம் அவள் ஜரிகைச் சேலையோடு வீடியோ காமிராவில் படமெடுக்கப் போய்விட்டால் தாலி கட்டப் பெண்ணுக்கு நான் எங்கே போவது?" என்று சசிகாந்தன் பயந்த பாவனையில் கேட்க, எல்லோருமே நகைக்கத் தொடங்கினர்.

★★★